கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

252

மாசி
01.02.2025

100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



அருண்மொழிவர்மன்/ அல்அஸூமத்/ சஹ்னாஸ் பேகம்/ கி.நடராசா/
ஏ.எஸ்.சற்குணராஜா/ இராஜினிதேவி சிவலிங்கம்/ இ.இராஜேஸ்கண்ணன்/
கொற்றை பி.கிருஷ்ணானந்தன்/ நா.நவராஜ்/ ஐங்கரன் விக்கினேஸ்வரா/ விமல்பரம்/
ந.இரவீந்திரன்/ மு.ற.அஸ்ரம் / செல்வகலா/ வதிரி சி.ரவீந்திரன்/ எஸ்,ஏ.கப்பார்/
எஸ்.சுடர்நிலா/ செம்பாட்டான்/ கந்தையா பத்மானந்தன்/ க.பரணீதரன்/ தனேஸ்வரன்/
கோகிலா மகேந்திரன்/ தமிழ்க்கவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2025 - மாசி (01.02.2025)

# பொருளடக்கம்


**சிறுகதைகள்**

அல் அஸூமத் - 06
இராஜினிதேவி சிவலிங்கம் -15
எஸ்.ஏ.கப்பார்- 30

**கவிதைகள்**

சஹனாஸ் பேகம் -23
மு.ற.அஸ்ரம் -28
தன.தனேஸ்வரன்- 25
கந்தையா பத்மானந்தன்-31
வதிரி சி.ரவீந்திரன் - 31
செம்பாட்டான் - 32
எஸ்.சுடர்நிலா - 32
செல்வகலா - 34

**அஞ்சலிக்கவிதை**

குழந்தை ம.சண்முகலிங்கம்
- நா.நவராஜ் - 23

**அஞ்சலிக்கட்டுரைகள்**

டேவிட் லிகோரி
- ஐங்கரன் விக்கினேஸ்வரா - 24

மகாலிங்கம் பத்மநாதன்
- விமல் பரம் - 25

அந்தனி ஜீவா
- வதிரி சி.ரவீந்திரன் -29

நா.யோகேந்திரநாதன்
- க.பரணீதரன் -33

**கதை இல்லாக்கதைகள்**

கொற்றை பி. கிருஷ்ணானந்தன் -22


**தொடர் நாவல்**

தமிழ்க்கவி - 37

**கட்டுரைகள்**

**பெரியாரின் எழுத்துக்களும் காப்புரிமையும்**
அருண்மொழிவர்மன் - 03


பருவ இதழ்ப் பகுதி
பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்






**பழையதும் புதியதும்**
கி.நடராசா - 11

**"ராணி" சிங்களத்திரைப்படம் இலங்கை அரசியலின் மறுபக்கப்பார்வை**
ஏ.எஸ்.சற்குணராஜா- 14

**இலக்கியத்திறனாய்வில் உளவியல் கண்ணோட்டம்: கலாநிதி த.கலாமணியின் திறனாய்வு நோக்குக் குறித்த ஒரு வெளிப்பாடு**
இ.இராஜேஸ்கண்ணன் - 18





**நேற்றில் கரைந்தோடும் இன்றிலிருந்து - 2**
ந.இரவீந்திரன் - 26

**முடிவைத்தொடுவாய் முயன்று - 14**
கோகிலா மகேந்திரன் - 35


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

**2025 மாசி இதழ் – 252**



**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**ஆசீர்வதிப்பவர்**
கலாநிதி த.கலாமணி



**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.



**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா
தில்லைநாதன் கோபிநாத்



**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி – 100/= ஆண்டுச்சந்தா – 3000/=
வெளிநாடு – $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



## ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
– பாரதிதாசன்–

## மூத்த ஆளுமைகளின் தொடர் இழப்பும் ஈழத்து எதிர்கால இலக்கியமும்

மனிதனாகப் பிறப்பவன் என்றோ ஒருநாள் மடிவான் என்பது நாம் அனைவரும் அறிந்த நியதி. ஈழத்து இலக்கியத்தை இன்று உலகம் பேசும் அளவிற்கு வளர்த்து சென்றவர்கள் நமது மூத்த எழுத்தாளர்களே. எத்தனையோ தலைசிறந்த எழுத்தாளர்கள், சஞ்சிகையாளர்கள், பத்திரிகை ஆசிரியர்களை இழந்திருக் கின்றோம். அவை இடையிடையே ஏற்படுகின்ற இழப்புகளாகவே விளங்குகின்றன. ஆனால் அண்மைக்காலமாக எமது மிகப் பெறுமதி வாய்ந்த பல எழுத்தாளர்களை வயது முதிர்வு காரணமாக தொடர்ந்து இழந்து கொண்டிருக்கின்றோம். இந்த ஆண்டு ஆரம்பித்ததில் இருந்து ஒரு மாத இடைவெளியில் அந்தனிஜீவா, நா.யோகேந்திர நாதன், குழந்தை ம.சண்முகலிங்கம், டேவிட் லிகோரி, மகாலிங்கம் பத்மநாதன் போன்றோரை இழந்து நிற்கின்றோம். மலைய இலக்கிய வரலாற்றில் அந்தனி ஜீவாவின் இடம் தனித்துவமானது. மலையக மக்களின் பிரச்சினைகளை மலையக இலக்கிய ஆளுமைகளை வெளிக் கொண்டு வந்ததோடு மலையக இலக்கிய வளர்ச்சியில் கொழுந்து சஞ்சிகையை வெளியிட்டு மிகப் பெரிய மலையக இலக்கிய வளர்ச்சியை கண்டடையச் செய்தவர் அந்தனி ஜீவா.

இறுதிக்கட்டப் போரின் சாட்சியமாய் விளங்கத்தக்க 3 நாவல்களைப் படைத்தவரான நா.யோகேந்திரநாதன், போராட்ட கால நாடக ஆற்றுகையாளர்களில் மிகவும் பிரதானமானவர். ஒடுக்கப்பட்ட மக்களுக்காக பல்வேறு சாதி எதிர்ப்புப் போராட்டங்களில் பங்கு கொண்டவர்.

குழந்தை ம. சண்முகலிங்கம் ஈழத்து நாடக வரலாற்றின் முதன்மையான நாடக ஆசிரியர். அவர் யாருடனும் ஒப்பிட முடியாத மிகப்பெரிய ஆளுமை. ஈழத்து நாடக வரலாற்றை புதியதொரு கோணத்தில் பயணிக்கச் செய்ததோடு தன் ஆளுமைத் திறனால் ஈழத்து நாடகங்களை வளப்படுத்தியவர்களில் முதன்மையானவர். ஈழத்து நாடக வரலாற்றில் இவரது காலம் பொற்காலம் என்று கூறலாம். இவர் உருவாக்கிய விழுதுகளோ பல. டேவிட் லிகோரி என்ற அற்புதமான பதிப்பாளர் யாழ்ப்பாண மீரா பதிப்பகத்தின் ஊடாக பலரது சிறுகதைகள், நாவல்கள், குறுநாவல்களை வெளியீடு செய்து வந்தவர். போர்காலத்தில் இவரது வெளியீட்டு முயற்சிகளை நினைக்கும் போது வியப்பாக இருக்கின்றது. இந்தப் பதிப்பாளரை வாழும் போது கொண்டாட வில்லை என்ற ஏக்கம் ஜீவநதிக்கு உண்டு. மகாலிங்கம் பத்மநாதன் நல்லதொரு நாவலைத் தந்த படைப்பாளி.

இவ்வாறு பலரை அண்மைக்காலங்களில் இழந்து நிற்கின்றோம். இவர்களது இடத்தை ஈடுசெய்யக்கூடிய வகையில் புதிய படைப்பாளர்கள் உருவாகி வருகின்றார்களா என்பது கேள்விக்குரியதாகவே இருக்கின்றது. புதிய படைப்பாளர் கள் வரவு மிகக்குறைவாகவே இருக்கின்றது. புதிதாக எழுத வருபவர்கள் பலர் கவிதைக்குள் தமது அறிவை மட்டுப்படுத்தி விடுகிறார்கள். எமது இலக்கியம் தொடர்ந்து வளர்ச்சி அடைய இளம் எழுத்தாளர்களது வரவு மிக அவசியமானது. இலக்கியக் கூட்டங்களில் இன்று இளம் படைப்பாளர்கள் வரவு மிகக் குறைவாகவே இருக்கின்றது. எதிர்காலம் இளம் எழுத்தாளர்கள் கைகளில் என்பதை மறந்து விடாதீர்கள்.


– க.பரணீதரன்


ஜீவநதி கிடைக்கும் இடங்கள் / விற்பனையில்உதவும் நல்லுள்ளங்கள்
பரணீ புத்தகக்கூடம் - நெல்லியடி
புத்தகக் கூடம் - திருநெல்வேலி
பூபாலசிங்கம் - செட்டித்தெரு, கொழும்பு
அ.யேசுராசா, நா.நவராஜ், சி.ரமேஷ், கந்தர்மடம் அ.அஜந்தன், சோ.தேவராஜா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெரியாரின்

## எழுத்துகளும் காப்புரிமையும்

அருண்மொழிவர்மன்

“பெரியாரின் எழுத்துக்களை ஏன் நாட்டுடைமை ஆக்கிவிடவில்லை? அவற்றை ஏன் பதுக்கி வைக்க வேண்டும்? உண்மைகள் வெளிவந்து விடும் என்பதாலா?” என்ற கேள்வியை நண்பர் ஒருவர் என்னிடம் கேட்டிருந்தார். சீமானின் திட்டமிட்ட அவதூறுகளில் ஒன்றினை அப்படியே நம்பிக் கொண்டே நண்பர் என்னிடம் கேள்விக்கேட்கின்றார் அவருக்கான தனிப்பதிலாக இல்லாமல் இந்தக் கேள்வி இருக்கக் கூடிய பலருக்குமான விளக்கமாக இதுபற்றிச் சற்றே பகிர்கின்றேன்.

எவரேனும் ஒன்றைச் சொன்னால் அதை அப்படியே ஒப்பிக்காமல் சிறிதளவேனும் ஆராய்ந்து முடிவெடுத்தலே பகுத்தறிவு. அதன்படி சீமான் சொல்வதை அப்படியே நம்பாமல் தர்க்கபூர்வமாக யோசித்தால், அது உண்மை தானா என்று தேடினாலே, பகுத்து ஆராய்ந்தாலே, இப்படிச் சீமான் சொல்வதை அப்படியே திருப்பிக் கேட்கின்ற நிலைமை வராது.

பெரியார் சொல்லாத ஒருவிடயத்தை, அவர் சொன்னதாகச் சொல்வது ஓர் அவதூறு. சீமான் அவ்வாறு சொல்லி, அது இந்தத் திகதியிட்ட பத்திரிகையிலும் வந்துள்ளது என்று சொல்கிறார். ஆனால் அந்தத் திகதியிட்ட பத்திரிகையில் அப்படி இல்லை என்று கூறி ஆதாரத்தைக் கேட்கின்றார்கள், அதற்கு பெரியார் எழுத்துகளைப் பூட்டி வைத்துள்ளார்கள், நாட்டுடமை ஆக்கினால் ஆதாரம் காட்டுவேன் என்று சொல்கிறார் சீமான். தான் வாசித்ததாகச் சொன்னவரிடம் எங்கே வாசித்தாய் என்று கேட்டால் சொல்லும் பதில் இதுவா?

எழுத்துகளை நாட்டுடமை ஆக்குவது என்பதே எனக்குத் தெரிந்து ஒக்ரோபர் புரட்சிக் காலத்தில் சிலகாலம் ரஷ்யாவில் நடைமுறையில் இருந்தது. மற்றும்படி தமிழ்நாட்டில் நடைமுறையில் இருக்கின்றது. ஏதோ உலகம் முழுவதும் எழுத்துகளை நாட்டுடைமையாக்குவது நடைமுறையாக இருக்கின்றது. பெரியாரின் எழுத்துகளை மட்டும் ஒழித்து வைத்துள்ளார்கள் என்பது போல சீமான் சொல்கின்ற, உள்நோக்கம் கொண்ட உளறலை அப்படியே நாமும் எதிரொலிப்பது அபத்தமானது அல்லவா?

**எழுத்துகளை நாட்டுடமை ஆக்குதல் என்றால் என்ன?**

தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித்துறையின் இணையத்தளத்தில் நாட்டுடமை ஆக்குதல் குறித்துப் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

மறைந்த தமிழறிஞர்களின் நினைவைப் போற்றும் வகையிலும் அவர்களின் படைப்புகள் பாரெங்கும் பவனி வரவேண்டும் எளிய வகையில் அனைவரையும் சென்றடைய வேண்டும் எனும் நோக்கிலும் அவர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமை ஆக்குதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன்படி, தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையருக்குப் பரிசுத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இதன்படி, காப்புரிமை போன்ற காரணங்களினால் ஓர் எழுத்தாளனின் எழுத்துகள் அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தினரிடமோ அல்லது அவற்றுக்கான காப்புரிமையைக் கொண்டுள்ளவரிடமோ முடங்கி இருக்கும்போது, அவரது எழுத்துகளை பொதுக் களத்திற்குக் (Public Domain) கொண்டுவருவதன் மூலம் அவர்களது எழுத்துகள் பரவலாகச் சென்றடையச் செய்வதே இந்த நாட்டுடமையாக்கலின் நோக்கமாகும். எழுத்துகள் நாட்டுடமையாக்கப்படும்போது குறித்த எழுத்தாளரின் நூல்களுக்கான மரபுரிமையாரிடம் இருக்கின்றதோ, அவருக்கு பரிசுத்தொகையாக பணமும் வழங்கப்படும்.

இவ்வாறு முதலில் நாட்டுடமையாக்கப் பட்டவை பாரதியின் எழுத்துகள் பாடல்கள், அல்லது பாரதியின் பாடல்களைத் தனியார் சொத்தாகிவிடாமல் மீட்டெடுப்பதற்காக இந்த நாட்டுடமையாக்கல் அறிமுகப் படுத்தப்பட்டது. பாரதியாரின் குடும்பத்தினரிடம் இருந்த பாரதியின் பாடல்களுக்கான உரிமை பல்வேறு கைகள் மாறி ஒரு கட்டத்தில் மெய்யப்பச் செட்டியார் 9500 ரூபாய் கொடுத்து பாரதியாரின் பாடல்களின் ஒலிப்பதிவாகப் பாவிக்கின்ற உரிமையை வாங்கி வைத்திருந்தார். பிரபல நாடகக் கலைஞரான அவ்வை டி.கே. சண்முகம் பாரதியாரின் "தூண்டில் புழுவினைப் போல" என்ற பாடலைத் தனது திரைப்படம் ஒன்றில் சேர்த்தபோது, மெய்யப்பச்செட்டியார், பாரதியின் பாடல்களுக்காக உரிமை தன்னிடம் உள்ளதால் அவ்வை. டி.கே. சண்முகம் தனக்கு 50,000 ரூபாய்கள் இழப்பீடு தர வேண்டும் என்று வழக்குப் பதிவுசெய்தார். இதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட போராட்டங்களும், காப்புரிமை பற்றிய விழிப்புணர்வும். பாரதியாரின் பாடல்களை நாட்டுடமை ஆக்கவேண்டும் என்பதில் அன்றைய சென்னை மாகாண முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி காட்டிய ஆதரவும் சேர்ந்து பாரதியாரின் முழு எழுத்துகளும் நாட்டுடமையாக்கப்பட்டன. இதுபற்றி "பாரதி: கவிஞனும் காப்புரிமையும்" என்கிற ஆய்வுநூலொன்றினை ஆ.இரா.வேங்கடாசலபதி எழுதியுள்ளார்.

இப்போது "பெரியாரின் எழுத்துகளை ஏன் நாட்டுடைமை ஆக்கிவில்லை? அவற்றை ஏன் பதுக்க வேண்டும்? உண்மைகள் வெளிவந்து விடும் என்பதாலா? என்கிற கேள்வியை எடுத்துக்கொள்வோம்.

பெரியாரின் எந்த எழுத்துகள் இன்று பொதுக் களத்தில் இல்லை?, எந்த எழுத்துகள் பதுக்கி வைக்கப் பட்டிருக்கின்றன என்று சொன்னால்தானே இதற்குப் பதிலளிக்கலாம்? தான் சொன்ன அவதூறுக்குப் பதிலளிக்கமுடியாமல் சீமான் உளறுவதை காவித்திரிந்தால் நாமும் அந்த மந்தைக்கூட்டத்தில் ஒருவராகி விடுவோமேயன்றி வேறொன்றும் நடக்கப்போவதில்லை. இதே சீமான் எதிர்வரும் காலத்தில் புலிகள் இயக்கம் பற்றியும் ஏதேனும் ஓர் அவதூறைக் கூறிவிட்டு அதற்கு ஆதாரம் கேட்டால், புலிகள் இயக்கத்தின் ஆவணங்கள் அனைத்தையும் பொதுவெளியில் பகிருங்கள் நான் ஆதாரம் தருவேன் என்று உளறுவதற்கான எல்லா வாய்ப்புகளும் உள்ளன என்பதையும் சீமானை நம்புகின்ற ஈழத்தமிழர்கள் உணரவேண்டும். ஏனென்றால் சீமானின் வரலாறு அப்படித்தான் இருக்கின்றது.

### 04 பெரியாரின் எழுத்துகளும் காப்புரிமையும்

பெரியாரின் எழுத்துகளை முழுமையாகத் தொகுத்துக் காலவரிசையில் வெளியிடப்படவேண்டும் என்ற வேண்டுகோள் மிகநீண்டகாலமாக பெரியாரிய வாதிகளாலும் ஆய்வுத்துறை சார்ந்தோராலும் முன் வைக்கப் பட்டுக் கொண்டிருந்தது. இந்தப் பின்னணியில் 1925 முதல் 1938 வரை குடியரசு ஏட்டில் பெரியார் எழுதிய கட்டுரைகள், தலையங்கங்கள், அறிக்கைகள், பேச்சுகள் என்பவற்றை முழுமையாகத் திரட்டி கால வரிசைப்படி தொகுத்து 27 தொகுதிகளாக வெளியிட உள்ளதாக பெரியார் திராவிடர் கழகம் 2008 ஆம் ஆண்டு வெளியிட்டிருந்தது.

ஆனால் பெரியாரின் எழுத்துகளுக்கான வாரிசுரிமை தனக்கே இருப்பதாக திராவிடர் கழகத்தின் தலைவர் கி. வீரமணி உரிமை கோரி வழக்குப் பதிவு செய்திருந்தார். பெரியாரின் பொதுவாழ்வின் தொடக்க காலத்திலிருந்து அவரது எழுத்துகள், பேச்சுகள், சிறுநூல்கள் என்பவற்றை வெளியிடுவதற்காக பெரியார் ஆரம்பித்ததுப் பின 1952-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட "பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் உரிமை கி. வீரமணிக்கு உண்டென்பதால் அவர் பெரியாரின் எழுத்துகளுக்கும் உரிமை தனக்கே என்பது அவரது வாதமாக இருந்தது. இதன்மூலம் பெரியாரின் எழுத்துகள் காலவரிசைப்படி வெளியிட முன்வந்த பெரியார் திராவிடர் கழகத்தின் முயற்சிக்கு முட்டுக் கட்டை ஒன்றினை வீரமணி இட்டிருந்தார்.

இக்காலப்பகுதியில் பெரியாரின் எழுத்துகள் நாட்டுடமை ஆக்கப்படவேண்டும் என்ற வேண்டு கோளை வைத்து கொளத்தூர் மணி, விடுதலை இராசேந்திரன், கோவை இராமகிருட்டிணன், எஸ்.வி. ராஜதுரை, உள்ளிட்ட பெரியாரியவாதிகளும், பெரியாரிய ஆய்வறிஞர்களும் சட்டப் போராட்டத்தையும் பிரச்சாரங் களையும் முன்னெடுத்தார்கள்.

இந்த வழக்கினை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி கே சந்துரு ஜூலை 27, 2009 அன்று "பெரியாரின் எழுத்துகளுக்கும் பேச்சுகளுக்கும் பதிப்புரிமை கூறும் உரிமை கி வீரமணியை செயலாளராகக் கொண்டுள்ள பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனத்திற்கு கிடையாது என்றும் பெரியார் அந்த உரிமைகளை தனக்கும் கோரவில்லை; மற்றவர் களுக்கும் வழங்கிவிடவில்லை" என்னும் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை வழங்கி இருந்தார்.

1957 ஆம் ஆண்டின் பதிப்புரிமைச் சட்டத்தின் 52(1) (எம்) பிரிவை ஆதாரமாக வைத்து இந்தத் தீர்ப்பினை வழங்கிய நீதிபதி, பதிப்புரிமை எவற்றுக்கு எல்லாம் கோர முடியாது என்பதனை விளக்கும் இந்தச் சட்டப்பிரிவின்படி, பொருளாதாரம், அரசியல், சமூகம், அல்லது மதம் தொடர்பான தலைப்புகளில் நாட்டின் நடப்புகள் குறித்து செய்தித்தாள்களிலும் இதழ்களில் வெளிவரும் கட்டுரைகளை மீண்டும் வெளியிட்டால் அதற்கு பதிப்புரிமை கோர முடியாது என்றும், இந்தக் கட்டுரைகளை எழுதியவர்கள் அதற்கான பதிப்புரிமையைக் கோரியிருக்க வேண்டும் என்றும் இந்த பிரிவு குறிப்பிடுகின்றது. பெரியார் திராவிடர் கழகத்தின் வக்கீல் வைத்த இந்த வாதம் வலிமையானது என்று சுட்டிக் காட்டி கி.வீரமணியின் மனுவைத் தள்ளுபடி செய்தார்.

மேலும் பெரியாரின் எழுத்துக்களை இலக்கியம் என்ற பிரிவின் கீழ் கொண்டு வந்து, பெரியாரின் எழுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் அறிவு சார் சொத்துரிமையாக கருத வேண்டும் என்ற கி வீரமணி தன் மனுவில் குறிப்பிட்டு இருந்ததற்கும், "அறிவு சார் சொத்துரிமை கோருவதற்கும் எழுத்துப் பூர்வமாக உரிமை தரப்பட்டிருக்க வேண்டும் அப்படி எழுத்து மூலமாக பெரியார் எதுவும் வழங்கவில்லை என்பதுடன் பெரியார் எந்த உயிலும் எழுதி வைக்காமல் தான் இறந்துள்ளார் இது எல்லோருக்கும் தெரியும் என்றும்" விளக்கம் அளித்துள்ளார்.

அத்துடன் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் ஊடாக பெரியார் வெளியிட்ட நூல்களுக்காக பதிப்புரிமையைப் பொறுத்தவரை, அந்த அறக்கட்டளை அமைக்கப்பட்ட போது இருந்த காப்புரிமை விதிகள் எழுத்தாளர் இறந்து 25 வருடங்களின் பின்னர் அவரது எழுத்துகள் பொதுக்களத்திற்கு வரும் என்றே இருந்ததால், அதன்படி அவையும் பெரியார் இறந்து 25 வருடங்களின் பின்னர், அதாவது 1998 இன் இறுதியில் பொதுக்களத்திற்கு வந்துவிட்டன என்றும் இந்தத் தீர்ப்பு உறுதிசெய்தது.

இதன்படி பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனத்துக்கு பெரியார் எழுத்துகளுக்கு பதிப்புரிமை கோரும் உரிமை கிடையாது என்ற தீர்ப்பின் வழியாக இனி பெரியாரின் எழுத்துகளையும் பேச்சுகளையும் வெளியிடும் உரிமை அனைவருக்கும் உள்ளது என்பதையும் நீதிபதி கூறியுள்ளார்.

எனவே பெரியாரின் எழுத்துகள் இப்போது பொதுக் களத்திற்கு (Public Domain) வந்துவிட்டன. காப்புரிமை என்ற பெயரால் எவரிடமும் அவரது எழுத்துகளும் பேச்சும் பதுக்கிவைக்கப்படவில்லை. எழுத்துகளை நாட்டுடமையாக்கல் என்பதன் நோக்கமே, காப்புரிமை போன்ற காரணங்களினால் ஓர் எழுத்தாளின் எழுத்துகள் அவரது குடும்பத்தினரிடமோ அல்லது அவற்றுக்கான காப்புரிமையைக் கொண்டுள்ளவரிடமோ முடங்கி இருக்கும்போது, அவரது எழுத்துகளை பொதுக் களத்திற்குக் (Public Domain) கொண்டு வருவதன் மூலம் அவர்களது எழுத்துகள் பரவலாகச் சென்றடையச் செய்வதுதானே. எனவே பெரியாரின் எழுத்துகளையும் பேச்சுகளையும் பொறுத்தவரை அது 2009 இல் வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்புடன் நிறைவேறி விட்டது.

**காலவரிசைப்படியாக எழுத்துகள் தொகுக்கப்படுவதன் அவசியம்**

பெரியாரின் எழுத்துகளை முழுமையாகத் தொகுத்து வெளியிடவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தவர்கள், அவை காலவரிசைப்படியான தொகுப்புகளாகத் தொகுக்கப்படவேண்டும் என்பதையும் சேர்த்தே கேட்டுக்கொண்டனர். இது ஒரு முக்கியமான வேண்டுகோளாகும். பெரியாரின் எழுத்துகளையும் பேச்சு களையும் கால வரிசையில் வைத்துப் பார்த்தாலே ஒட்டுமொத்த விடுதலைக்கான, சமூகநீதி நோக்கிய பயணத்துக்கான அவரது படிமுறை வளர்ச்சி தெரியும். தனிப்பட்ட முறையில், கால வரிசையில் தொகுக்கப்பட்ட பெரியாரின் குடியரசு எழுத்துகளையும் பேச்சுகளையும் வாசித்ததே எனக்குப் பெரியாரைப் புரிந்துகொள்ள உதவியது. அதுபற்றியும் இங்கே குறிப்பிடுவது முக்கியம் என்று நினைக்கின்றேன்.

பெரியார் திராவிடர் கழகம் 1925 முதல் 1938 வரையான குடியரசில் வெளிவந்த பெரியாரின் எழுத்துகளையும் பேச்சுகளையும் மின்னூல்களாக வெளியிட்டிருந்தது. அவற்றினை முழுமையாக படிக்க ஆரம்பித்த எனக்கு பெரியாரின் எழுத்துநடையும், சமத்துவத்துக்கான அவரது பயணம் எப்படி எப்படியெல்லாம் முகிழ்ந்து வந்தது என்கிற அந்தப் பரிணாம வளர்ச்சியும் மிகுந்த ஆர்வத்தைக் கொடுத்தது. அவை அனைத்தையும் ப்ரிண்ட் பண்ணி கோப்புகளில் இட்டு வைத்து வாசித்து வந்தேன். ஈழப்பிரச்சனை, சாதியம், பெண்ணுரிமை, மதங்கள், அறிவியல் பார்வை, பகுத்தறிவு போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து அவ்வப்போது வாசித்தவை தரவுகளாகவும் சம்பவங்களாகவும் செய்திகளாகவும் மூளைக்குள் தேங்கி குழப்பங்களும் துலக்கமற்ற பார்வையுமே அப்போது இருந்தது. பெரியாரை வாசிக்கத் தொடங்கியபின்னர், அவரது அணுகுமுறையும் சிந்தனைமுறையும் எனக்குப் பெரிதும் கைகொடுத்தன. அந்த வகையில் பெரியாரின் எழுத்துகள், சமூக உறவுகளையும், அரசியலையும் புரிந்துகொள்வதற்கு உதவியதுடன் சமத்துவத்துக்காகச் செயற்படவேண்டும் என்கிற உந்துதலையும் எனக்கு ஏற்படுத்தின.

குறிப்பாக, மிக நீண்டகாலம் பொதுவாழ்வில் ஈடுபட்ட பெரியாரின் எழுத்துகளை அவற்றின் கால வரிசையில் வைத்துப் பார்க்கின்றபோதே அவரது எழுத்துகளின் முழுமையான அர்த்தமும், சிந்தனை வளார்ச்சியின் பரிணாமமும் தெரியும். உதாரணத்துக்கு இந்தியாவில் மொழிவழி மாநிலங்கள் உருவாகுவதற்கு முன்னர் திராவிட நாடு திராவிடருக்கே என்று சொன்ன பெரியார் தான், மொழிவழி மாநிலங்கள் உருவான 1965 இற்குப் பின்னர் தமிழ் நாடு தமிழருக்கு என்பதையே தன் கடைசி மூச்சு வரை சொல்லி வந்தார். திருக்குறளை ஆரம்பத்தில் நிராகரித்தவர் பின்னர் திருக்குறள் மீது விமர்சனங்கள் இருந்தாலும் அதனைத் தமிழர்களின் அடையாளமாகச் சொல்லவேண்டும் என்று பேசியவரும் அதே பெரியார் தான். காலவரிசையை பின்பற்றாமல் எழுத்துகள் தொகுக்கப்பட்டால் அரசியல் நிலைப்பாடுகளே திரிக்கப்பட்டுவிடக்கூடும் என்ற அச்சம் வீரமணிக்கு இருந்திருக்கலாம். இன்று, வாசித்து, ஒவ்வோர் விடயத்தையும் கேள்விகேட்டு சான்றாதாரங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து தேடித் துலங்கி உண்மையக் கண்டடையாமல் கேள்விச் செவியன்களாக பெரும்பான்மையானோர் மாறிப்போய்விட்ட "post-truth" காலத்தில் எல்லாத் திரித்தல்களுக்குமான வாய்ப்பும் இருக்கின்றது. ஆயினும் பெரியார் உள்ளிட்டோர் ஏற்றிய சமூகநீதிக்கான தீபத்தின் வெளிச்சத்தில் நாம் மானுட சமத்துவம் பேணுவோம்


பின்குறிப்பு:

குடிஅரசு ஏட்டில் வெளிவந்த பெரியாரின் எழுத்துகளையும் பேச்சுகளையும் வெளியிடுவது தொடர்பாகவும் அவற்றுக்கான காப்புரிமை குறித்தும் நடந்த வழக்கு விபரங்களையும் வெவ்வேறு கட்டுரைகளையும் தொகுத்து குடிஅரசு வழக்கு என்ற பெயரில் திராவிடர் விடுதலைக் கழகம் வெளியிட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதி பெரும்போகம் பாப்பா!



அல் அஸூமத்

வீரப்பன் கதை சொல்கிறார்:-

"சாதி பெரிதில்லை பாப்பா", என்றுதான் பாரதி தனது அந்தக் கவிதையை எழுதியிருந்தானாம். பின்னர் அவனோ அல்லது வேறெவரோ அதனைச் "சாதிகள் இல்லையடி பாப்பா" என மாற்றியதாகச் சொல்லப்படுகிறது.

சாதிகள் இல்லை என்று சொல்வதனால், இந்தப் பிரச்சினையாற் பாதிக்கப்பட்டுள்ளோர் மட்டுந்தான் சந்தோஷப்படுவதாகத் தெரிகிறது. சாதியினால் பெருமைப்படுவோர் இதனை ஏற்றுக்கொள்வதில்லை. ஆனாலும், ஏதோ அவர்களுடனும் சேர்ந்தே வாழ வேண்டியிருப்பதால், ஒத்துப்போவதாக நடிக்க வேண்டி இருக்கிறது - என்னைப் போல்!

உண்மையைச் சொல்ல வேண்டுமானால், எனக்கும் சாதிக்கும் தொடர்பே இல்லை என்பது போல் வாழ்பவன் நான். எனது வீட்டில் எல்லாச் சாதியினரும் வேறுபாடின்றிப் புழங்குவார்கள். நானும் அவர்களுடன் அப்படித்தான் பழகுகிறேன். சாதியினாற் பாதிக்கப்பட்டவர்கள் என்னைப் பாராட்டி நிற்கின்றார்கள்.

ஆயினும், எனது குடும்பத்துக் கல்யாண விவகாரத்தில் மட்டும் மிக நுணுக்கமாகச் சாதியத்தைக் கடைப்பிடிப்பவன் நான் என்பதை எனது குடும்பம் மட்டுமே அறியும்!

இதனால், சாதிகள் இல்லை என்பவர்கள் என்னை உதாரண புருஷனாகக் கொண்டாடுகின்றார்கள். சாதிகள் உண்டு என்பவர்களும் எனது சாணக்கியத்தை மெச்சுகின்றார்கள். சாதிகள் பெரிதில்லை என்பவர்களும் என்னைக் குறைத்து மதிப்பிடுவதில்லை.

எனது தஞ்சாவூர் நண்பர் முத்தையாத் தேவர் இருக்கின்றாரே, அவர் சாதியத்தை வெளிப்படையாகவே கடைப்பிடிப்பவர். கொடுக்கல் வாங்கல் அனைத்திலும் அவருக்குச் சாதியம் மிக முக்கியம்! ஆனால், எந்த இடத்திலும் அவர் சாதியத்தைத் தூக்கிப் பிடித்து வாதிடுபவரும் அல்லதான்.

தன்னைப் பொறுத்தவரையில் அவர் சாதிகள் இல்லையென்றும் சொல்வதில்லை; சாதி பெரிது என்றும் சொல்வதில்லை.

நல்ல மனிதர்தான். எனக்கும் அவருக்கும் நீண்ட காலத்துப் பழக்கம். அவருடைய பல உதவிகளால்தான் நான் முன்னுக்கு வந்தேன் என்பதை நான் என்றும் மறக்கமுடியாது. ஊரில் எல்லாருமே அவரை விரும்பினார்கள். நல்லதற்கும் கெட்டதற்கும் அவரை நாடினார்கள். ஊரிற் சிலர் அவரையும் குறை கூறுகின்றார்கள் என்றால், அதனை அவர்கள் ஒரு வகைச் சந்தோஷத்துடன்தான் சொல்கின்றார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்!

"ஒண்ணுமில்லாததுக்கெல்லாம் இந்தாளு ஏன் இப்பிடித் தாட்டுப் பூட்டுத் தஞ்சாவூருன்னு துள்ளிக் குதிக்கிறாரு!" என்று வீட்டில் அவரது மனைவியார் அடிக்கடி சுலோகம் சொல்லிக் கொள்வார்!

முத்தையா துள்ளிக்குதிக்கும்போதெல்லாம் பக்கத்தில் நான் இருந்தால், அவர் குளிரும் வரையிற் புன்னகை மாறாமல் இருந்துவிட்டு, அவருக்கு உண்மையை எடுத்துச் சொல்வேன். பின்னர் அவர் தனது தவறை உணர்ந்து ஒரு சிரிப்பால் அதனை ஏற்றுக்கொள்வார்.

முத்தையாவின் மனைவி, என்னைக் குறிப்பிடும்போதெல்லாம் , "சாடிக்கேற்ற மூடி" என்று அடுத்த சுலோகத்தையும் சொல்லிக்கொள்வார்.

முத்தையாவையும் என்னையும் எந்தச் சாத்தானாலும் இதுவரையிற் பிரிக்க முடிந்திருக்கவில்லை. கல்யாணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்று சொல்கின்றோம் அல்லவா, அவ்வாறே எங்களுடைய நட்பும் சொர்க்கத்தில்தான் நிச்சயிக்கப்பட்டது என்று சொல்லலாம்.

இந்த நட்பை உறவாக்கிக்கொள்ள நான் விரும்பினேன். அதனால், முத்தையாவினுடைய மகள் பரமேஸ்வரியை என் மூத்த மகனுக்குப் பெண் கேட்டேன் - ஏழெட்டு வருஷங்களுக்கு முன்பு. முத்தையா அதிர்ந்து போனார். ஏனென்றால், முத்தை யாவின் மகள் புஷ்பம், மேமலை அச்சுதன் நாயருடைய மகன் பாஸ்கரனைக் காதலித்துக் கொண்டிருந்தாள். சாதி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம் எல்லாமே ஒத்து வந்ததால், முத்தையாவும் அவர்களின் காதலை ஏற்றிருந்தார்.

எனக்கு ஏமாற்றம்தான். என்றாலும், காதலுக்கு எதிராக முத்தையா எதனையும் செய்ய மாட்டார் என்பதையும் அறிந்திருந்த நான் ஒரு பெருமூச்சோடு சமாதானப்பட்டுக்கொண்டேன். எனது பெயர்தான் வீரப்பத் தேவர் என்றிருக்கிறதேயொழிய, அந்த பல சாலியை எதிர்க்க என்னிடம் அந்தளவு பலம் இருந்தது என்று சொல்லிக்கொள்ள முடியாது! இது எனது அந்தரங்கம்!

எனது இடத்தில் வேறொரு மனிதர் இருந் திருந்தால், அவர் அப்போதே நட்பையெல்லாம் தூக்கி வீசிவிட்டுப் பகைமையை நட்பாக்கியிருப்பார். ஆனால் நானோ, மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல், பரமேஸ்வரியின் தாய் மாமனாக முன்னின்று அவர்களின் திருமணத்தை நடத்தி வைத்தேன் - அந்த வகையிலாவது நண்பரை உற வாக்கிக் கொள்ளலாம் என்று. இப்போது அவர்களுக்கு மூன்று பிள்ளைகளும் இருக்கின்றார்கள்.

கேரளத்தில் நெய்யாற்றின்கரை எங்களது பூர் வீகம். நாங்கள் தமிழர்கள். அதே நெய்யாற்றின் கரை தான் மேமலை அச்சுதன் நாயரின் பிறப்பிடமும். ஆனால் அவர் மலையாளி. அங்கிருந்து முப்பதுகளில் இலங்கைக்கு ஓடி வந்தவர். நானும் அந்தக் கால கட்டத்தில்தான் சிறிது முன்னோ பின்னோ இலங்கை வந்தேன்.

என்னைப்போலுமே அச்சுதனும் ஊருக்குப் போயிருக்கவில்லை. நீண்ட காலமாக அவர் தொடர் பற்று இருந்துவிட்டுப் பத்தாண்டுகளுக்கு முன்னர் ஒரு கடிதம் போட்டாராம். அந்தக் கடிதம் திரும்பி வந்த தாகவோ அதற்கு மறுமொழியே கிடைக்காததாகவோ சொல்லிக்கொண்டார். தனக்கு யாரும் இப்போது அங்கே இல்லை என்பார். அப்படி இருந்தாலும், தான் தொடர்பு கொண்டால், தன்னிடம் பண உதவி கோரித் தொல்லைப்படுத்துவார்கள் என்றும் தான் அப்படி உதவி செய்யும் நிலையில் இல்லை என்றும் சொல்லிக்கொள்வார்.

அவருடைய வாழ்வில் குடும்பத்துடன் ஏதோ அழியாத ரணமிருப்பதாக நான் வருத்தப்பட்டுக் கொள் வேன். ஒருவேளை குடும்பம் என்று ஒன்றே இல்லாம லும் இருக்கலாம் அல்லவா?

ஆனால் எனக்கும் எனது உறவுகளுக்கும் இடைக்கிடை கடிதத் தொடர்பு இருந்து வந்தது. அச்சுதன் நாயரைக் குறித்தும் நான் இரண்டொரு முறை அவர்களுக்கு எழுதியிருந்தேன். அப்படி எவரை யும் கண்டுகொள்ள இயலவில்லை என்று அவர்கள் எழுதியிருந்தார்கள். அதனால், அச்சுதனுக்கு உறவுகள் இல்லையோ என்று நானும் வாளாவிருந்தேன்.

நாடு மாறி வந்துவிட்டால், இப்படிப்பட்ட இழப்புகள் வெகு இலகுவாக நடந்தேறிவிடுகின்றன.

கடந்த மாதம்தான் முதன்முதலாக நான் நெய்யாற்றின் கரைக்குப் போனேன். ஏறக்குறைய நாற்பந்தைந்து ஆண்டுகள் கடந்துவிட்டிருந்தன. ஊரே உருமாற்றமடைந்திருந்தது. மிகுந்த அலைச்சலுக்குப் பிறகுதான் நான் இனபந்துகளைக் கண்டுபிடித்தேன்!

அதைப்போலுமே, அச்சுதனின் இரகசியத்தை யும் கண்டுபிடித்திருந்தேன்! அவன் நல்ல சாதிக் காரனில்லை! அவன் நெய்யாற்றின்கரையானும் இல்லை!

மூன்று நாட்களுக்கு முன்னர் வீடு திரும்பி யிருந்தேன். வந்த மறுநாளே நான் முத்தையாவைக் காண வந்திருப்பேன். ஆனால் எனது மனத்துக்குள் ஒரு குறுகுறுப்பு ஏற்பட்டிருந்தது.

தளும்பாகிவிட்டதாகக் கடந்த ஏழெட்டு வருஷங்களாக நான் எண்ணியிருந்த அந்தப் புண், கல்யாண கொடுக்கல் - வாங்கல் உடைபட்டுப்போன அந்தப் புண், உள்ளேயே புரையோடிப் புரையோடிக் கிடந்து இப்போது வீச்சத்தையும் வேதனையையும் தரத்தொடங்கியது.

அதனை என்னால் தவிர்க்க முடியவில்லை. முத்தையாவிடம் உண்மையைச் சொல்லி அவரைப் பழிவாங்க வேண்டுமெனும் உள்ளுணர்வு மேலோங்கிக் கொண்டு வந்தது. அவரைப் போய்ப் பழிவாங்குவதா என்று அடிமனம் குத்திக் காட்டியது. பழி வாங்கக் கூடாதுதான். அது நன்றி மறந்ததையே காட்டும் என்றும் உள்மனம் ஒத்துக்கொண்டது.

என்றாலும் அந்தக் குறுகுறுப்பு விட்டபாடாக இல்லை. அவ்வளவு நெருக்கமான ஒரு மனிதரை மன்னித்துவிடலாம்தான் என்றாலும், அவ்வளவு நெருக்கமான ஒரு மனிதரிடமிருந்து ஒருண்மையை மறைத்த குற்றம் என்னைப் பிறகு வாட்டுமே என்றும் அக் குறுகுறுப்பு தோண்டிக் கொண்டே இருந்தது.

மனைவியிடம் நான் இது குறித்துக் கதைக்க வில்லை. வேறு எவருடனும் பகிர்வதாகவும் இல்லை. அதுவே பெரிய காரியம் அல்லவா! ஆனால், முத்தையா விடம் இதைச் சொல்ல வேண்டும்.

அதிலும், தன்னைத் தக்க சமயத்திற் பழி வாங்கிவிட்டதாக முத்தையாகூட எண்ணிவிடக் கூடாது என்பதிலும் நான் மிக கவனமாக இருந்தேன். அதற் கான பேச்சு வார்த்தையை எப்படிக் கையாள்வது என்பதற்கு ஒரு திட்டம் தேவைப்பட்டது.

நீருக்குள் கொடுந்தீயை அணையாமற் கொண்டு செல்ல வேண்டும்!

அதனால் முத்தையாவைச் சந்திப்பதில் ஒரு நாள் பிந்திவிட்டது!

இதோ இப்போது அன்பளிப்புப் பொதி களுடன் முத்தையாவைக் காணப் போய்க் கொண்டி ருந்தேன்.

இன்னும் சில மணித்தியாலங்களில் முற்றாகக் குணமடையப்போகும் எனது புண்ணின் அதி யற்புத நிலையையும் அதனால் எங்கள் நட்புக்கு எந்த இடையூறும் ஏற்படாது என்ற உறுதியையும் எண்ணி யெண்ணி நான் இப்போது போய்க்கொண்டிருந்தேன்.

பொறுத்தார் பூமியாள்வார் என்று விகடத் துக்காகவா சொன்னார்கள்? என்னுடைய பொறுமை என்பது மண்ணறிந்த மகத்துவம் ஆயிற்றே! இவ்வளவு காலமும் மறைந்து கிடந்த உண்மையை இப்போது காலமே வெளியிற் கொண்டுவந்துவிட்டது. அது இப் போது எவ்வளவு அழகாகப் பழியெடுக்கப் போகிறது! அந்தப் பழியெடுப்பும் எவ்வளவு நாசூக்காக நடத்தப் படப் போகிறது! பெயருக்கேற்றபடியாக நான் இனித் தான் வீரப்பனாகத் திகழப் போகிறேன்! முத்தையரும் தனது சாதிமுத்தின் பெறுமதியை இழக்கப்போகிறார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டு வாசலில் வண்டி நிற்கும் சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தாள் முத்தையாவின் மனைவி. என்னைக் கண்டு முகம் மலர்ந்தவள், "என்னாங்க, முத்தையாத் தேவரே! ஒங்க மூடி வந்தாச்சி!" என்றாள்.

பரபரப்பாக வந்து அவளுக்குப் பின்னால் நின்று பார்த்த முத்தையாவும் முகம் மலர்ந்துபோய், "வாடா வாடா!" என்று வாசலுக்கு இறங்கினார்.

வண்டிக் கூலியைக் கொடுத்துவிட்டுக் களிப்பை அடக்க முடியாதவனாகக் கையிற் பெரிய பையுடன் முன்னேறினேன் நான்.

என்னை முதலில் வீட்டுக்குள் விட்டுப் பின்னாலேயே வந்தார் முத்தையா.

கொண்டு வந்த பெரிய பையை அவளிடம் கையளித்தேன்.

"என்னாண்ணேன், மூட்ட முடிச்செல்லாம் பெருசாருக்கு!"

"இதொன்னும் ஒங்களுக்கில்ல, புள்ளைங் களுக்கு. சட்டப்படி நாந்தாங் கொண்டுபோயி குடுக் கணும். அதுக்கு லேட்டாகும்னுதான் இங்க கொண் டாந்தேன். புள்ளைங்களுக்கு அனுப்பீருங்க! ஒங்களுக் கில்லேன்னு ஒரு பேச்சிக்குந்தாஞ் சொன்னேன். ஒங்களுக்குந்தான்!"

"எப்படா வந்தே?" என்றார் நண்பர் ஆர்வத் துடன்.

"முந்தாநாத்து ராவு வந்தேன்டா. நேத்து வரப் பார்த்தேன். ஆனா, ஒரு மாசமா நான் இங்க இல்லாத தால, எல்லாமே ஒரே கொழப்பம் போ! நேத்து பூரா அதுகள சரி செய்றதிலயே இருட்டீரிச்சி. இன்னைக் கும் வர ஏலாமத்தான் இருந்திச்சி. ஆனா, இவள பாத்துக்கிடச் சொல்லீட்டு வந்திட்டேன். இல்லாட்டி நாளைக்கும் வர ஏலாது. "பேங்கில எல்லாமே கொளறுபடி. அதப் போய்ச் செய்யாட்டிப்போனா யாவாரஞ் செஞ்ச மாதிரித்தான்," என்று கூடத்தில் உட்கார்ந்தேன்.

"இங்க வரலேன்னு யாரிப்ப அடிச்சிக்கிட் டாங்க! அதுகளக் கவனிச்சிட்டு வந்தா பத்தாதா! என்னா குடிக்கிறீங்கண்ணேன்?" என்றாள் அவள்.

"நீ என்னா தர்றியோ அதக் குடிக்கிறேன்," என்று புன்னகைத்தேன் நான்.

"சரி, வா; நம்ம ரூமுக்குப் போவோம்," என்றார் முத்தையா.

முத்தையா கட்டிலிற் சாய்ந்துகொண்டார். சிறிது காலமாக அவருக்கு அதிக நேரம் எந்த இருக் கையிலும் அமர்ந்திருக்க முடியாது. அப்படியொரு இடுப்பு வருத்தம். அதுவும்போக, நெருங்கியவர்கள் வந்து விட்டால் அவரது கூடம் இந்தப் படுக்கையறை தான்.

"ஊரெல்லாம் எப்பிடியிருக்கு?" என்றார்.

"அதையேங் கேக்கிற போ! நாப்பது வருசத் துக்கு முந்தி பதினஞ்சாவது வயசில சிலோனுக்கு வந்ததில்லியா! அங்க எல்லாமே தலகீழா மாறிப் போச்சி! ஊரு மாறி வந்திட்டனோன்னு பிரமையாப் போச்சிபோ! அது இப்ப கிராமமில்ல; நகரம்! அந்தக் காலத்தில மாதிரிக் குடிச கிடிசயெல்லாங் கெடை யாது. இருக்குதுதான். ஆனா ஒண்ணு ரெண்டு அங்கங்க! பெரிய பெரிய வீடுகளும் மாடி வீடுகளும் பெரிய பெரிய மால்களுமா ஊர்ல வெத்து நெலமே இல்ல! நல்ல காலமா தங்கச்சி ஊர்லயே இருந்தா. மத்தவுங் கள்லாம் காணி பூமிகள வாங்கி வேறவேற ஊர் களுக்குப் போய்ட்டாங்க. அங்கெல்லாம் போய்ட்டுத் தான் வந்தேன். அடேயப்பா, ஊரா அது! ஏன்டா சிலோன்ல இருக்கிறோம்னுகூட நெனச்சிட்டேன் போ!"

"எங்க தஞ்சாவூர் மட்டும் என்னாவாம்? ரெண்டு மூணு வருசத்துக்கொருக்கா நான் போய்ட்டு வர்றதால வித்தியாசந் தெரியல்ல. நான் அங்கருந்து வந்தும் நாப்பது அம்பது வருசமாகுதில்ல? அந்தக் காலத்தில இருந்த மாதிரியா தஞ்சாவூரு இப்ப இருக் குது? நாடு அது பாட்டுக்கு முன்னேறிக்கிட்டுத்தான் இருக்குது. ஜனங்களும் எவ்வளவோ முன்னேத்தம்! சிலோனுந்தான் இருக்குதே!... சிங்கப்பூரு வளர்ச்சி யடைறதுக்கு ஒரு பத்து வருசம் முந்தி, லீ குவான் யூ சிலோனுக்கு வந்திருந்தாராம். சிலோனப் பாத்திட்டு, "சிலோன் மாதிரி நான் சிங்கப்பூர மாத்திக் காட்டு றேன்னுட்டுப் போனாராம். அதே மாதிரி செய்து காட்டினார். நம்ம ஜேயார் இருந்தாரில்ல, அவரு எழுபதுகள்ல என்னா சொன்னாருன்னு தெரியுந் தானே? சிலோன நான் சிங்கப்பூரா மாத்திக் காட்டு றேன்னாரு! சிலோன சிலோனா இருக்கவிட்டா போதாதா! இப்ப சிலோனுமில்ல, சிங்கப்பூருமில்ல! ஆனா, சிலோன் சிங்கப்பூரா மாறீரிச்சின்னும் சொல்ல லாம் - வெலவாசிகள்ல!..இந்தியா அப்பிடியா! ஏன்டா கொஞ்சக் காலத்துக்குப் பொறுமயா இருக்காம வந்தோம்னு இருக்கு!... சிரிமா காலத்திலயாவது போயிருந்திருக்கலாம்!... வருங்காலத்தில இங்க பெரும் பாடு படப் போறோம்!..."

முத்தையாவின் மனைவி தேநீர் கொண்டு வந்தாள்.

ஒரு வாய் குடித்துவிட்டு, "என்னாம்மா, இம்புட்டு சீனி?" என்றேன்.

"நீங்கதான் நல்லா சீனி திம்பீங் களேண்ணேன்?" என்று பழைய காலத்தில் இனிப்புச் சேர்த்தாள் அவள்.

"அந்தக் காலமெல்லாங் கப்பலேறீரிச்சிம்மா!" என்று கவலைப்பட்டேன் நான். "ஊருக்குப் போய்ட்டுக் கண்டது கடியதெல்லாந் தின்னேனா, சீனி ஏறீரிச்சி! அங்கயே மருந்து மாயமாத்தான் இருந்தேன்!"

"அய்யய்யே! சீனி வந்திட்டா பெரும்பாடா மில்ல! எங்க சகல முத்துவேலருக்கும் அதுதானாமே! கவனம்ணேன்!..." என்று அறிவுறுத்திவிட்டு அவள் வெளியேறினாள்.

"சொன்னாப்பல, நம்ம அச்சுதனாருக்கும் நெய் யாற்றங்கரதானாம்ல! ஏதாவது தகவல் தெரிஞ்சிதா," என்றார் முத்தையா.

மௌனமாக இருந்தேன். ஆனாலும் உள்ளம் துள்ளிக் குதித்தது. தானாகவே விஷயத்தைத் தொடக்கி வைத்துவிட்டார் முத்தையா என்பதில் எனக்கு உள்ளூர மகிழ்ச்சி. என்றாலும் நாடகத்தை மிகவும் கவனமாக நடத்த வேண்டும். இல்லா விட்டால் தான் முத்தையாவையும் அச்சுதனையும் பழி வாங்கிய தாக வெளிப்படையாகவே தெரிந்துவிடும். அதனால் மௌனத்தை நீட்டுவித்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

"என்னா பேசாம இருக்கிற? சகலயப்பத்தி ஏதாவது தகவல் தெரிஞ்சிச்சான்னு கேட்டேன்!"

"... ம்... அதப்பத்திக் கேக்காதடா! நான் ஊருக்குப் போக முந்தி முத்துவேல்கிட்டயும் போய்ப் பயணஞ் சொன்னேன்தானே? "அப்பிடி யா"ன்னு சொன்னதோட சரி. அவனும் சிலோனுக்கு வந்து நாப்பதம்பது வருசமாகுதில்ல? நான் இப்ப அங்க போறேன்னு சொல்றேன். சந்தோசப் பட்டிருக் கணும்ல? ஒரு வார்த்த? மூச்! என்னமோ அவனுக்குத் தெரியாத ஊருக்கு, காசி - ராமேஸ்வரத்துக்கு நான் போற மாதிரியில்ல இருந்தான்! அவனுக்கே அக்கறை யில்லாதப்ப, நான் எப்பிடி விசாரிப்பேன்?..."

"ம்?... புதுவெதமா கதைக்கிறியே?... திடீர்னு அவன்மேல என்னா அப்பிடிக் கசப்பு?... ஆதாய மில்லாம செட்டி ஆத்தக் கட்டி எறைக்க மாட்டியே?"

அவசரப்படக் கூடாது என்று மௌனமாகவே இருந்தேன்.

எனவே, முத்தையாவே தொடர்ந்தார். "நீ சொன்னப்போ, அவனுக்கு என்னா ஊரு நெனவு வந்திச்சோ!..."

அல் அஸூமத் தொடர்கிறார்:-

வீரப்பனின் மௌனம் முத்தையாவுக்குப் புதுமையாக இருந்தது. "அச்சுதன் நாயரின் பேச்சை எடுத்தால் எப்போதுமே, அவரைப் பற்றி எதையாவது சொல்லி வழவழவென்று கதைக்கும் வீரப்பனுக்கு என்ன நேர்ந்தது?... இருவருக்குமிடையில் என்னமோ நடந்திருக்கிறது... என்ன நடந்திருக்கலாம்?... எங்கள் வீட்டுக்கென்று அன்பளிப்புகளைக் கட்டிக்கொண்டு வந்திருக்கும் வீரப்பன், பக்கத்திலிருக்கும் நாயருக்கு எதுவும் கொண்டுவராமல் வந்திருப்பது ஏன்?... என்னவோ இடிக்கிறதே!..."

மௌனம் தொடர்ந்தது. முத்தையாவுக்கு அது நல்ல அறிகுறியாகப் படவில்லை.

"மச்சான்! எங்கயோ இடிக்கிதேடா!... ஒங்க ரெண்டு பேருக்குமிடையில என்னமோ நடந்திருக்கு! போன கெழமயும் போய்ட்டுத்தான் வந்தேன், அவனும் ஒண்ணுஞ் சொல்லல்லியே!..."

"நீ நெனைக்கிற மாதிரி அப்பிடி ஒண்ணுங் கெடையாதுடா! நாயரு ஒனக்கு சகலன்னா எனக்கும் சகல மாதிரித்தானேடா! ஊருக்குப் போறதா நான் சொன்னப்ப அவன் ஒண்ணுமே சொல்லல்லன்னு நாஞ் சொன்னது சும்மா ஒரு பேச்சுக்குத்தான்! அத வச்சி நீ மொழங்காலுக்கும் மொட்டத் தலைக்கும் முடிச்சி போட்டுக்கிடாத!..."

"சரி, ஒண்ணுமில்லன்னே வச்சிக்கிடுவோம். இப்ப நீ இந்த சாமான்கள கொண்டு வந்தேல்ல, இந்தா அடுத்தாப்ல இருக்கிற மேமலைக்கும் ஒரு பார்சல் கொண்டு வந்திருக்கலாமில்ல? எப்பவுமே இப்பிடி நீ இதுக்கு முந்தி இப்பிடிச் செஞ்சதில்லியே?..."

"அடேய், நான் இங்க வந்ததே தங்கச்சி சொன்ன மாதிரி, கால்ல சுடு தண்ணிய ஊத்திக்கிட்ட மாதிரி அவசரத்தில! அங்கயும் போய்ட்டு வாற துன்னா சொணங்குமில்லியா? இன்னொரு நாளைக்கிப் போகலாம்னு இருக்கிறேன். அதுக்குப் போயி, நீ என்னமோ இப்பத்தான்..."

"ஒண்ணுமில்லன்னா, வா, ரெண்டுபேரும் ஒரு எட்டுப் போய்ட்டே வந்துறுவமே! எனக்கென்னமோ மனம் சுத்தமா இல்ல! பொறப்புடு!"

"ஒனக்கென்னா பைத்தியமாடா? இந்தியா வுக்குப் போய்ட்டு வந்திருக்கிறேன், வெறுங்கைய வீசிக்கிட்டுப் போகேலுமா? நாளைக்கி இல்லாட்டி நாளாண்டைக்குப் போகலாம்னு இருக்கிறேன்."

"ஏன் வெறுங்கைய வீசிக்கிட்டுப் போகணும்? நீ இப்ப இங்க கொண்டு வந்த பார்சல கொண்டு போறது?"

"சொன்னாக் கேக்கணும், முத்து! நான் அப்பறமா அவெங்கிட்ட போய்க்கிடுறேன். ஒரு மாசங் கழிச்சி சந்திச்சிருக்கிறோம். தங்கச்சிவுட்டு சாப்பாட்ட ஒரு கை பாத்திட்டு ஒடனே திரும்புனாத்தான் எனக்கு விமோசனம்!"

"இல்ல, வீரா! எனக்கு உள்ளுக்குள்ள என்னமோ சொல்லுது! நீ எதையோ மறைக்கிற! என்னயப் பத்தி ஒனக்குத் தெரியுந்தானே, அது என்னான்னு தெரியாம மூச்செடுக்கவும் முடியாம இருக்கு! எழும்பு எழும்பு! போயாச்சி, சாப்பாட்டுக்கு இங்க வந்தாச்சி!"

வீரப்பனுக்கு வழியைத் தெளிவாக வெட்டிக் கொடுத்துவிட்டார் முத்தையா. இனித் தன் மீது பழி வராமல் பழி வாங்கிக்கொள்ள முடியும்!

"சரி! இனி எதையும் ஒங்கிட்ட இருந்து மறைக்க முடியாது! ஆனா என்னய மாட்டி விட்றாத! ஒங்கிட்ட இருந்து எதையும் மறைக்க நான் நெனைக் கல்ல. அத அப்பிடியே விட்றலாம்னுதான் இருந்தேன். எனக்கு அதுகளப் பத்திப் பிரச்சினையே இல்ல! ஆனா ஒன்னய அது பாதிக்கும்னு தான் சொல்லாம இருக்கப் பாத்தேன்! ஏன்னா, நீ அந்த விசயத்தில ரொம்பக் கறாரா இருக்கிறவன்னு தெரிஞ்சிருந்தும்..."

"என்னடா பொடி வச்சிப் பேசிக்கிட்டே இருக் கிற? என்னான்னுதான் சொல்லித் தொலையென்!"

"...ம்... எப்பிடி அதச் சொல்றது!..." என்று மீண்டும் மௌனமானார் வீரப்பன்.

"ஏங்கிட்டருந்து எதையோ மறைக்கிறதுக்கு நீ முயற்சி செய்றது நல்லாவே வௌங்குது! சொல்லு! என்னா அப்படியாப்பட்ட விசயம்?"

"... அச்சுதன் நாயரோட ஊரு நெய்யாற்றின் கரை இல்ல! அதுக்கு அடுத்த ஊரு தக்கல!"

"அப்பிடியா!... சரி, இப்ப அதுக்கென்னா?... ஒனக்கு எப்பிடித் தெரியும்?..."

"எதையோ மறைக்கிறதுக்குத்தான் அவரு ஊர் பேர மாத்திச் சொல்லியிருக்கிறார்னு தெரியிதில்ல?"

"அப்பிடி எத மறைக்கிறதுக்கு ஊரு பேர மாத்திச் சொல்லணும்?"

"ஒரு ஏழெட்டு வருசத்துக்கு முந்தி நாயரோட கூட்டாளி ஒருத்தர் அங்கிருந்து இங்க வந்திருந்தத அகஸ்மாத்தா நான் கண்டிருந்தேன். அவர நெய்யாற்றின் கரையில கண்டேன். அவர் மூலமாத்தான் நாயர் தக்கலக்காரர்னு தெரிய வந்திச்சி. எனக்கென்னமோ சந்தேகம் வந்திரிச்சி. எதுக்கு ஊர இவரு மாத்திச் சொல்லணும்?... நம்ம ஆளில்லயா! அதுனால ரொம் பக் கவனமா நான் ஒரு கெழமயா தேடிப் பாத்தேன். அப்பத்தான் அது தெரிய வந்திச்சி!... நாம ஏமாந் திட்டோம், முத்து!..."

"ஏமாந்திட்டமா?..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமாடா!... அச்சுதன் நல்ல சாதியில்ல!"

முத்தையா சமைந்துபோனதுபோல் காணப் பட்டார்.

அதன் பிறகு வீரப்பன் சொன்ன எதுவும் முத்தையாவின் செவிகளுக்குள் ஏறியதாகத் தெரிய வில்லை.

ஆனால், வீரப்பனின் நெஞ்சு நிறைவடைந் திருந்தது. அவர் நினைத்ததை நினைத்தபடியே கன கச்சிதமாக நிறைவேற்றிவிட்டார்!

முத்தையாவின் முகத்தில் ஈயாடாத பாவனை. எப்போதும் உணர்ச்சிகளைக் கொட்டித் தாட்டுப் பூட்டு தஞ்சாவூரு என்று குதிக்கும் மனிதனின் ஆட்டத்தை அடக்கிப் பழிவாங்கிவிட்ட மானசிக மகிழ்ச்சியில் வீரப்பன் நல்ல பிள்ளையாகத் தன்னைத் தனக்குள் பாராட்டி மகிழ்ந்து கொண்டிருக்க -

"அச்சுதன் நாயர்தான்டா நம்ம எல்லாத்தையும் விட ஒசந்த சாதி! சாதி ஒண்ணும் பெரிசில்லடா! அத வச்சிக்கிட்டு ஆடுற ஆட்டமிருக்கே, அதுதான்டா சில பேருக்குப் பெரிசா இருக்கு! கீழ் சாதின்னு சொல்றோ மில்ல, அவுங்க ஒவ்வொருத்தனும் இப்பிடி இருந் திட்டா எவன்டா சாதிப்பிரச்சினய தூக்கிக்கிட்டு ஆடப் போறான்? எல்லாரும் மேல் சாதிதான், வீரப்பா!..."

உள்ளும் வெளியும் நொருங்கிப்போனார் வீரப்பன். அவருக்கு எதுவும் பேசத் தெரியவில்லை. சாதிக்கு மரியாதை செய்யும் முத்தையாவா இவர்!...

அடுத்து வந்த முத்தையாவின் வாக்குமூலம், வீரப்பனை வெள்ளாவியில் வைத்தது!

"அவரு யாருன்னு எனக்கு முந்தியே தெரியும், மச்சான்! மகளுக்கும் அவர்ட மகனுக்கும் லவ்வா இருந்திச்சில்ல, அப்ப நாந்தான் அவர்கிட்ட கல்யாணப் பேச்ச எடுத்தேன். அப்பத்தான் தான் இன்னார்னு அவர் என்கிட்ட சொன்னாரு! தலித்தா இருந்து அவரும் அவர்ட குடும்பமும்பட்ட அவதிகளச் சொன்னப்ப, இதத் தவிர வேற வழி அவருக்குத் தெரிஞ் சிருக்கல்ல! சாதிய ஒழிக்கணும்னா, யாருக்கும் இது தான் ஒரே வழி! அன்னைக்கித்தான் என் கண்ணும் தொறந்திச்சி. அவரவிட ஒசந்த சாதி உலகத்தில யாருமே இருக்க முடியாதுடா! அவர் கால்ல கும் பிட்டு விழக்கூட நெனச்சேன்னா பாத்துக்க!... இந்தியாவ்லருந்து இங்க வந்த சொடலையாண்டிங்க, எப்பிடி ராஜ பரம்பரையா மாறியிருக்கிறா னுங்ககங் கிறதெல்லாம் நமக்குப் புதுமையில்லையே, வீரப்பா!."

# ஏக்கமாய் ஓர் தேடல்

இருளை தொடர்ந்த
பயம் போல
வெளிச்சத்தை தேடிய
இருளைப்போல
இருளைத்தேடிய நிழலைப்போல

ஏக்கமாய் ஒரு தேடல்
உன்னதமாய்
உறவென நீ வேண்டும்

உனக்கென நானும்
எனக்கென நீயும்
நமக்கென நம் காதலுடன்
வாழவேண்டும்...

புரிதல் கொண்டு பூரிப்போடு
வாழவேண்டும்
எறிதல் கொண்டு
பிரிதல் எண்ணா வாழ்வு வேண்டும்...

உன் கை விரலுக்குள்
விரலாய் நானாக வேண்டும்
நீ கோபமென்றால் நான் மௌனிக்க
நான் கோபமென்றால்
நீ மௌனிக்க வேண்டுமே ....

ஆசை தான் நீ நானென
பேசிக்கொண்டே வேலைகளை
செய்திடவே ....
உனதான பணிகளை பார்த்து பார்த்து
செய்திடனுமே
வேர்த்து போகும் போது
நீ பாசமென்றதை கலந்தொரு பானம்
தரனுமே..

உந்தன் சிரிப்பு எந்தன்
முழிப்பாகுமே...
ஏதேதோ சேர்க்கிறேன்
ஏதோரு நினைவில்
தவிக்கிறேன் ..

நீ எந்தன் மூச்சாகி
ஏக்கம் தீர்த்திட வா
எங்கே நீ
நான் இங்கே ...

பொழுதை கிழித்து வரும்
வெளிச்சம் போல
தென்றல் வருடும்
பூவின் வாசனைபோல
எந்தன் யோசனை தீர்க்க வா...!

விடியல் வந்து
நாளொன்றும் புலருது
விடியலாய் நீயும்
வருவாயானால்
நானும் மலருவேனே
ஆனந்த அலையாய்...

கடலலைகளை ரசனை செய்தாலும்
ஏக்கமே நிறைகிறதே..
எங்கே நீ
எப்போது தான் வருவாயோ
வென தான் உயிரும்
அழுகிறதே ...

புதையும் பாதச்சுவடில்
உந்தன் பாத சுவடைத் தேடிடும்
பார்வையில் சோடித்தடங்களே
தெரிகிறதே..


அப்போது என்ன செய்வேன்
உன்னை எங்கனம் தேடுவேன்
நீ எங்கே
கானல்நீர் போல தூரத்தில்
இருக்கிறாயே...
துரத்தி பிடிக்க நினைத்தால்
மறைகிறாயே...

மங்கா ஒளியாய்
வந்து போனாய் என
கனாவும் கூச்சல் போட
ஏக்கமே என்னோடு
நிற்கிறதே...

சஹ்னாஸ் பேகம்
புத்தளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பழையதும் புதியதும்

கி.நடராசா

செல்வி பா. சிவாந்தினி தான் எழுதிய "வானம் வசப்படுமா?" என்ற தன் கவிதைத் தொகுப்பு நூலை குருநாதராகிய நீங்களே வெளியிட்டு வைக்க வேண்டும் என என்னை வேண்டிக் கொண்டார். அவர் என்னிடம் ஒப்படைத்த நூலை வாசித்த போது சங்க இலக்கிய கவிதைகளுக்கும் இந்நூற் கவிதைகளுக்கு மிடையே அமைப்பு, படிமம், குறியீடு, நடப்பியல் போன்றனவற்றில் ஓர் ஒருமைப்பாடு இருப்பதை உணர்ந்து கொண்டேன். அதன் விளைவாக புதுக்கவிதை எங்கிருந்து எவ்வாறு தோன்றியது என்பதையும் பழந்தமிழ் இலக்கியங்களுக்கும் இக்கவிதை நூற் பாக்களுக்கும் இடையிலான ஓர் ஒப்புமை கண்டதன் விளைவே இக்கட்டுரை ஆக்கமாகும்.

இரண்டாயிரம் வருடங்களாக வளர்ந்து வந்துள்ள நமது இலக்கியங்களைப் பலரும் பலவிதமாக வகைப்படுத்தியுள்ளனர். நில இலக்கியம், நீதி இலக்கியம், பக்தி இலக்கியம், காப்பிய இலக்கியம், சிற்றிலக்கியம், புராண இலக்கியம், உரைநடை இலக்கியம் என்றெல்லாம் வகைப்படுத்தும்போது உரைநடை இலக்கியத்தின் ஒரு கூறாக புதுக்கவிதையைக் கொள்ளலாம் போலத் தெரிகின்றது. ஐரோப்பியர் தொடர்பால் செய்யுள் இலக்கியத்துறை வளர்ச்சியை உரைநடை தன் உடைமையாக்கி புனைகதை இலக்கிய வடிவங்களைத் தோற்றுவித்தது. எனினும் தனது மூத்த பரம்பரையினரின் தன்னுணர்ச்சித் தனிப்பாடல்களை மீள் உருவம் செய்ய நம்மவர் முயன்றனர். இன்றைய இலக்கியம் எந்த மையத்தில் இருந்து தோன்றியதோ அந்த மையத்தை நாடி நிற்கின்ற நிலையை புதுக்கவிதை காட்டுகின்றது.

புதுக்கவிதை என்னும் போது அதற்கு எவ்வகையான பொருள் விளக்கம் கூறலாம் என்பதை சிந்திப்போம். பாடு பொருள் புதிது; பாடிய முறை புதிது; பாடல் வெளிவந்த வடிவம் புதிது. இதனையே பாரதி,

"சுவை புதிது பொருள் புதிது
வளம் புதிது சொல் புதிது"

என்று கூறியுள்ளார்.

கால மாற்றங்கள் மாறும் போது இலக்கியத்துறையிலும் மாற்றம் நிகழ்வது தவிர்க்க இயலாதது. நம் பழந்தமிழரைப் பின்பற்றி உடன்கட்டை ஏறுதல், மடல் ஏறுதல் என்பன அழிந்து போயின. மானுடச்சிக்கல்கள், வாழ்க்கைப் போராட்டங்கள், அறிவியல் துறை வளர்ச்சி, அதன் விளைவாக ஏற்பட்ட சமுதாய மாற்றங்கள் என்பன மரபுத் தடங்களில் கால் பதித்த கவிஞனுக்கும் சலித்துப்போக நெகிழ்ச்சியான சமுதாயத்திற்கு வாழ்வளிக்கும் கவிதைகளை எழுத ஆரம்பித்தான். உரை நடையின் தாக்கத்திற்கேற்ப செறிவான கருத்து, அதனை வெளிப்படுத்துவதற்கு பொருத்தமான உத்தி, அதனை வெளிப்படுத்தும் ஒலிநயம், உள்ளடக்கத்தை வெளிப்படுத்தும் படிமம், குறியீடு என்ற வகையில் தோன்றியதே புதுக்கவிதை.

கவிதை ஒரு சடப்பொருள் அன்று. இயங்கும் உயிர் பொருள் என்றால் அக்கவிதையின் உயிர் உணர்ச்சிதான் எனலாம். உணர்வின் வழியே ஓசையும், ஓசையின் வழி சொற்களும் உருவமும் அமைந்து விடுகின்றன. பேராசிரியர் செல்வநாயகம் வகுப்பறையில் கற்பித்த ஞாபகம் இவ்விடத்தில் நினைவுக்கு வருகின்றது. கவிதையின் கூறுகள் என இவற்றுடன் கற்பனை, கவிதைக்கு பாதையிடும் ஒலிநயம் கவிதைப் பொருளை எதிரொலிக்கச் செய்கின்றது. சொற்கள் மந்திரச் சொற்களாகி, கவிதையை நிலை பெறச் செய்யும், அணி நலன்களும் கவிதையை அழகுபடுத்துகின்றன.

சங்க இலக்கியத்தில் புறநானூறு, பரிபாடல் போன்ற நூல்களில் உள்ள சிலபாடல்கள் யாப்பமைதிச் செய்யுட்களாயினும் அங்கு உரை நெகிழ்ச்சி இருப்பதனை அவதானிக்கலாம். உதாரணமாக,

"இரு முந்நீர் குட்டமும்
வியன் ஞாலத் தகலமும்
வளி வழங்கும் திசையும்(புறம் –20–1–3–வரிகள்)

என்ற பாடல் வரிகளைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுக்கவிதையின் முந்தைய நிலைகளின் அடிச்சுவட்டினை உணர முடிகின்றது. "உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக அமையும் சிலப்பதிகாரத்தின் கானல்வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை உரைப்பாட்டு மடைப்பகுதிகளும் கவிதையின் உரைநடையின் தாக்கத்தை தெளிவாக புலப்படுத்துகின்றன. உரைப்பாட்டுகள் உரைநடை போல அமையினும் ஒலிநயமும் கவிதானுபவமும் பெற்று, கவிதைக்கும் உரைநடைக்கும் இடையேயுள்ள நெருங்கி தொடர்பை சுட்டிக் காட்டுகின்றது. பழம் பெரும் இலக்கணக்காரர் எதிர்கால நடப்பிலை அறிந்தோ அறியாமலோ தீர்க்க தரிசனமாக புறநடைகளையும் வழுவமைதிகளையும் கூறிச் சென்றனர்.

தொல்காப்பியர்,

"பாட்டிடை வைத்த குறிப்பினாலும்
பாவின் றெழுந்த கிளவியானும்"

என தொடர்ந்து,

"உரைநடை வகையே நான் கென மொழிய"

எனக் கூறியிருக்கின்றார். மேலும் செய்யுட்களில் கூறப்பட்ட யாப்பு பொருளினின்றும் மாறுபட்ட நிலையை உணர்த்த,

"யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது"

எனவும் கூறியிருக்கின்றார். நன்னூலார் கூட பழைய மரபுகள் கழிதலை,

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினான்"

எனக் கூறி புதுமை தோன்றுவது நல்லது என நெறிப்படுத்தியுள்ளார். இக்கூற்றுக்கள் புதுக்கவிதையின் தோற்றத்திற்கு அரண் செய்யும் சுவடுகளாக விளங்குகின்றன.

ஐரோப்பியர் வருகையுடன் உரைநடை வளர்ச்சியும் அறிவியல் சிந்தனையின் தாக்கமும் முதன்மை பெறத் தொடங்கியது. அறிவியல் துறையில் உணர்விலக்கியம் அறிவிலக்கியம் என இருவகை இலக்கியம் வளரத் தொடங்கியது. உணர்விலக்கியம் வாழ்வியல் உண்மைகளை இலக்கிய ரசம் பெறத் தந்தது. அறிவிலக்கியம் கருத்துக்களை இயல்பாகவும் அளவான மொழிநடையிலும் தந்தது. கட்டுரைகள், ஆய்வு நூல்கள் போன்ற அவ்விலக்கியங்களாகும். பாரதியின் வருகையுடன் எளிமையான சிந்தனைகளிலும் எளிமையான படைப்புக்களிலும் மனம் ஈடுபடத் தொடங்கியது. நுகரும் கலைகளிலும் இந்த நிலைமையை மனம் நாடியது. மனிதமன விடுதலை போல யாப்பு விடுதலையையும் மக்கள் உணர்ந்தனர். தளைகளை அறுத்தெறிய விரும்பிய மனம் புதுக்கவிதையில் நாட்டம் கொண்டது. வால்ட் விட்மனின் புதிய கவர்ச்சியுடனும் பாரதியின் "காட்சிகளின்" மூலமும் புதிய கவிதை தமிழில் புதுப்பொலிவு பெறத் தொடங்கிது.

சங்ககால தன்னுணர்ச்சிப் பாக்கள், கலிங்கத்துப் பரணியின் சாரிலிசப்போக்கு, சித்தர் காலத்துச் சிந்தனைகள் உரைவிளக்கம் தந்து துணிவு, ஆகியவற்றுடன் புதியன நாடும் வேட்கை, சமூகச் சூழல் உந்துகள், மேல்நாட்டுக்கவிதைகள் இவற்றோடு புதுக்கவிதை நிலையான இடத்தைப் பெற்றது.

மனிதன் படைக்கும் இலக்கியம் காலத்திற்கேற்ப புதிய வடிவங்களைப் பெற்ற போதிலும் பழைய இலக்கியங்களின் தொடர்பை அடிப்படையாக விடுவதில்லை என டாக்டர் மு. வரதராசன் இலக்கிய மரபு என்னும் நூலில் கூறியுள்ளார். செய்யுளில் உணர்ச்சியும் கற்பனையும் கலந்து கவிதையானது கவிதையில் உரைநடை நெகிழ்ச்சியும் தெளிவும் அமைந்து புதுக்கவிதை வடிவம் பெற்றது.

கவிதை என்றதும் எல்லோர் மனதிலும் சீர், தளை, அசை போன்ற யாப்பு எண்ணம் வந்து விடும். புதுக்கவிதைகள் யாப்பிலக்கணத்தை மீறப் பிறந்தன என்பர். ஆனால் புதுக்கவிதைகளுக்கும் யாப்பிலக்கணம் உண்டு. அந்தக் கவிதைகளும் சந்தம், உணர்ச்சி, ஒலி நயம், கற்பனை போன்றவற்றை பெற்றே விளங்குகின்றன. புதுக்கவிதையில் உருவத்தை விட உள்ளடக்கத்திற்கே முதன்மையளிக்கப்படுகின்றது. இருந்தாலும் பழைய யாப்பு வடிவத்திலும் சில புதுக்கவிதைகள் பிறக்கின்றன.

"செருப்பு போடாது செல்லும்
சேயிழாய்; சற்று நில் இச்
சுரப்புக்குள் உனது பாதம்
தோய்கிறதே, ஐயோ, என்
விருப்புக்கும் உரியபெண்ணே
வீதியில் மழை பெய்யுங்கால்
இருத்துப்போல் உனது மென்கால்
சேற்றிலே குமையலாமோ"

(அழியா நிழல்கள் – எம்.ஏ.நுஃமான்)

இந்தக்கவிதையை படிக்கும் போது விருத்த ஓசையோடு பயின்று வந்திருக்கின்றது. ஆனால் இது ஒரு புதுக் கவிதை என்பதை மறந்துவிடக் கூடாது.

சங்க காலச் செய்யுட்களும் புதுக்கவிதை என்ற நவீன கவிதைகளுக்குமான தொடர்பு மிக நெருக்கமாக வரிப்பதை அவதானிக்க முடிகின்றது. சங்க காலச் செய்யுட்கள் சொற் சுருக்கமும் பொருட் செறிவும் கொண்டன. யாப்பு வரம்பிற்கு உட்பட்டு அழகாக அமைக்கப்பட்டுள்ளன. இதேபோன்று புதுக்கவிதையும் சொற் சுருக்கமும் பொருட் செறிவும் கொண்டமைந்தே காணப்படுகின்றன. பேச்சுப் பாங்காக அமைந்த பல செய்யுட்கள் வடிவ நெகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றன. இலக்கிய வழக்குச் சொற்களையே கையாள வேண்டும் என்பதை தவிர்த்து தம் சமூக வழக்கில் உள்ள சொற்கள் ஒலிக் குறிப்புகள் தொடர்கள் நாட்டார் பாடல் வடிவங்கள் அவற்றிற்கு இடங்கொடுத்து எழுந்த புதுக்கவிதை இயல்புகளைச் சற்று இலக்கியத்திலும் காண முடிகின்றது.

நின்னே போலும் மஞ்ஞை யாலநின்
நன்னுதல் நாறு முல்லை மலர
நின்னே போல மாமருண்டு நோக்க
நின்னே யுள்ளி வந்தனென்
நன்னுதலரிவை காரினும் விரைந்தே

(ஐங்குறுநாறு492)

என்ற செய்யுளில் யாப்பு நெகிழ்ச்சியை காண முடிகின்றது.

புதுக்கவிதையின் ஓர் இன்னொரு முக்கிய அம்சம் நடப்பிலை வெளிப்படுத்துதல். இந்தப் பண்பு சங்க, கால கவிதைகளில் காணப்படுகின்றது. உள்ளதை உள்ளவாறு கூறுதலே சங்க இலக்கியம். இயற்கையின் இயல்பு நெறி தவறாக படைப்பு, எதுகை மோனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்காரங்களை தவிர்த்தல் போன்ற பண்புகளைக் கொண்டிருந்தன. அணி அலங்காரங்களை பயன் படுத்தியவேளை அவை உணர்வின் வழி வந்தனவாகவே அமைந்தன.

“நீரின் வந்த நிமிர்ப் புரவியும்
காயின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அதிலும்”

என்ற பட்டினப்பாலைப் பாடல் வரிகளில்(185-188) கற்பனை எதுவுமற்ற நடப்பியலையே வெளிப்படுத்தின. இதுபோல பா. சிவாந்தினியின் வானம் சப்படுமா? என்ற கவிதைத் தொகுதியிலிருந்து ஒரு பாடல் வருமாறு.

“மேகங்களின் துரோகத்தால்
சூரியன் மறைக்கப்பட்டது
குளத்தில் உள்ள
தாமரைகள் எல்லாம்
சேறுகளாலும்
குப்பை கூழங்களாலும்
போதைப் பொருட்களாலும்
பகட்டு கலாசாரங்களாலும்
தொழில் நுட்ப மாயைகளாலும்
தன் நிற மண குணங்கள்
இழந்து போகின்றன.

இப்பாடல் வரிகள் இளைஞர்களின் சமூகச் சீர்கேடு களை கற்பனை எதுவுமில்லாமல் நடப்பியலாக கோடிட்டு காட்டுகின்றது.

சங்ககால இலக்கிய வடிவம் தனிப்பாடல்கள் வகையைச் சார்ந்தன. அவை குறும்பாடலாகவும் இருந்தன. சில நெடும்பாடலாகவும் இருந்தன. ஐங்குறு நூற்றுச் செய்யுட்கள் சிறு செய்யுளகத்தே நிரம்ப பொருட்களை செறிவாக அமைந்துள்ளன. வடிவச் சுருக்கம் கொண்ட சங்கப்பாடல்கள் குறிப்புப் பொருள் நிரம்பிய பாடல்களாக அமைந்துள்ளன. உள்ளுறையும் இறைச்சிப்பொருளும் கொண்டு அவை அமைந்திருக் கும். இந்த பண்பு இன்றை புதுக்கவிதைகளில் பரவலா காணப்படுகின்றன. சுறுசுறுப்பாக இயங்கிய சங்ககால சமூகம் நீண்ட இலக்கியங்களை விரும்பவில்லை. அது போல தொழில் நுட்ப யுகமொன்றில் வளரும் இக்கால மனிதனுக்கு நீளமான படைப்புக்கள் நெஞ்சில் நிலைக் காது என்பதை உணர்ந்து கொண்டனர். குறும்பா, ஹைக்கூ போன்ற புதுக்கவிதை வளர்ச்சிக்கும் இதுவே காரணம். சங்க இலக்கியம் கடைப்பிடித்து வந்து சொற் சிக்கனத்தையும் சிறு வடிவத்தையும் மீண்டும் புதுப்பித்து மெரு கூட்டியதே புதுக்கவிதை.

ஓசையை அடிப்படையாகக் கொண்டதுதான் யாப்பு. யாப்பின் வகைகளை இனம் பிரித்துக்காட்ட உதவு வதே யாப்பு. ஓசை செவிக்குரிய இன்பம். தற்போது காலம்” மாறி கருத்துக்குரியதாக மாறிவிட்டது. உணர்வின் அடிப்படையில் உள்ளடக்கமே உயிராக மாறிவிட்டது. கவிதையின் இறுக்கத்திற்கும் சொற் சிக்கனத்திற்கும் இன்று வடிவம் காரணமா கின்றது. கருத்தை தெளிவாக விளக்குகின்றது. சங்க இலக்கியங் களில் இது உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள் என உரைக்கப்பட்டது. சங்ககால காட்சிப் படுத்தல் இயற்கையின் சூழலில் தோன்றியது. இன்றைய கவிஞன் சமூக நடப்புக்களின் சூழலில் வாழ்பவன் இதனை

இன்னொரு வகையில் சங்ககாலப் படிமங்கள் தற்சுட்டுப் படிமங்கள் என்றும் தற்கால கவிஞரின் படிமங்கள் பொது நிலைப்படிமங்கள் என்றும் சிலர் குறிப்பிடுகின்றனர்.

உதாரணத்திற்கு ஓர் ஒப்பீட்டினை அவதானிக்க முடியும்.

கையில்லாதவன்
கண்ணில் வழியும்
நீரைத் துடைக்க
விரும்புவதைப்போல
சுலபமாக நிறைவேற முடியாத ஆசைகள்
உன் மனதில் சுரக்கின்றன.”

இப்புதுக்கவிதையில் கையில்லாதவன் கண்ணீரைத் துடைக்க ஆசைப்படும் மன உணர்வு படிமமாக காட்டப் பட்டுள்ளது. இது போல குறுந்தொகையில் ஒரு பாடலை அவதானிக்கலாம்.

ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று இந்நோய்
(குறுந்தொகை-பாடல் -58)

தலைவிமேல் கொண்ட நோயை தன்னாலும் தீர்க்க முடியவில்லை. பிறரிடம் சொல்லியும் தீர்க்க முடிய வில்லை. அது தன்னை அழிக்கின்றது என நொந்து கொள்கிறான். தன்னுடைய காம நோயை அடக்கிக் கொள்ளும் ஆற்றலும் பிறரிடம் வெளியிட துணிவு மில்லாது தலைவன் தவிக்கின்றான்.

சங்க இலக்கிங்களில் குறியீடு ஒரு முக்கியமான அம்சமாக விளங்கியது. போல புதுக்கவிதையிலும் குறி யீடு ஒரு முக்கிய அம்சமாக விளங்கியது.

ஒரு கருத்துக்குள் மறைமுகமாக உணர்த்தப் படும் இன்னொரு கருத்தாக அமைவதே குறியீடு என்று கூறலாம். சிறியதொரு விளக்கத்தை அவதானிக்கலாம்.

1) அவள் “கண்ணகியைப் போலும் கற்பரசி” இது வெளிப்படையான உவமை
2) “கற்பரசி கண்ணகி” இது ஓர் உருவகம்
3) இவள் கற்பு கண்ணகி கற்பு” இது கருத்துப் படிமம்
4) “மலர்க்கொடி ஒரு கண்ணகி” இங்கு கண்ணகி என்ற பெயர் மட்டும் குறிப்பிடப்படுகின்றது. இது குறியீடு மலர்க்கொடி என்ற பெண் கற்பரசியாக உணர்த்தப்படுகின்றது.

ஒரு விடயம் இங்கு உணர வேண்டியுள்ளது. சங்க இலக்கியத்தில் உள்ளுறை இறைச்சி என்ற இரண்டையும் வேறுபடுத்துவதில் பலர் முரண்படுவது போல புதுக்கவிதையில் படிமம், குறியீடு என்ற இரண்டையும் வேறுபடுத்துவதிலும் சிலர் குழப்பமடை கின்றனர்.

சங்க இலக்கியங்களின் பேச்சோசைப்பாங்கு இன்றை புதுக்கவிதையில் பிரதான இடத்தினைப் பெற்றுள்ளது. ஓர் சிறிய வேறுபாட்டினை அவதானிக்க லாம். சங்ககால அகப்பாடல்கள் கூற்று வடிவமாகவே காணப்படும். தலைவன், தலைவி, தோழி போன்ற பாத்திரங்களின் கூற்று பேச்சோசைப் பாங்கிலேயே அமைந்திருக்கும். அவை எளிமையாகவும், கவிதை நெருக்கத்தை ஏற்படுத்தக் கூடியனவாகவும் அமைந் துள்ளன. மாந்தர் மாந்தரோடு பேசுதல், நெஞ்சோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளர்த்தல், அஃறிணைப் பொருள்களோடு பேசுதல் என்பன சங்க இலக்கியத்தில் இயல்பாக காணப்படும்.

இளமை பாரார் வளம் நசைக் சென்றோர்
இவணும் வாரார் எவணரோ? என
பெயல் புறத்தந்த பூங்கொடி முல்லை
தொகு முகை இலங்கு எயிறு ஆக
நகுமே தோழி நறுந்தண் காரே

கார்காலத்தில் வருவேன் என்று சொல்லிச் சென்ற தலைவன் குறித்த காலம் வந்தும் வராமையினால் தனது நிலையை தோழிக்குத் தலைவி சொல்லுகின்றாள். இளமை நிலையில்லாதது. அதனை மீளப் பெற முடியாது. பொருள் எக்காலத்தும் தேடக் கூடியது. இளமைக் காலம் கழிந்த பின் வாழ்க்கை என்ன பயனுடையது. அவர் எங்கேயுள்ளார் எனக்கேட்டு கார் காலம் என்னைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்கின்றதே. சிரிப்பதற்கு முல்லை அரும்புகள் பற்களாக உருவகிக் கப்பட்டுள்ளன. இந்த குறுந்தொகைப் பாடலில் பேச்சோசைப் பாங்கின் இயல்பை தலைவியின் கூற்று வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

புதுக்கவிதையின் நோக்கங்களில் ஒன்றே பேச்சமைதி. சமகால மக்கள் வழக்கில் பழுகும் சொற் களை உணர்வுகளோடு ஒலிக்குறிப்பில் வெளிப்படுத்து வதே புதுக்கவிதை. சிவாந்தினியின் கார்த்திகைமாதம் என்ற கவிதையில் சமூகச் சீரழிவைக் கண்டு இற்கையே கண்ணீர் விடுவதாக அக்கவிதையின் சில வரிகள் வருமாறு:

"பணத்திற்கும் குணத்திற்கும்
வேடம் தரிக்கின்ற உறவுகள்
புகழுக்கும் பெயருக்கும்
ஊழல்களுக்கும் கையூட்டுக்கும்
ஒளிந்து கொள்கிறது நேர்மை"

என பலவும் கூறி,

"புண்ணியர்களின் நெஞ்சிலே
பூத்த கனவுகள்
கண் முன்னே
கருகுவது கண்டு
கண்ணீர் வடிக்கிறது
கார்த்திகை மாதம்"

என அக்கவிதை செல்கின்றது. நடப்பியலில் மக்கள் வாழ்வில் உள்ள சொற்களே இக்கவிதையில் இடம் பெற்றுள்ளது.

"புதுக்கவிதை, சங்க இலக்கியம் இரண்டிற்கும் இடையே ஒரு ஒப்புமை காணப்படுகின்றது. "புதுக் கவிதைக்கு சரியான உதாரணம் சங்கக் கவிதைகள் என்பது என் முடிவு. தற்காலப் புதுக்கவிதையே சங்க இலக்கியத்தின் வாரிசாக ஏற்படுத்துவதாக காணப்படு கின்றது" என சி.சு. செல்லப்பா குறிப்பிடுகின்றார். ஓர் இலக்கியம் நிலையாக நின்று உறுதியாக வாழ்வதற்குரிய காரணங்களில் ஒன்று அதன் கண் சமகால மானுடத் தின் பிரதிபலிப்பாகும். மனிதனது தோற்றம் மறைவு என்பனவும் மனிதரின் வீரம், கொடை, கருணை போன்ற பண்புகளும் இன்பம், துன்பம், அவலம், அழுகை, சினம் போன்ற உணர்வுகளும் போர், வேட்கை, மான உணர்வு, வஞ்சகம், ஆப்பு, லஞ்சம் போன்ற பொருள்நிலை கவிதை நிலைத்து நிற்பதற்கு ஊன்று கோல்களாகும். காலம் மாறும், பருவம் போகும், மனிதர்க்கு அழிவு நேரிடலாம். ஆனால் மனித வாழ்வோடு ஒட்டி அடிப்படையான உண்மைகளும் தன்னடைவுகளும், உணர்வின் அமைப்புவரும் என்றுமே மாறுவதில்லை. இந்த இயல்பு சங்க இலக்கியத்திற்கும் புதுக்கவிதைக்கும் பொருத்தமாகும். பழைய சங்கப்பாடல்களில் கட்டப் பட்டஓர் உயர்ந்த கோபுரமாக இன்று புதுக்கவிதை காணப்படுகின்றது.

---




# "ராணி" சிங்களத் திரைப்படம் இலங்கை அரசியலின் மறுபக்கப் பார்வை

■ ஏ.எஸ். சற்குணராஜா

குழந்தை ஜனனத்துடன் ஆரம்பித்து நியாயமற்ற மரணங் களைக் கேள்விக்குள்ளாக்கும் முறையில் ஊடகவியலாளர் ரிச்சர்ட் டி சொய்சாவின் மரணம் திரைக்கதையாகியிருக்கிறது.

நாற்பது வருடங்களுக்குமுன் லக்ஸ் சோப் விளம்பரக் கலண்டரை இளமை அழகுடன் அலங்கரித்த முன்னணி சிங்கள நடிகை ஸ்வர்ணா மல்லவஆராச்சி முதிர்ந்த வயதில் முதுமையான பாத்திரத்தின் நாயகி ராணியாக

துடுக்குடன், இயற்கையான, பாத்திரமாக மாறி ஒப்பனை களின்றி உலாவருகின்றார்.

வழமையான திரைப்படக் கலாசாரத்திலிருந்து விலகிய போக்கு, அடிதடிகள், டூயட், லவ்சீன் இல்லாமலே விறுவிறுப்பான நகர்வு. இரண்டேகால் மணி நேரப்படம் அதற்குள் முடிந்து விட்டது போல் உணர்வு.

மலிந்த மரணங்கள் மறைவாகக் குறியீடுகள் மூலம் உணர்த்தப்படும் விதம்.

தேவையற்ற ஒப்பனைகள், ஆடம்பரச் செலவுகள் எதுவும் அற்ற உயிரோட்டமாக உணர்வுகளைப் பிரதிபலிக்கும் நடிப்பிற்கான பாத்திரத் தெரிவு.

எளிமையான இயற்கையோடிணைந்த காட்சியமைப்பு.

வெளிப்படையாகவே உதாரணப்படுத்தப்படும் மேல் தட்டு வர்க்கத்தின் வாழ்க்கை முறைகள்.

அனுதாபங்களைத் தம்பக்க அரசியலுக்கு தத்தெடுக்க முயல்பவர்களின் கலையும் வேடங்கள்

ஆட்சிகள் மாறலாம். காட்சிகள் மாறலாம். ஆனாலும் தண்டனைக்குரியவர்கள் குதூகலம், கும்மாளத்துடன் இன்னமும் நாட்டில் சுதந்திரமாக..

சிங்கள சினிமாவை உலகத்தரத்திற்கு கொண்டுசெல்லும் முயற்சியின் ஓர் நகர்வாக எண்ணும் வகையில் இவற்றைத் துணி வுடன் தொட்ட இயக்குனர் அசோக ஹந்தகமவிற்கு ஒருசபாஷ்.


பயணம் தொடரட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜினிதேவி சிவலிங்கம்

# அம்மாவும் யூலியும்



அடைமழை பெய்து சற்று ஓய்ந்திருந்தது. இரவும் பகலும் விடாது மழை பெய்தமையால் வீட்டின் சுற்றுப்புறம் முழுவதும் வெள்ளநீர் தேங்கியிருந்தது. வீட்டைச் சுற்றி மதில் கட்டியிருந்தமையால் வெள்ளநீர் எமது காணியில் தேங்கியிருந்தது போலவே எமது வீட்டிற்கு அருகிலுள்ள வீடுகளிலும் மழை நீர் தேங்கி யுள்ள மழைநீரும் வடிந்துவிடும். எங்கள் வீட்டில் உள்ளவர்கள் முற்றத்தில் கூட இறங்க முடியாது கஷ்ரப் பட்டது போலவே எமது அயல் வீடுகளில் உள்ளவர் களும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

அடைமழை பெய்து குளிர்காற்றும் வீசியதால் வெளிவராந்தாவிற்கு சென்று இருக்க முடியாது கோலுக் குள் போடப்பட்டிருந்த கதிரையில் அமர்ந்திருந்தேன் அம்மாவின் நடமாட்டத்தை காணவில்லை. எனவே படுக்கையை விட்டு எழும்பவில்லை என எண்ணினேன். எனவே என் தங்கை சுமதியிடம் "சுமதி... அம்மா இன்னும் எழும்பேலையே வெளியிலும் சரியான குளிராயிருக்குது. அவ ஆறுதலா எழும்பட்டும்..." நான் கூறி வாய் மூடுமுன் "அண்ணை அம்மா நேரத்தோட எழும்பி வெளி விறாந்தைக்குப் போட்டா இப்பதான் அவவுக்கு ரீ குடுத்திட்டு வாறன்..."

"எங்களாலையே குளிரை தாங்க முடியாமல் இருக்கு இந்த அம்மா எப்பவும் தான் நினைச்சபடிதான் நடப்பா. குளிருக்க போய் இருந்து தடிமன், காய்ச்சல் வந்து கஷ்ரப்பட்டால்தான் தெரியும்..." என்று கூறியவாறு வெளியிலே வருகின்றேன்.

அம்மா தன் செல்லப்பிள்ளை யூலிக்கு பிஸ்கெற் கொடுத்துக் கொண்டிருப்பதை கண்டு அவரின் அருகில் இருந்த கதிரையில் அமர்ந்து "அம்மா.... மழைகாலம் முடியும் வரையும் வெளியில வராமல் உள்ளுக்கு இரணை. குளிருக்கு தடிமன் வந்தால் நீதான் அம்மா கரைச்சல் படுவாய். யூலியை வீட்டில் உள்ள மற்றவை பார்க்க மாட்டினமே...." நான் கூறியதும் "தம்பி.... யூலி என்னை கண்டால்தான் சாப்பிடும் எனக்கும் அதுக்கு கிட்ட இருந்தால் தான் நின்மதி அதுதான் வெளியில வந்தனான்..."

"அம்மா... யூலியோடைதான் உன்ரை பொழுது போகுதெண்டு தெரியும். ஆனாலும் அதுக்கு சாப்பாடு குடுக்கிறதும் அதை தொடுகிறதும் தொட்டகையை சோப் போட்டு கழுவாமல் இருக்கிறதும் கிருமித் தொற்று வந்திடும். சொன்னால் கேட்காமல் இருந்திட்டு வருத்தம் வந்தால்தான் நான் சொன்னது விளங்கும்...."

யூலி விஷயத்தில் மட்டும் யார் என்ன சொன்னா லும் அம்மா அதனை காதில் வாங்கிக் கொள்ளமாட்டார் என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்தது. யூலியும் அம்மா அன்போடு "யூலி.... சாப்பிடு ...." என்றால் மட்டுமே சாப்பிடும். வேறு யார் கொடுத்தாலும் சாப்பிடாது அடம்பிடிக்கும். அம்மா போசினாலோ தடி எடுத்து அடிக்க கை ஓங்கினாலோ அந்த நாள் முழுவதும் ஒன்றும் சாப்பிடாது. தனக்கு முன் வைக்கப்படும் தண்ணீ ரைக்கூடக் குடிக்காது கண்ணை மூடிக் கொண்டிருக்கும்.

அம்மாவின் காவல் தெய்வம் யூலி என்று நாங்கள் சொன்னால் அம்மாவிற்கு கோபம் வந்துவிடும். "முற்பிறப்பில் இது என்ர பிள்ளையாக இருந்திருக்க வேணும் அதுதான் இப்பவும்அது என்னை சுற்றியே வருகுது...." எனப் பெருமையாகக் கூறுவார்.

அம்மாவின் பொருட்கள் எதையும் நான் உட்பட எவரும் தொடமுடியாது. மீறி யாராவது தொட்டால் அது போடும் சத்தத்தில் எல்லோரும் அச்சத்தில் அரண்டு விடுவார். அதனால் அம்மாவின் பொருட்கள் எதையும் யூலிக்கு முன் யாரும் எடுப்ப தில்லை. எனக்கு யூலியை கண்டால் சிலசமயம் வெறுப்பு கூட வரும் காரணம் அம்மாவின் அருகில் கூட எங்களை நெருங்க விடாமல் பாய்ந்து வந்து அருகில் நின்று எங்களை எச்சரிப்பது போல் குரைப்பதும் அம்மா அதன் தலையைத் தடவுவதும் எனக்குப் பிடிக்காத விடயம்.

எங்களுடைய கோயில் திருவிழா நடைபெற்ற காலம் அம்மா வீட்டிலே தனிமையில் விட்டுப் போக விருப்பமில்லாமல் என் தங்கையிடம், "சுமதி.... அம்மாவை வீட்டில் தனிய விட்டிட்டு எப்பிடி நாங்கள் எல்லாரும் கோயிலுக்கு போறது. எங்களில யாரெண்டாலும் ஒருதர் அம்மாவோடை நிற்பம்...."





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சொன்னதை கேட்டவுடன் அம்மா "தம்பி என்னோடை யூலி நிற்குது நீங்கள் கோயிலுக்கு போட்டு வாருங்கோ....." யூலியும் அம்மாவின் காலுக்கு அருகில் இருந்து எங்களைப் பார்த்து வாலை ஆட்டியது. அம்மாவைத் தான் கவனமாகப் பார்ப்பேன் என்பதே அதற்கு அர்த்தம் என எண்ணிக் கொண்டேன். சுமதி முன் வீட்டு வசந்தாவை அழைத்து வந்த பின்னரே நாங்கள் அனைவரும் கோயிலுக்குச் சென்றோம்.

வீட்டிற்கு வந்ததும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் காத்திருந்தது. வசந்தா வீட்டிற்கு ஏதோ அவசரமாக போய்விட்டு உடனே வருவதாக சொல்லிவிட்டு வீட்டிற்கு சென்றிருந்த நேரம் வீட்டின் முன்புற வாசல் வழியாக பாம்பொன்று வந்திருக்கின்றது. அதனை கண்டதும் யூலி குரைத்துக் குரைத்து அதை அம்மாவிற்கு அருகில் வராமல் தடுத்திருக்கின்றது. அதே நேரம் நாய் விடாது குரைத்த சத்தத்தைக் கேட்டு பதற்றத்துடன் வசந்தா ஓடி வந்து பார்த்த போது யூலி பாம்பை தடுத்து குரைப்பதைக் கண்டு தடி எடுத்து பாம்பை விரட்டிய செய்தி கூறியதும் நாங்கள் அதிர்ச்சியடைந்தோம்.

அன்று நடைபெற்ற சம்பவத்திற்குப் பின் அம்மாவிற்கும் யூலியின்மீது பாசம் அதிகமாகிவிட்டது அம்மாவை பாம்பிலிருந்து காப்பாற்றியதனால் எங்கள் எல்லோருக்கும் யூலியின் மீது அன்பு அதிகமாகி விட்டது. அதை நாங்கள் மிக அக்கறையாக கவனித்துக் கொண்டோம்.

வீட்டிற்கு தனக்கு தெரிந்தவர்கள் வந்தால் வாலை ஆட்டும் தெரியாதவர்கள் யாரும் வீட்டிற்குள் நுழைய முடியாது. இப்போது அம்மாவின் பொருட்களை வீட்டில் உள்ள நாங்கள் தொட்டாலும் குரைக்காது. எங்களை பார்த்தவாறு அம்மாவின் அருகில் அமர்ந்திருக்கும். இப்போது யூலி எங்கள் அம்மாவிற்கு மட்டுமல்ல எல்லோருக்கும் மெய்ப்பாதுகாவலனாகி விட்டது.

அம்மாவின் ஆசைப்படி யூலிக்கு அழகான வெள்ளிச்சங்கிலி ஒன்று வாங்கி அதன் கழுத்தில் அணிந்து அழகு பார்த்ததுடன் அம்மாவிற்கு அருகிலிருக்கக்கூடியதாக இரும்புப் பைப்பொன்றையும் நட்டு அதிலே சங்கிலியை பிணைத்து விட்டோம். பிணைக்காமல் விட்டால் வீட்டிற்கு யாரும் வரமுடியாது. அவர்களை கடித்து குதறிவிடும். அதனால்தான் அதனை சங்கிலியில் கட்டிவைக்கும்படி ஆலோசனை கூறிய போதிலும் அம்மாவிற்கு யூலியை சங்கிலியில் பிணைத்து வைத்திருப்பது விருப்பமில்லாத போதிலும் அரை மனதுடன் சம்மதித்தார்.

வீட்டிலே நாங்கள் இல்லாத நேரங்களில் சங்கிலி கழற்றி விடுவதனால் அது வீட்டை சுற்றி ஓடி திரியும் அதன் பின்னர் அம்மா "யூலி சாப்பிட ஓடி வா..." என்று கூப்பிட்டதும் அம்மாவிடம் ஓடி வரும். எங்களுடைய வீட்டிற்கு பருத்தித்துறையிலிருந்து எள்ளுப்பா கொண்டு வரும் முத்துப்பிள்ளை ஆச்சி வீட்டிற்கு வந்திருந்தார். கேற்றைத் திறந்து அவர் வீட்டிற்கு முன்புறம் வந்ததும் சங்கிலி கழற்றிய நிலையில் நின்ற யூலி பாய்ந்து சொன்று அவர் கைகளில் வைத்திருந்த பையை பற்றி இழுத்தது. அம்மா "யூலி வா... இஞ்ச..." என்று அதட்டி கூப்பிட்டதும் அம்மாவின் அருகில் ஓடி வந்தது முத்துப்பிள்ளை ஆச்சியும் "யூலியை பிடிச்சு கட்டுங்கோ. அது கட்டாமல் நிக்குதெண்டால் நான் வந்திருக்கமாட்டன். இப்ப நான் கொண்டு வந்த எள்ளுப்பாக்களெல்லாம் கீழ விழுந்திட்டுது எப்பிடி இதை எடுத்து விக்கிறது..." அவவின் அலறல் சத்தம் கேட்டு நாங்கள் வெளியே வந்தோம்.

"அம்மா... நாங்கள் சொல்ல நீ கேட்கிறதேயில்லை இப்ப முத்துப்பிள்ளை ஆச்சிக்கு கீழ விழுந்த எள்ளுப்பாக்களுக்கெல்லாம் காசு குடுக்க வேணும் அதுக்கு என்ன செய்யிறது. "முத்துப்பிள்ளை ஆச்சி கீழ விழுந்து பழுதாகின எள்ளுப்பாக்களுக்கு எவ்வளவு காசெண்டு சொல்லுங்கோ நான் தாறன். எவ்வளவு கஷ்ரப்பட்டு செய்து கொண்டு வந்தனீங்கள் சொல்லுங்கோ..." நான் கூறியதும் "தம்பி இருபது எள்ளுப்பாக்களை ஒரு பாக்கில போட்டுக்கொண்டு வந்தனான். ஒரு எள்ளுப்பா நாற்பது ருபாவுக்கு குடுத்தனான் நீங்கள் முப்பது ருபா தாருங்கோ... நாயை இனிமேல் அவிட்டு விடாதேங்கோ".

நான் வீட்டிற்கு உள்ளே சென்று அவர் சொன்ன காசை எடுத்து வந்து அவரிடம் கொடுத்தேன் "தம்பி... நான் முதல்வேற ஆக்களுக்கு குடுத்திட்டுத்தான் உங்களுக்கு கொண்டு வந்தனான். அது வீணாப்போச்சு. அடுத்த முறை வரேக்க உங்களுக்கு கொண்டு வாறன்...." கூறியவர் எங்களிடம் விடை பெற்றார்.

அவர் சென்றதும் தங்கை சுமதி "அம்மா... ஏனணை யூலியை அவிட்டு விட்டனி நல்ல காலம் அது எள்ளுப்பாவை மட்டும் பிடிச்சு இழுந்தது முத்துப் பிள்ளைஆச்சிக்கு கடிச்சிருந்தால் எவ்வளவு பிரச்சினை இப்ப தேவையில்லாமல் அண்ணை காசு குடுக்க வேண்டியதா போச்சு...." என்தங்கை கூறியதை கேட்ட எனது மைத்துனர் "மாமி தன்னுடைய பிள்ளைகளை கூட யூலியை பார்க்கிற மாதிரி பார்த்திருக்க மாட்டார்..."

"உங்கள் எல்லாரிலும் பார்க்க யூலிதான் என்னை கவனமாக பார்க்கும். அதுதான் அதில உயிரையே வைச்சிருக்கிறன்... இரண்டு முறை பாம்பு வந்து என்னை கடிக்காமல் காப்பாற்றினது யூலிதான்...."

"அம்மாவிற்கு யூலியை பற்றி என்ன சொன்னாலும் கோவம்தான் வரும் அவவோட ஒண்டும் கதைக்காதேங்கோ...." நான் கூறியதும் எல்லோரும் அமைதியாகி விட்டனர்.

எங்கள் வீட்டிற்கு முன்வீட்டிற்கு புதிதாக ஒரு குடும்பத்தினர் குடியேறினர் அவர்களுடன் அவர்களது வளர்ப்பு நாயையும் கொண்டு வந்திருந்தனர். அழகிய அந்த நாயை யோன் என்று அழைத்தனர். சங்கிலியால் கட்டி எங்கும் போகவிடாமல் கவனமாக பராமரித்தனர். வாடகைக்கு குடியேறிய அவர்கள் எங்களுடனும் அன்பாக பழகினர் எங்கள் வீட்டிற்கு வரும் போது தங்களுடைய செல்லப்பிள்ளையாகிய யோணையும் கூட்டிக் கொண்டு வந்தனர்.

வழமையாக யார் வீட்டிற்கு வந்தாலும் குரைத்து அவர்களைப் பயப்பட வைக்கும் யூலி யோனுடன் முன் வீட்டுக்காரர்கள் வருவதை கண்டதும் வாலை ஆட்டித் தன் மகிழ்ச்சியை தெரிவித்ததும். வழமையாக நன்கு அறிமுகமானவர்களை கண்டால் குரைக்காது இருப்பதை போல அமைதியாக இருப்பதைப் பார்த்து நாங்கள் ஆச்சரியப்பட்டோம்.

அம்மாவும் முன்வீட்டுக்காரர்களும் நீண்ட




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் பழகியவர்கள் போல உரையாடிக் கொண்டிருந்தனர். முன் வீட்டில் வாடகைக்கு வந்திருக்கும் அந்தப் பெண் "அம்மா.... நாங்கள் முன் வீட்டிற்கு வந்திருக்கிறம் என்ர பெயர் மங்களம் இவர் என்ர கணவர் சுந்தரம் எங்கன்ர மகள் சுகன்யா இங்க அச்சுவேலி சரஸ்வதியில் படிப்பிக்கிறா. இது யோண் எங்கன்ர சொல்லை கேட்டு நடக்கும் ஒரு இடமும் போகாது...."

நாங்கள் வெளில வந்ததும் அம்மா "தங்கச்சி... இவன்தான் என்ர மூத்த மகன் பேர் கணேசன். இது என்ர மகள் சுமதி. இவர் மருமகன் கந்தசாமி... "அவர்கள் எங்களைப் பார்த்து மகிழ்ச்சியுடன் தலை அசைத்துக் கொண்டனர். அம்மா அவர்களிடம் "இது எங்கன்ர யூலி என்ரை சொல்லை கேட்கும். நான் சொன்னால் தான் சாப்பிடும். வீட்டை விட்டு ஒரு இடமும் போகாது. எனக்கு கிட்ட ஒருதரையும் வரவிடாது. என்னை இரண்டு முறை பாம்பிற்ர இருந்து காப்பாற்றியிருக்கு...."

அவர்கள் கதைப்பதைக் கேட்டு கொண்டிருந்த எனது தங்கையின் கணவர் "அம்மாவும் முன் வீட்டு மாமியும் தங்கன்ர பிள்ளையளின்ர பெருமைகளை பற்றி கதைக்கினம்...." என்று இரகசியமாகக் கூற நானும் தங்கச்சியும் மெதுவாகச் சிரித்துக் கொண்டோம். எதிர் வீட்டுக்காரர்கள் எங்களிடம் விடைபெற்றுச் சென்றனர்.

அன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள் என்பதனால் எல்லோரும் வீட்டில் இருந்தோம். இரவிலே யூலியின் சங்கிலியை கழற்றி விடுவதல் அது வீட்டை சுற்றி வரும். பிரதான வீதியின் அருகில் வீடு இருந்தமை யால் வாகனங்களின் இரைச்சலும் மக்களின் இரைச்சலும் மக்களின் நடமாட்டமும் எப்போதும் இருக்கும். வெளிக்கேற்றைப் பூட்டினால் யாரும் வீட்டிற்குள் வர முடியாது. யூலியும் இரவில் வெளியே போகாமல் வீட்டை பாதுகாக்கும். பாம்பு பூச்சிகளை கண்டால் கூட வீட்டின் உட்புறத்திற்கு வர விடாமல் குரைத்து வெளியேற்றிவிடும். அதிகாலையில் கேற்றைத் திறந்து சந்தைக்கு மரக்கறி கொண்டு சென்ற எனது தங்கையின் கணவர் கேற்றைத் திறந்து விட்டுச் சென்று விட்டார். அம்மா படுக்கையிலிருந்து எழுந்திருக்க வில்லை.

இரவு யூலியின் சங்கிலியை கழற்றி விடுவது வழக்கம். காலையில் யூலியை சங்கிலியால் கட்டி விடுவோம். அன்று அவசரத்தில் எனது தங்கையின் கணவர் கேற்றைத் திறந்துவிட்டு சென்று விட்டார். வீட்டிற்கு வெளியே சென்ற யூலி முன் வீட்டின் கேற்றின் உட்புறமாக வீதியை பார்த்தபடி நின்ற யோணைக் கண்டதும் அதன் அருகே ஓடிச்சென்றிருக்க வேண்டும். முன் வீட்டின் கேற் திறக்கவில்லையதலால் யோணால் வெளியே வரமுடியவில்லை வீட்டின் கதவை மெதுவாக சாத்திய நான் வெளிக்கேற்றை அகலமாகத் திறந்தவாறு வெளியே வருகின்றேன். "யூலி....யூலி" என்று கூப்பிட்ட வாறு பிரதான வீதியின் இருபுறமும் பார்க்கின்றேன். யூலியை காணவில்லை முன்வீட்டின் கேற்றடியில் நின்ற யூலி எப்படிக் காணமல் போனது பிரதான வீதி ஆதலால் வாகனங்கள்அதிகமாக வீதியில் சென்றமையால் வீதியைக் கடக்க முடியவில்லை. முன் வீட்டின் கேற்றுக்கு உட்புறமாக யோண் நின்றது. வீதியைக் கடந்து மறுபுறம் சென்ற நான் யூலி யூலி என்று அழைக்கின்றேன் யூலி வரவில்லை. வழமையாக நாங்கள் யார் கூப்பிட்டாலும் ஓடி வரும் யூலியை காணவில்லை.

அம்மாவிடம் யூலியை காணவில்லை என்று எப்படி கூறுவது. எதற்கும் சந்தைக்கு சென்ற மைத்துனர் வரும் வரை கேற்றடியில் நின்றேன். அதற்கிடையில் யூலி வந்து விடவேண்டும். என இறைவனை பிரார்த்தித்தேன். சந்தைக்கு சென்றவர் வீட்டிற்கு வந்தவுடன் அவரிடம் யூலியைக் காணாத விடயத்தை கூற அவரும் "நான்தான் கேற்றையும் பூட்டாமல் போட்டன் யூலியையும் பிடிச்சு கட்டேல்ல. அம்மாவுக்கு தெரிஞ்சால் இண்டைக்கு பூகம்பம் தான். வாருங்கோ வல்லைச் சந்தி வரையும் போய் பார்த்திட்டு வருவம்...." என்னையும் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டார்.

எங்கு தேடியும் யூலியை காணவில்லை வீட்டிற்கு வந்ததும் தங்கை சுமதியிடம் விடயத்தை கூறினோம் அவளும் "அம்மாவுக்கு யூலியை காணேல என்று சொன்னால் அவ தாங்க மாட்டா...." "அம்மாவுக்கு மறைக்க முடியுமே உண்மையை அவவுக்கு நான் சொல்லுறன்...." என்று கூறிய நான் அம்மா வெளியிலே வந்ததும் யூலி காணமல்போன விடயத்தை கூறுகின்றேன். "ஐயோ.... பாவம் அதை நான் வெளியில ஒரு இடமும் விடமால் கட்டி வைச்சிருந்ததால எங்கை யாவது போனாலும் அதுக்கு திரும்பி வரத்தெரியாது...." அம்மாவின் தவிப்பை பார்த்து எப்படி ஆறுதல் கூறுவது என்று தெரியாது திகைத்து நின்றோம். அம்மாவிற்கு தன் அருமையான பிள்ளையைத் தொலைத்த சோகம் எங்களுக்கு குடும்பத்தில் ஒருவரைப் பிரிந்த தவிப்பு வீடு வெறிச்சோடியது இரண்டு நாட்களாக யூலியைத் தேடி அலைந்தது தான் மிச்சம் எந்தத் தகவலும் இல்லை அம்மாவை சாப்பிட வைப்பது பெரும்பாடாயிற்று.

அன்று புதன்கிழமை காலை ஏழு மணியிருக்கும் எங்களது வீட்டின் கேற்றுக்கு வெளியே "அண்ணை.... கந்தசாமியண்ணை...." என்று யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டு வெளியே வந்த நான் கேற்றைத் திறந்தேன். எங்களது நெருங்கிய உறவினரான சிவசோதி நின்றிருந்தார். அவருக்கு அருகில் எங்களது யூலி நின்றிருந்தது. என் கண்களை நம்ப முடியாது உற்றுப்பார்க்கின்றேன். யூலி என்னைக் கண்டதும் வாலை ஆட்டிக் கொண்டு என்னருகில் ஓடி வந்தது. மகிழ்ச்சியுடன் அதன் தலையை தடவினேன்.

"தம்பி யூலி பாவம் வல்லைச் சந்தியில் வேற நாயளோட நிண்டுது. பயந்து போய் ஒதுங்கி நிண்டது. நான் பார்த்திட்டு யூலி எண்டு கூப்பிட என்னோடை வந்திட்டுது...." நன்றி அண்ணை அம்மாவைத்தான் சமாளிக்க முடியாமல் திண்டாடிப் போனம்...." என்று கூறிய என்னிடம் அவர் விடைபெற்றதும் கேற்றைப் பூட்டி விட்டு யூலி பின் தொடர வீட்டிற்குள் நுழைந்தேன்.

"அம்மா... சுமதி வெளியில வந்து பாருங்கோ எங்கள்ர யூலி வந்திட்டுது..." நான் பலமாக கூறியதை கேட்டு அம்மாவும் சுமதியும் வெளியே வந்தனர். "யூலி ஓடி வா..." என்று கைகளை நீட்டி அழைத்த அம்மாவின் அருகில் ஓடிச்சென்ற யூலியின் தலையைத் தடவிய அம்மாவின் கண்கள் கலங்கியதை அவதானித்த எங்கள் மனதில் நின்மதியே நிறைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“காலநிதி த. கலாமணி அவர்களின் ஆளுமையும் புலமைத்துவமும்” எனும் பொருளில் இலக்கியவெளியின் ஏற்பாட்டில் 28.12.2024 அன்று இணையவழி நடத்தப்பட்ட 44ஆவது ஆய்வரங்கில் நிகழ்த்தப்பட்ட கருத்துரையின் கட்டுரைவடிவம் நன்றியோடு பிரசுரிக்கப்படுகின்றது.

# இலக்கியத் திறனாய்வில் உளவியல் கண்ணோட்டம்: கலாநிதி த. கலாமணியின் திறனாய்வு நோக்குக் குறித்த ஒரு வெளிப்பாடு

இ.இராஜேஸ்கண்ணன்



இலக்கியத் திறனாய்வு தொடர்பான கண்ணோட்டங்களும் நோக்கு நிலைகளும் பல வகைப்பட்டவை. அவ்வாறான நோக்கு நிலைகளில் பெருமளவானவை முற்றுமுழுதாகவே நேரடியான இலக்கியத் திறானாய்வுக் கோட்பாடுகளாக எழுச்சிபெற்றிருந்தன. இன்னும் சில வகையானவை இலக்கியத்துக்கும் ஏனைய துறைகளுக்குமான தொடர்பின் விளைவாக இருதுறை இணைவுடன் அல்லது பல்துறை இணைவுடன் தோற்றம் பெற்றவை. முதலாவது வகை இலக்கியத்தை கற்றுக் கொள்ளுதல், அவற்றின் பண்புக்கூறுகளைப் புரிந்து கொள்ளுதல், அவற்றின் நயமாய்தல், அவற்றின் அழகியல் பண்புகளை கண்டறிதல், கலையாக்க உத்திகள் மற்றும் நுட்பங்களை வெளிக்கொணர்தல் போன்ற தேவைகளுடன் நேரடியாகவே தொடர்புபட்டவையாகவே அமைந்து போயின. அவற்றை இலக்கியத்தைக் கற்பதற்கான தூய்மையான வரன்முறைகளாகக் கருதலாம். ஆனால், இரண்டாவது வகை அவற்றிலிருந்து சற்று வேறுபட்டது. அது இலக்கியத்துக்கும் ஏனைய துறைகளுக்கும் இடையிலான இடைவினை விளைவாக உருவெடுத்த நோக்கு நிலைகளாக அமைகின்றன. “ஒப்பியல் இலக்கியம்” எனும் துறையின் விருத்திக்குப் பின்னான புதுவரவாக அத்தகைய திறனாய்வு நோக்குகளை கருதலாம்.

ஒப்பியல் இலக்கியம் தொடர்பில் விரிவாக எழுதியவர்களில் பேராசிரியர் கைலாசபதி அவர்கள் முன்னோடியாவார். அவர் ஒப்பியல் இலக்கியம் தொடர்பில் தனிநூல் ஒன்றை எழுதியுள்ளார். அவரது பார்வையில் ஒப்பியல் இலக்கியத் திறனாய்வு என்பது துறையிடையிட்ட அறிவின் விளைவினால் மேலும் விகசிப்பைப் பெறும் என்று நம்பியிருந்தார். அதன் விளைவாகவே இலக்கியமும் சமூகவியலும் பற்றிச் சிந்திக்கலானார். இலக்கிய ஆய்வுகள் துறையிடையிட்டதாகவும், துறைகடந்ததாகவும் அமையப்பெற வேண்டியதன் அவசியத்தை இலக்கியத்துக்கும் சமூகவியலுக்குமான தொடர்பை அடிப்படையாகக் கொண்டு விரிவாக எழுதிவந்தார். இலக்கியத்தை சமூகவியல், மானிடவியல், வரலாற்றியல், மெய்யியல் முதலான அறிவுத்துறைகளின் நோக்கில் திறனாய்வு செய்வதன் அவசியம் குறித்து அவர் வலியுறுத்தி வந்தார். எனினும், இலக்கியத்தின் சமூகவியல் நோக்கில் அவர் அதிக சிரத்தை கொண்டிருந்தார்.

**இலக்கியத்தின் உளவியல் திறனாய்வு பற்றிய அறிமுகம்:**

இலக்கியத்தின் சமூகவியல் திறனாய்வைப் போலவே இலக்கியத்தின் உளவியல் திறனாய்வு நெறியும் தனித்துவமான நோக்குநிலையாக அல்லது கண்ணோட்டமாக இன்று வளர்ச்சி கண்டுள்ளது. இது இலக்கியத்தை ஏற்றுக்கொள்வதற்கான ஓர் உளவியல் கண்ணோட்டமாக (perspective for literary reception) அமைந்துவிடுகின்றது. இலக்கியத்தின் உளவியல் எல்லைகள் கடந்து, மொழி கடந்து, காலம் கடந்து, துறைகள் கடந்து இலக்கியத்தை நோக்குகின்ற வாய்ப்பைக் கொடுக்கின்றது. இன்றைய நிலையில் “புதிய ஒப்பியல் இலக்கிமானது” எல்லைகள் கடந்து விரிவாக்கம் செய்யப்படும் “ஒப்பீட்டுப் பண்பாட்டியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

கற்கையாக"(comparative cultural studies) பரிணமிக்கும் நிலையில், இலக்கியத்துக்கும் உளவியலுக்குமான தொடர்புகளை முன்னிறுத்திய ஆய்வுகளில் அத்துறை கவனம் செலுத்துகின்றது. பண்பாடுகளால் வேறுபட்டிருக்கும் மக்கள் குழுமங்களின் உளம்சார்ந்த நடத்தைகளின் பொதுப் பண்புகள், வேறுபாடுகள், ஒத்த தன்மைகள் என்பவற்றைப் புரிந்துகொள்ள அந்த மக்கள் குழுக்களுக்கான இலக்கியங்கள் துணையாகும் என்று கருதப்படுகின்றது.

இலக்கியத்துக்கும் உளவியலுக்குமான இடைத்தொடர்பின் வழியாக, இலக்கியத்தில் பிரதிபலிக்கப்படும் "மனித ஆன்மா"(human soul) பற்றிக் கற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது. மனிதர்களின் நடத்தைக் கோலங்கள் புரிந்துகொள்ளப்படுகின்றன. குறித்த சில சிறப்பான உளவியல் நிலமைகளின் விளைபொருளாகவே இலக்கியங்கள் தோன்றுகின்றன எனும் புரிதல் ஏற்படுகின்றது. சமூகத்திலுள்ள பாத்திரங்களின் வெற்றிகரமான வெளிப்படுத்தலுக்கு இலக்கியங்கள் துணையாக அமைவது விளங்கிக்கொள்ளப்படுகின்றது. மனித உயிரியின் இயல்புநிலை(human reality) குறித்து கண்டறிய முடிகின்றது. தனிமனிதர்களின் அக அநுபவங்கள், எண்ணங்கள், உணர்வுகள், மனவெழுச்சிகள், அகநோக்குகள் முதலானவற்றையும் உளச்செயன் முறையையும் இலக்கியங்கள் எவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்பதை ஆராய முடிகின்றது. இதுவே "இலக்கியத்தின் உளவியல்'(psychology of literature) என்றாகின்றது.

இலக்கியம் விளக்கும் உளவியல் நிலவரத்தை வெளிப்படுத்தும் திறனாய்வு நோக்கில் எழுத்தாளர் (படைப்பாளர்), படிப்பவர், விமர்சகர் ஆகிய மூன்று தரப்பினரதும் உளச் செயன்முறை (mental process) குறித்தான பகுப்பாய்வு அவசியமாகின்றது. இலக்கியம் தவிர்ந்த ஏனைய கலைகளின் உளவியல் நிலவரத்தை வெளிப்படுத்தும் நிலையில் கலைஞன், இரசிகன், விமர்சகன் என்று அந்த மூன்று தரப்பினரும் சுட்டப்படலாம். படைப்பாளரின் உணர்வுநிலை (consciousness) இலக்கியத்தில் எவ்வாறு பிரதிபலிக்கின்றது என்பதை புரிந்துகொள்வதற்கு ஐந்து விடயங்களை பகுப்பாய்வு செய்தல் அவசியம் என்று கூறப்படுகின்றது. புலனுணர்வு நிலை(sensation), மனவெழுச்சி(emotion), பௌதிக பேரார்வம்(physical passion), சமயப் பேரார்வம்(religious passion), புலமைசார்ந்த விழிப்புணர்வின் அளவு(levels of intellectual awareness) ஆகிய ஐந்தும் படைப்பாளி ஒருவரின் வழியே இலக்கியங்களில் எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதை ஆராய்வது அவசியமென வலியுறுத்தப்படுகின்றது. இந்த ஐந்து விடயங்களையும் இலக்கியப் படைப்பின் வழியே தரிசிக்கின்ற ஒரு வாசகர் இலக்கிய வாசிப்பின்போது அவற்றுக்கான தனது எதிர்வினையை அல்லது பிரதிபலிப்பை எவ்வாறு வெளிப்படுத்துகின்றார் என்பது இன்னொரு அம்சம். வாசகரிடத்தில் இலக்கியம் சென்றவுடன் படைப்பாளி இறந்துவிடுகிறான் என்ற வாதம் வலுப்பெற்றிருக்கும் இன்றைய இலக்கிய சூழமைவில், ஓர் இலக்கிய வாசகர் படைப்பைப் படிப்பதன் வழியாக, அவருக்கே உரித்தான அநுபவங்களுடன் குறித்த எழுத்தாளருக்கும் அவரது படைப்புக்கும் எதிர்வினையாற்றுகின்ற நிலையில் எதிர்கொள்ளல்(defenses), எதிர்பார்ப்புகள்(expectations), எண்ணக்குலைவு(frustration), கருத்துருமாற்றம் (transformation) என்பன எவ்வாறு வாசகநிலையில் உருவாகின்றன என்பதை கண்டறியவேண்டியுள்ளது. ஓர் உளவியல்சார்ந்த இலக்கியத் திறனாய்வாளரைப் பொறுத்தவரை இவை இரண்டையும் பொருத்திப் பார்த்து, அவற்றின் இசைவு மற்றும் இசைவின்மையை வெளிப்படுத்தும் பெறுப்பே முதன்மையானதாகின்றது.

இலக்கியப் படைப்பொன்றின் உளவியலை தனது திறனாய்வு நோக்காக கொள்ளும் ஒருவருக்கு இந்த பகுப்பாய்வு பெரிய சவாலாகவே அமைந்து விடுகின்றது. இன்னும் குறிப்பாகத் தமிழ் இலக்கியச் சூழலில் இது ஒப்பீட்டளவில் குறைவாகவேயுள்ளது. பொதுவாக இத்தகைய திறனாய்வு நெறியானது படைப்பவர் மையமாகவே நிகழ்ந்து முடிந்துவிடுகிறது. படைப்பவரின் தீர்க்கப்பட்டா பிரச்சினைகள், அவரது உளவியல் முரண்பாடுகள், அவருக்குரிய தாழ்வுணர்ச்சி, அவரது குற்றப்பழியுணர்ச்சி, அவருக்கு ஏற்பட்ட சிறுவயது வடுக்கள் என்பவற்றின் பிரதிபலிப்பாக படைப்பை பகுப்பாய்வு செய்வதோடு முடிந்துபோய்விடுகின்றது. இதற்கு அப்பால் சென்று இலக்கியப் படைப்பு ஒன்றின் "குணமாக்கல் விளைவு"(therapeutic effect) குறித்தும் சிந்திக்கவேண்டிய அவசியம் உளவியல் கண்ணோட்டமுள்ள திறனாய்வாளனுக்கு உண்டு. இந்தக் குணமாக்கல் விளைவு வாசகர் அல்லது படைப்பை நுகர்பவர்சார்பான பயன்நோக்கையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இலக்கியப் படைப்பொன்றைப் படிப்போர் சார்பான பயன்நோக்குநிலையுடன் உளவியல் நோக்கில் திறனாய்வு செய்யும்போது, சில விடயங்களில் கூடிய கவனம் செலுத்தவேண்டியுள்ளது. "உள்ளுணர்வின் மையவோட்டம்"(stream of consciousness), "உளவியல் யதார்த்தம்"(psychological realism), "உள்ளக நாடகக் காட்சி விவரணம்"(interior monologue) என்பவற்றைக் குறித்து திறனாய்வு நோக்கில் கவனிக்கவேண்டியுள்ளது. உள்ளுணர்வின் மையவோட்டம் என்பது கதை சொல்லல் அணுகுமுறை தொடர்பானதாகும். கதை சொல்பவரின் எண்ணம் மற்றும் உணர்வுகளின் எடுத்துரைப்பு முறையை இது கருதுகின்றது. உளவியல் யதார்த்தம் என்பது உள்ளுணர்வின் மையவோட்டத்தை தாங்கிவரும் உள்ளமைந்த பாத்திரவார்ப்பினைக்(inner characterization) குறிக்கின்றது. அதன் வழியாகவே படைப்புக்கான இலக்கிய நடையொன்று(narrative genre) வாய்க்கின்றது. உள்ளுணர்வின் மையவோட்டமும் உளவியல் யதார்த்தமும் ஒருங்குசேர படைப்புத் தாங்கிவரும் விடயப்பொருளானது உள்ளகமாக அமைந்த ஒரு நாடகக் காட்சி விவரணத்தை பெறுகின்றது. உளவியல் நோக்கில் இலக்கியப் படைப்பை திறனாய்வு செய்யும் போது இவை குறித்த ஆழமான பகுப்பாய்வு இன்றியமையாததாகின்றது.

இத்தகைய பகுப்பாய்வில் ஒரு திறனாய்வாளர் தூக்கலாக வெளிப்படுத்துவது படைப்பாளி மையமான உளவியல்சார் நோக்கினையே. அது பாத்திர உருவாக்கம், படைப்பின் நடை, படைப்பின் விடய உள்ளடக்கம் என்பவற்றில் படைப்பாளரின் தீர்க்கப்படாத மனவெழுச்சி எப்படி வெளிப்படுகின்றது? அவரின் உளவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாடுகள் எவ்வாறு பிரதிபலிக்கின்றன? அவரிடத்திலுள்ள குற்றப்பழியுணர்ச்சிகள் எவ்வாறு பதிவாக்கப்படுகின்றன? அவரது சொந்த வாழ்வினதும் சிறுபிள்ளைப் பராயத்தினதும் மனவடுக்கள் எப்படி விவரணமாகின்றன? என்பவை குறித்ததாக அமைகின்றது. படைப்பாளியை மையப்படுத்தி ஆராயப்படும் கருத்துக்கள் படைப்பில் வரும் பாத்திரங்களின் உள்முகமான பாத்திர வார்ப்பின் வழியாகவும் எடுத்துக்காட்டப்படுகின்றது. இதனால், பாத்திரங்களின் நடத்தைக் கோலங்கள் பற்றிய பகுப்பாய்வு படைப்பாளியின் மனித ஆன்மா பற்றிய தேடலாக உருப்பெறுகின்றது. புனைவில் வரும் ஒவ்வொரு பாத்திரமும் நிஜத்தில் வாழும் படைப்பாளியின் பிரதிபலிப்பாகவும் படைப்பை நுகரும் வாசகனின் எதிர்வினையாகவும் எப்படி அமைகின்றன என்பதை திறனாய்வாளன் தேடுவதாகவே உளவியல் சார் இலக்கியத் திறனாய்வு அமைந்துவிடுகின்றது. குறிப்பாக அமைப்பியல் நோக்கிலான உளவியல் கொள்கைகளின் வழியாக இலக்கியத்தை திறனாய்வு செய்யும் அணுகுமுறைகள் இந்தத் தேடலையே கருத்திலெடுக்கின்றன.

**கலாமணியின் உளவியல்சார் திறனாய்வின் பின்புலம்:**

இத்தகையதொரு திறனாய்வு நோக்கு தமிழ்ச் சூழலில் ஆழ, அகலம் மிக்கதாக வளர்ச்சி பெற்றுவிடவில்லை. சமூகவியல், மானிடவியல், வரலாற்றியல் நோக்கில் படைப்பிலக்கியங்களைத் திறனாய்வாளர்கள் தரிசித்த அளவிற்கு உளவியல் கண்ணோட்டங்களோடு தரிசிக்கவில்லை என்றே மதிப்பிட முடிகின்றது. ஈழத்துத் தமிழ்ச் சூழலில் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களிடம் இலக்கியம் தொடர்பான உளவியல் திறனாய்வு நோக்குநிலை ஒன்று வெளிப்பட்டிருந்தது. பெனடிக்ற் பாலன், கோகிலா மகேந்திரன் போன்ற எழுத்தாளர்களின் கல்விசார் மற்றும் புனைவுசார் எழுத்துக்களிலும் உளவியல் நோக்குநிலைகள் வந்தமைந்திருந்தன. அந்தத் தொடர்ச்சியில் வந்தவர்களில் கலாநிதி த. கலாமணி அவர்களிடத்தில் அத்தகையதொரு திறனாய்வுக் கண்ணோட்டம் இருந்து வந்துள்ளது. இவர்கள் கல்வியியல் துறைசார்ந்து பணியாற்றியவர்கள். கல்விசார் உளவியல், சிறுவர் உளவியல், வழிகாட்டல்-ஆலோசனை போன்ற துறைகளைத் தொழில் நிமித்தம் கற்பித்தும் பயிற்சியளித்தும் வந்தவர்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறையில் சபா ஜெயராசா, பேராசிரியர் க. சின்னத்தம்பி போன்றோருக்குப் பின்னே உளவியல் துறைசார்ந்த விரிவுரைகளை ஆற்றிவந்த கலாமணி அவர்கள் அதற்கப்பால் படைப்பாக்கம் மற்றும் திறனாய்வு தொடர்பான விடயங்களில் உளவியல் அறிவைப் பிரயோகப்படுத்திவந்துள்ளார். அவர் பணிநிமித்தம் ஈடுபாட்டை காண்பித்த துறையை தமது புனைவாக்கம் மற்றும் திறனாய்வு நோக்குடன் வரித்துக்கொண்டமை கவனிப்புக்குரியது.

பொதுவாகவே கலாமணி அவர்களின் சிறுகதைப் படைப்பாக்கங்களின் தனிச்சிறப்பாக உள்ளக நாடகக் காட்சி விவரணம்(interior monologue) அமைந்திருக்கும். உளவியல் தொடர்பான அறிவுப் பிரயோகம்மிக்க படைப்பாளிகளின் புனைகதைகளில் இந்தப் பண்பு அதிகம் வெளிப்படும். அதனால் புனைவாக்கங்களின் அகத்தே உளவியல் நோக்குகள் மறைந்திருக்கும். காலாமணி அவர்களின் "நாட்கள் கணங்கள் நமது வாழ்க்கை" எனும் சிறுகதைத் தொகுப்பில் உள்ளடங்கியுள்ள "பலூன்" எனும் சிறுகதை சிறுவர் உளவியல் நோக்குடன் வெளிவந்ததை எடுத்துக் காட்டலாம். புனைவு கடந்து, கலாமணி அவர்களின் திறனாய்வுக் கண்ணோட்டங்கொண்ட ஆய்வெழுத்துக்களில் அமைப்பியல்சார் உளவியல் கோட்பாடுகளின் பிரயோகத்துடன் கூடியதொரு நோக்குநிலை வெளிப்பட்டிருந்ததை அவதானிக்க முடியும்.

**கலாமணியின் கட்டுரைகளில் உளவியல் நோக்குநிலைகள்:**

கலாமணி அவர்கள் சிக்மன் பிராய்ட், கார்ல் யுங், ஆபிரகாம் மாஸ்லோ போன்றவர்களின் உளவியல் நோக்குநிலைகளை இலக்கியப் படைப்பாக்கங்களை திறனாய்வு செய்வதற்கான வழிமுறைகளாகக் கொண்டிருந்தார். கே.டானியலின் "கானல்", தெணியானின் "காத்திருப்பு" மற்றும் "கானலில் மான்", இரா. நடராசனின் "ரோஸ்" போன்ற நாவல்கள் குறித்த அவரது உளவியல் நோக்கிலான கட்டுரைகளுடன், தீரன் ஆர். எம். நௌஸாத், தேவமுகுந்தன் முதலானோரின் சிறுகதைகள், கபிலரின் குறிஞ்சிப்பாட்டுப் என்ற செவ்வியல் இலக்கியம் என்பவை குறித்த கட்டுரைகளையும் சேர்த்துத் தொகுத்து "இலக்கியமும் உளவியலும்"(2018) என்ற நூலை ஜீவநதியின் வெளியீடாக தந்திருந்தார். அந்த நூலின் வரவு கலாமணி அவர்களை நாடகர், சிறுகதை எழுத்தாளர், கவிஞர், என்று பார்த்த நிலைகளைக் கடந்து, ஓர் உளவியல்சார் இலக்கிய கண்ணோட்டம் உள்ள திறனாய்வாளர் என்று காண்பித்தது.


தொடர்ச்சியாக அரங்க உரைகளாகவும், கட்டுரைகளாகவும் திறனாய்வுகளைச் செய்து வந்த கலாமணி அவர்கள் அவை தொடர்பாக தெளிதல்(2016), புதிய கண்ணோட்டங்களும் புதிய அர்த்தங்களும்(2013), இலக்கியமும் உளவியலும்(2018) போன்ற நூல்களை வெளியிட்டிருந்தார். இவற்றில் "இலக்கியமும் உளவியலும்" எனும் நூலில் உளவியல் நோக்கிலான இலக்கிய திறனாய்வு பற்றிய கட்டுரைகளே முழுவதுமாக அமைந்தது. அந்த நூலின் முதலாவது கட்டுரை பின்னே வரும் கட்டுரைகளுக்கான அடித்தளமாக அமைந்துள்ளது. "இலக்கியத் திறனாய்வும் உளவியல் சார் அணுகுமுறையும்" என்ற அந்தக் கட்டுரை உளவியல்சார் இலக்கியத் திறனாய்வின் வெவ்வேறுபட்ட அணுகுமுறைகளை முன்வைத்து, அந்தத் திறனாய்வுமுறையின் நுட்பங்களைத் தெளிவுபடுத்துகின்றது. இதனை கலாமணி அவர்கள் தன்னை ஓர் உளவியல் கண்ணோட்டமுள்ள திறனாய்வாளர் என்று அடையாளப்படுத்தும் ஒரு முயற்சியாகவே கருத முடிகின்றது. அதற்கான அடிப்படைகளை அந்த நூல் கொண்டுள்ளது. அந்த நூலிலுள்ள கட்டுரைகள் அவரை ஓர் "அமைப்பியல்சார் இலக்கிய உளவியல் திறனாய்வாளராக" வெளிக்காட்டுகின்றன.

குறித்த நூலில் உள்ளமைந்துள்ள கட்டுரைகளில் முதலாவது அறிமுகக் கட்டுரையானது இலக்கியம் தொடர்பான உளவியல் அணுகுமுறைகளில் தொன்ம அணுகுமுறை, யுங்கிய அணுகுமுறை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராய்ட்டின் உளப்பகுப்பு அணுகுமுறை, தன் கூற்று அணுகுமுறை போன்றவை தொடர்பான விளக்கங் களைத் தந்து, இலக்கியப் படைப்பைத் திறனாய்வதில் அவற்றின் பிரயோகம் பற்றிய அடிப்படையான விளக்கங்களைத் தருகின்றது. கபிலரின் குறிஞ்சிப் பாட்டை உளம் வரைந்த ஓவியம் எனக்குறிப்பிட்டு, "நனவு நிலை உள்மன உரையாடலாக" அந்தப் பனுவல் அமைந்தவற்றை விளக்குகின்றார். நௌஸாத்தின் "ஒய்த்தா மாமா" எனும் சிறுகதையில் சிறுபிள்ளைகள் "அல்பேர்ட் பயப்பீதியோடு" வளர்க்கப்படும் தவறான போக்குகளை வெளிப்படுத்துகின்றார். தேவ முகுந்தனின் "நாங்கள்" எனும் சிறுகதையை ஆசிரியம்சார் உளவியல் நோக்கில் விவரிக்கின்றார். கே.டானியலின் "கானல்" எனும் நாவலின் கதைப்பொருளை மாஸ்லோவின் தேவைப் படிமுறைக் கோட்பாட்டின் பின்புலத்தில் பகுப்பாய்வு செய்கின்றார். தெணியானின் "காத்திருப்பு" மற்றும் "கானலில் மான்" போன்ற நாவல்களில் வரும் கதாபாத்திரங்களின் பாலியல்சார்ந்த பிரச்சினைகள், தாழ்வு மனப்பான்மை என்பவற்றைச் சிக்மன் புரோய்ட்டின் மனதின் கட்டமைப்பு தொடர்பான விளக்கங்களோடும், யுங், அல்பிரட் அட்லர் போன்றோரின் கருத்துக்களுடனும் தொடர்புபடுத்தி உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டுப் பிரயோகத்துடன் விளக்குகின்றார். கேர்ட் லூவின் வாழ்க்கைவெளி பற்றிய கொள்கைகளோடு ஆசிரிய உளவியல் கொள்கைகளையும் இணைத்து இரா. நடராசனின் "ரோஸ்" எனும் நாவலை திறனாய்வு செய்கின்றார். இந்தக் கட்டுரைகளை உதிரிகளாக அல்லாமல் ஒரு தனியான தொகுப்பு நூலாகப் படிக்கின்றபோது ஆங்காங்கே கூறியது கூறல்கள் வந்த போதிலும், இலக்கியத்தை எவ்வாறு உளவியல் நோக்கில் பகுப்பாய்வு செய்யலாம் என்பதற்கான ஒரு முறையியல் வழிப்பட்ட அணுகுமுறையை அறிய முடிகின்றது. கல்வியியல் துறைசார்ந்த ஒருவர் என்பதால் கல்வி உளவியல், சிறுவர் உளவியல், ஆளுமை உளவியல், ஆசிரிய உளவியல் குறித்த கோட்பாட்டுகள் மற்றும் எண்ணக்கருக்களின் பிரயோகத்தை அவரது திறனாய்வு சார்ந்த பகுப்பாய்வுகளில் வெகுவாகக் காணமுடிகின்றது.




**இலக்கியத்தின் உளவியல் திறனாய்வின் புதிய செல்நெறி:**

இன்றைய இலக்கிய போக்கில் இலக்கியத்தின் உளவியல் கண்ணோட்டத்தில் புதிய சில பரிமாணங்கள் முன்னிறுத்தப்படுகின்றன. குறிப்பாக லக்கான் என்ற உளவியலாளர் பிராய்டின் கோட்பாட்டை வளர்த்தெடுப்பதாக கூறி, சசூர் என்பவர் முன்வைத்த உளவியல் கொள்கைகளை உள்வாங்கி, பின்னாளில் விளக்கிய கற்பனை, குறியீடு, உண்மை என்பவற்றுக்கு இடையிலான தொடர்புகள் தனிக்கவனம் பெற்றன. அவர் விளக்கும் "கண்ணாடி அவத்தை" பற்றிய கொள்கை குறியீடு மற்றும் குறிப்பான பற்றிய புதிய சிந்தனைகளை உருவாக்கியது. அடைகாத்த வாத்துக்கு(தாய்) பதிலாக குஞ்சு பொரிக்கும் தருணத்தில் மாற்றிவைக்கப்பட்ட சப்பாத்தை குஞ்சுகள் தாயாகக் கண்டதை லோரன்ஸ் என்பவர் செய்த பரிசோதனை வாயிலாக அறிந்த லக்கானின் சிந்தனை "என்னுடைய சிந்தனை எனக்குள் இல்லை எனக்கு வெளியேதான் இருக்கிறது" என்ற முடிவுக்கு வந்தது. இந்த முடிவை பின்நவீனத்துவ உளவியலின் விருத்திக்கான அடிப்படையாக காண முடியும். இவ்வாறான கருத்துருவாக்கங்களின் பின்புலத்தில் நின்றபடி இலக்கியங்களை திறனாய்வு செய்யும் இன்றைய தேவையை பலரும் வலியுறுத்திப் பேசுகின்றனர்.

எது எவ்வாறாயினும் ஈழத்துத் தமிழ்ச் சூழலில் உண்ணாட்டு போர் நிகழ்ந்த காலத்திலும் அதன் பின்னரும் வெளிவந்த நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் தொடர்பில் நிகழ்த்தப்பட வேண்டிய ஓர் உளவியல் சார்ந்த வரன்முறையான பகுப்பாய்வு அவசியமாகின்றது. போர்க்காலம் தந்த வடுக்களையும் போரின் பின்னான சூழலில் தோன்றிய அகவயமான முரண்களையும் சித்திரிக்கும் புனைவுகள் அதிகம் வெளிவந்தபடியுள்ளன. அவற்றையும் உளவியல் அணுகுமுறைகளோடு விளங்கிக்கொள்ளும் தேவை உள்ளது. இவ்வாறான பகுப்பாய்வுகள் செய்யப்படும் நிலையில் அது கலாமணி அவர்கள் முன்னெடுத்துச்சென்ற திறனாய்வுத் தடத்தை மேலும் விரிவுபடுத்திச் செல்லும் வாய்ப்பைத் தரும். இது இலக்கியத்தின் உளவியல் பகுப்பாய்வின் வழியான சமூகப்பயன்மிக்க ஆற்றுப்படுத்தலை வழங்கும் வாய்ப்பை உருவாக்கித்தரும் என்று உறுதியாகவே நம்பலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிற்பாட்டடா கதையை

கந்தவனம் அண்ணை இன்றோடு ஐந்தாவது நாளாகச் செல்லச்சாமியின் வீட்டை நோக்கிச் சைக்கிளை மிதிக்கிறார்.

வயதும் அறுபத்தைந்தைத் தாண்டிவிட்டது. நீண்ட தூரங்களுக்கு அதாவது இரண்டு மூன்று கிலோ மீற்றருக்கு மேல் சைக்கிள் ஓட்டினால் மூச்சு வாங்கா விட்டாலும் முழங்கால்களில் சற்று வலி ஏற்படத்தான் செய்கிறது. இரண்டு தடவைகள் வழி தெருக்களில் மயங்கி விழுந்த சந்தர்ப்பங்களும் உண்டென்ற காரணத் தினால் மோட்டார் சைக்கிள் ஓடுவதற்கும் இப்போது மனைவி பிள்ளைகள் அனுமதிப்பதில்லை.

"இண்டைக்கு எப்பிடியும் செல்லச்சாமியிட மிருந்து இருபதினாயிரம் ரூபாவையும் வாங்கிப் போட வேண்டும்".

வைராக்கியம் மனதை அழுத்தவும் சைக்கிளை மிதிப்பதில் அதன்வேகம் அதிகரிப்பது தெரிகிறது. ஆறுமாதங்களுக்கு முன்னர் நடந்தவை தொலைக் காட்சி நாடகமாக மனதில் ஓடுகிறது.

தூரத்து உறவில் உள்ள ஒரு நண்பரின் மகன் செல்லச்சாமி என்கின்ற திருநாமம் கொண்டவர் ஒரு நாள் வீடுதேடி வந்தான்.

"மாமா இண்டைக்கு காலையிலை எனக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்திருக்குது. உங்களுக்குத்தான் முதலிலை செல்லவேண்டுமெண்டு வந்திருக்கிறன்.

"நல்ல சந்தோஷம்"

தன்னை மதித்து தேடிவந்து இந்த விஷயத் தைச் சொல்ல வந்ததை நினைக்க அவருக்குப் பெருமை பிடிபடவில்லை.

"மாமா எனக்கு ஒரு முப்பதினாயிரம் ரூபா அவ சரமாக வேணும். ஒருமாதத்திலை திருப்பித் தந்திடுவேன்

கந்தவனம் அண்ணை இப்போது சற்று உஷாராகிவிட்டார்.

"ஏன்ரா தம்பி சிசேரியன் ஏதும் நடந்ததே..."

"இல்ல மாமா நோர்மலாகத்தான் பிறந்த"

"அப்ப பின்னை பிறைவேற் ஆஸ்பத்திரியிலை பிறந்ததே..."

"இல்ல மாமா... கவிர்ன்மேன்ற் ஆஸ்பத்திரி மந்திகையிலை தான் பிறந்தது"

கந்தவனம் அண்ணைக்கு சினம் வந்திட்டுது.

"அப்ப திடீரெண்டு ஒரு நாளிலையே கர்ப்ப மாகி அந்தண்டே பிள்ளை பிறந்திட்டுதோ... பத்து மாதத்திலை பிறக்கேல்லையோ... இவ்வளவு காலமும் சிலவுக்கு ஆயத்தமில்லாமலே இருந்தனி..."

"இல்ல மாமா வைச்சிருந்த காசு வேற தேவைக்குப் போவிட்டுது. எனக்கு நீங்கள் தான் உதவி செய்யவேணும். ஒரு மாதத்திலை திருப்பித் தந்திடுவன்."

கந்தவனம் அண்ணைக்கு இளகிய மனம். கஸ்டப்பட்ட எத்தனையோ பேருக்கு கல்யாணம், நோய்நொடி என்று வந்த சமயங்களில் கடனாகவோ, உதவியாகவோ ஒரு லட்சம், ஐம்பதினாயிரம் என்றெல் லாம் கொடுத்திருக்கிறார். உள்ளே போனார்.

"முதலாவது பிள்ளைக்கே காசு மாறித்திரி யிறாய். எனக்கிது பிடிக்கேல்லை. இப்ப என்னட்ட முப்பதினாயிரம் இல்லை. இருபதினாயிரம் தாறன். சரியாக ஒரு மாதத்திலை கொண்டுவந்து தந்திடு. இந்தா கொண்டு போ..."

அதன்பிறகு ஒரு மாதம், இரண்டு மாதம், மூன்று மாதம்... செல்லச்சாமி அந்தப்பக்கமே இல்லை.

மூன்று மாதங்களுக்குப் பிறகு கந்தவனம் அண்ணை வீடு தேடிப்போனார். சரியான பதிலில்லை சினந்து பேசிவிட்டுத்தான் வருவார்.

"உந்த இருபதினாயிரம் எனக்கு பெரிய காசில்லை. ஆனால் உந்தக் கள்ளனிட்டை உந்தக்காசை விட்டு வைக்கக் கூடாது."

மனதை திடப்படுத்திக் கொள்வார்.

ஐந்தாம் தடவை போன போது செல்லச்சாமி வந்தான். காசு மாற வந்தபோது இருந்த பௌவ்வியம் முகத்தில் இஞ்சித்து காணப்படவில்லை.

"எனக்கு ஒரு காசு வருகுது இன்னும் இரண்டு கிழமையிலை வாற இருபத்தைந்தாம் திகதி வாங்கோ தாறன். இதுதான் கடைசித் தவணை" (நான் கொண்டு வந்து தாறன் என்று சொல்லவில்லை)

சொன்ன தொனியும் மாறியிருந்தது. கந்தவனம் அண்ணை வந்த கோபத்தை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டார். ஒன்றும் பேசாமல் வந்துவிட்டார்.

இன்றுதான் அந்த இருபத்தைந்தாம் திகதி. செல்லச்சாமியின் வீடும் வந்தாயிற்று. உள்ளே இருந்து கொண்டு வீட்டில் தான் இல்லை என்று மனைவி மூலம் சொல்லசெய்து விடுவானோ என்ற பயத்தில் உள்ளயே போய் முற்றத்தில் நின்றார்.

"கடைசியாக இருபத்தைந்தாம் திகதி சொன்னனி. அதான் பொழுதுபடுகிறதுக்கிடையிலை வந்தனான்."

"ஒரு தவணை சொன்னால் அதுக்காக அந்த அண்டே வந்து நிற்கிறதே...நான் எதிர்பார்த்த காசு பிழைச்சுப் போச்சுது. வாற மாசம்..."

டேய் நிற்பாட்டுடா கதையை நீ இனி காசு தரவேண்டாம். உன்ர கொப்பன் உனக்கு அந்த நேரம் செல்லச்சாமி எண்டு பேர் வைச்சது தப்பு. கள்ளச்சாமி எண்டுதான் வைச்சிருக்க வேணும். இனியாவது உன்ரை பேரை அப்படி மாத்து!!


சொல்லிக் கொண்டே போய் சைக்கிளில் ஏறினார் கந்தவனம் அண்ணை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காண்பரிய வித்தகர் குழந்தை ம.சண்முகலிங்கம்

## யாரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைப்பேன்...



குருவே சரணம்,
சிந்திப்பவர் தம் சிந்தைக்கு
காட்டாதன எல்லாம் காட்டி
எந்தையும் தாயும் ஆன
அம்மையே அப்பா...
நீங்கள் எம்
அருமை நண்பன்
வையத்துள் தெய்வம் - உம்
உறவுகள்
எங்கள் தவப்பயன் - உங்கள்
ஈடில்லா வாழ்வு
பறத்தல் மறந்த பறவைகள் எமக்கு
மானுடம் வெல்லும் வரை
உள்நின்று ஒளிரும் சக்தி...
எங்கள் காவல் நீங்கள்
புழுவாய் மரமாகி...
திக்குவிஜயம் கொண்டீர்கள்
எமக்குப்
புகலிடம் பிறிதொன்றில்லை...
நாம் போம் வழி...?!??...
நீங்கள்
புனித ஒளி
சித்தம் அழகியார்
அலகில் சோதி
பிறைதழுவிய பௌர்ணமி
நேயத்தே நின்ற நிமலம்
அளப்பருங்கருணை...
எம் நேரகாலம்...
சகுனம் சரியாயில்லை..
நாட்டுப் பரியாரி
நல்ல கதை சொல்லவில்லை...
அந்திமாலைப் பாடல் ஒன்று...
தான் விரும்பாத் தியாகி ஒருவர்...
பொய் கெட்டு மெய்யானார்.
நிகழ்ந்து
நெடும் பயணம்...
அதில்
வார்த்தைகள் அற்ற நடிப்பு
அதுவும்
நீ செய்த நாடகமே...
எனினும்
ஒளிவளர் விளக்கே
எரிகின்ற தேசம் தனில்
இப்போதைக்கேது வழி...
நெஞ்சு பொறுக்குதில்லையே...

அன்னையிட்ட தீ
வேள்வித் தீ ஆக
மண்சுமந்த மேனியரின்
மனத்தவம்
சத்தியசோதனையாய்...
ஆரொடு நோகேன்
யார்க்கெடுத்துரைப்பேன்...
எனக்குத்தெரியும்
தந்தையே
நீங்கள்
குழந்தை பாவனை செய்யும்
நல்ல மேய்ப்பர்,
நாளை மறுதினம்
இடுக்கண் வருங்கால்
நாம் நரகத்தில் இடர்படோம்...
எம் மனத்தின் நம்பிக்கையாய்
நீர்
பள்ளி எழுந்திடுவீர்...
இன்று

ஞானக்கனி உமக்கு
புண்சுமந்தமேனியராய்
அன்பமுதூறும் அயலார் எம்
புஷ்பாஞ்சலி...
சிவப்பு விளக்கில்
துயரத்தின் பறவைகள்
வெவ்வேறு வழிகளில் அமைதிதேடி
படையல் பானம் ஏந்திச் செல்வோராய்
அந்திமாலை முதல் புலர் காலைவரை
உருப்பளிங்கினில் நெருப்புக்கள்
தோன்றப்
பாடின
தந்தது உன் தன்னை
கொண்டது என் தன்னை
சங்கரா
ஆர்கொலோ சதுரர்...?!!!

நா.நவராஜ்
01.02.2025.

இவ்வஞ்சலிக் கவிதை குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் 61 நாடகங்களின் பெயர்களை உள்ளடக்கிப் படைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீரா பதிப்பக டேவிட் லிகோரி

## ஈழப் போர்க்கால
## பதிப்புத்துறையின் முன்னோடி



ஐங்கரன் விக்கினேஸ்வரா

போர்க் காலங்களில் யாழ்ப் பாணத்தில் பாரிய அளவில் பத்திரிகை தட்டுப்பாடு இருந்தது. ஆனாலும் பல தடைகளைத் தாண்டி தாயகத்தின் பல்வேறு எழுத்தாளர் களை முன்னேற்றும் பொருட்டு, அவர்கள் படைப்புக்களை நூல் களாக வெளியிட்ட பெருமை மீரா பதிப்பகத்தின் மறைந்த டேவிட் லிகோரிக்கே உள்ளது.











பதிப்பித்துறையில் உள்ள பல்வேறு கடினமான விடயங்களை யும் கடந்து மீரா பதிப்பகத்தின் மறைந்த டேவிட் லிகோரி செய்த பணியானது மிக அளப்பரியது. ஈழப் போராட்டத்தில் இரண்டு இராணுவங்களின் கொடூரமான கால கட்டத்தில், அவரை 1989 நடுப்பகுதியிலும் பதிப்பக பணி காரணமாக முதன் முதலில் சந்தித்த ஞாபகங்கள் உண்டு.போர்க்கால இலக்கியங்கள் பலவற்றை வெளி யிட்டுப் பெரும்பங்காற்றிய டேவிட் லிகோரி அவர்கள்ஆரம்பத்தில் சினிமா பாடல் புத்தகங்களை வெளியிட்டு வந்தார். அதன் பின்னர் 1988 முதல் 1994 வரை 28 நூல்களை பதிப்பாளராக, தனது மீரா வெளியீட்டு நிறுவனம் மூலம் வெளியிட்ட பெருமைக்குரியவர்.

அன்றைய போர்க் காலச் சூழலில், அரசியல் அழுத்தங்கள்- ராணுவ அச்சுறுத்தகள் மத்தியிலும் அவரை பல்வேறு அச்சகங்களில் காணக் கூடியதாக இருந்தது. பல நூல் வெளியீட்டு விழாக்களிலும் அவரை சந்திக்க நேர்ந்தது. அத்துடன் பல புதிய படைப்புக்களை அவர் வெளியிட்டு வந்தார். பின்னர் போர்க்காலம் உச்சமான போதிலும், 1990இல் பின்னர் பல்வேறு இராணுவ நடவடிக்கை காரணமாக தமிழ் மக்கள் இடப்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போதும் தொடர்ந்து தனது செம்மை யான நூல் வெளியீட்டு பணியை மீரா பதிப்பகத்தின் மறைந்த டேவிட் லிகோரி செய்து வந்தார். இவரது பணியானது காலங்கடந்தும் போற்றத்தக்கது.

மீரா பதிப்பகத்தின் மறைந்த டேவிட் லிகோரி பற்றிய இன்னொரு விடயத்தை நாங்கள் முக்கியமாக கருத வேண்டும். ஏனெனில் பதிப்பகம் என்பது நூல் களை வெளியிடும் போது பல்வேறு இடஞ்சல்களையும் இன்னல்களையும் சந்திக்கும்.

அத்தகைய இடைஞ்சல்கள், விநியோக தடங்கள்கள் இவற்றை யெல்லாம் தன் மேனி மேல் சுமந்து புத்தகங்களை தொடர்ந்து வெளியிட்ட பெருமை மீரா பதிப்பகத்தின் மறைந்த டேவிட் லிகோரி அவர்களுக்கு உரித்தாகும்.

தானே தன் கையால் சுமந்து சென்று நூல்களை விற்கும் பணி யானது ஒரு வரலாற்று கடமையாகவே நாங்கள் கருத வேண்டும். அவரது வெளியீடுகள் பல்வேறு நாடுகள் சென்றடைந்ததும் ஒரு வரலாற்றுச் சாதனையாகவே கருதப்பட வேண்டும்.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் அவருடைய பங்களிப்பை நாங்கள் ஒருபோதும் மறக்கவே முடியாது.1995பாரிய இடப்பெயர்வின் பின்னர் வன்னியில் இருந்த போது மிகவும் பெரிய கஷ்டங்கள் எதிர்நோக்கி இருந்தார். ஆனாலும் அவரது வாழ்க்கை முழுவதும் நூல்களை வெளியிட வேண்டும் என்ற எண்ணத் திலேயே இருந்தது.

ஈழத்து பதிப்பு துறையில் மீரா பதிப்பகம் ஆனது ஆளுமை மிக்க பங்களிப்பை வழங்கி உள்ளது. பொருளாதார தடையினால் அச்சுத் தாள்கள், அச்சு மை, வார்ப்புரு எழுத்துகள் தட்டுப்பாடாகவும், அதிக விலையிலும் விற்ற காலத்தில் அப்பியாசப் புத்தக கோட்டுத் தாள்களில் அச்சிட்டு, மர புளொக் அட்டையுடன் வெளிவந்த மீரா வெளியீடுகள் பல வெளி வந்தன.

தனது பதிப்பக புத்தகங்களை அச்சிட்டு கடை கடையாக விநியோகம் செய்ததும் அவரே. செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், து.வைத்திலிங்கம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமரைச்செல்வி, கே.எஸ். ஆனந்தன், இணுவையூர் சிதம்பர திருச் செந்தி நாதன், இயல்வாணன், பொன். கணேசமூர்த்தி, வளவை வளவன், ஓ.கே.குணநாதன், வாமதேவன், முருகு, இந்திரா பிரியதர்சினி, கே.ஆர்.டேவிட் ஆகியோரின் நாவல்களை இவர் வெளியிட்டுள்ளார்.

ஈழத்தில் போர்க்கால வாழ்வியல் அனுபவங்களை வெளிக் கொணர்ந்த முக்கிய இலக்கியப் பங்களிப்பாளராக இவரை அடையாளம் காணலாம். புதிய எழுத் தாளர்களை ஊக்குவித்து நாவல் வெளியீட்டினைச் செய்தும் வந்தார்.

ஈழப் போர்க்கால பதிப்புத் துறையின் முன்னோடியான டேவிட் லிகோரி பொருளாதார பலமற்ற எளிமையான வாழ்க்கை வாழ்ந்த போதிலும் அவர் சமூக அக்கறையுடன் செய்த சேவை மகத்தானது. அவரது வெளியீடுகள் இன்னமும் நிலைத்து நிற்கின்றன. மீரா பதிப்பகத்தால் 1988இல் மழைக் காலம், ராதையின் நெஞ்சம், பூம்பனி மலர்கள், முடிவல்ல ஆரம்பம் ஆகிய நூல் கள் வெளிவந்துள்ளன. இதன் தொடர்ச்சி யாக 1989இல் மண்ணின் தாகம், பாலை வனப் பயணிகள், கானகத்தின் கானம், முற்றத்து ஒற்றைப்பனை, சங்கரன் ஆகிய படைப்புக் களும் வெளிவந்தன. பூஜைக்காக வாழும் பூவை, இராவணன் கோட்டை, நிலவே நீ மயங்காதே, இருள் இரவில் அல்ல போன்ற நூல்கள் மீரா பதிப்பகத்தால் 1990 இல் வெளியிடப்பட்டன. மேலும் 1991இல் அக்கினி, வெள்ளையடிக் கப்பட்ட கல்லறை, முள்முடி மன்னர்கள், விடியலைத் தேடி, ஊருக்கல்ல ஆகிய படைப்புக்களும் வெளி வந்தன.

ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள், மீண்டும் புதிதாய்ப் பிறப்போம், விண்ணில் அல்ல விடிவெள்ளி, சுவடுகள் ஆகிய படைப்புக்களும் 1992இல் வெளி வந்தன. 1993ஆம் ஆண்டில் தாகம் என்ற நூலும் 1994 இல் ஆறுகள் பின்னோக்கி பாய்வதில்லை, கனவுகள் சுமக்கும் தேசம் ஆகிய நூல்களும் வெளிவந்தன.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் அவருடைய பங்களிப்பை நாங்கள் ஒருபோதும் மறக்கவே முடியாது.

ஈழப் போர்க்கால பதிப்புத் துறையின் முன்னோடி யான டேவிட் லிகோரிக்கு தோழமையான அஞ்சலிகள் உரித்தாக!

**விமல் பரம்**

## திரு மகாலிங்கம் பத்மநாபன் மண்ணின் வாசனையை எழுத்தில் உணர வைத்த படைப்பாளி



இந்த சமூகத்தையும் சக மனிதர்களையும் நேசித்து வாழ்ந்த ஒருவர் திரு. மகாலிங்கம் பத்மநாபன் அவர்கள். அவரின் மறைவுக்குப் பின்னரும் அவரை அன்போடும் மதிப்போடும் பலர் நினைவு கூர்வதற்குக் காரணம் அவர் வாழ்ந்த வாழ்வு அத்தகையது. கிளிநொச்சி மாவட்டத்தில் பல பாடசாலைகளில் ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர் இவர். எந்த மண்ணை நேசித்து வாழ்ந்தாரோ அந்த மண்ணில் 27.12.2024ம் நாள் தனது இறுதி மூச்சை நிறுத்திக் கொண்டார். திரு மகாலிங்கம் பத்மநாபன் அவர்கள் தென்மராட்சி மீசாலையில் மகாலிங்கம் பொன்னம்மா தம்பதிகளுக்கு மகனாக 24.11.1948ம் ஆண்டு பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை பரந்தன் அ.த.க பாடசாலையிலும் உயர்கல்வியை யாழ்/கொட்டடி நமசிவாய வித்தியாசாலை மற்றும் இராம கிருஷ்ணமிஷன், வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும் பெற்றுக் கொண்டார். மீசாலையில் பிறந்தாலும் இவர் பெரிய பரந்தனையே சொந்த இடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். இவரது மூதாதையர்கள் மூன்று தலைமுறைக்கு முன்பே மீசாலையிலிருந்து பெரிய பரந்தனுக்கு வந்து குடியேறியவர்கள். இவர் தனது கல்வியை முடித்து ஆசிரியப்பணி ஏற்று 1972ம் ஆண்டு மன்னார் இலகடிப்பிட்டி றோயன் தமிழ் கலவன் பாடசாலையில் இணைந்து கொண்டார். 1978ம் ஆண்டு வசாவிளானிலுள்ள பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலையில் பயின்று 1982ல் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணி புரிந்தார். அத்துடன் சாரணர் இயக்கப் பொறுப்பாசிரியராகவும் இருந்தார். அதன் பின் பெரியகுளம் பாடசாலை, கனகாம்பிகைக்குளம் மகாவித்தியாலயம், பரந்தன் அ.த.க பாடசாலை, பரந்தன் இந்து மகா வித்தியாலயம் போன்றவற்றில் அதிபராகவும் பணி புரிந்தார். தன்னுடைய பணிக் காலத்தில் மாணவர்களுக்கு நாடகம், பேச்சு, வில்லுப்பாட்டு, நாட்டுக்கூத்து என்பனவற்றை பயிற்றுவித்து மேடையேற்றி அங்கீகாரம் பெறவைத்தார். தனது அன்பாலும் அரவணைப்பாலும் மாணவர்களை வழி நடத்தி தன்னை ஒரு சிறந்த ஆசானாக எப்போதும் நிலை நிறுத்தி வந்திருக்கிறார். இன்று கிளிநொச்சியில் கல்விமான்களாக உருவாகிய பலர் இவரது மாணவர்களே. அதை அந்த மாணவர்களே பெருமையாக சொல்லிக் கொள்வார்கள். தனது ஓய்வுக் காலத்தில் அவர் எழுதிய நூல் “அது ஒரு அழகிய நிலாக்காலம்” தனது மூதாதையர் மீசாலையிலிருந்து கிளிநொச்சி மண்ணுக்கு எப்பிடி வந்து பெரியபரந்தன் என்னும் இடத்தில் காடு வெட்டி குடியிருப்பாக மாற்றி வாழ்ந்தார்கள் என்ற வரலாற்றைச் சொல்லும் நூலாக இதை எழுதியிருக்கிறார். 2022ம் ஆண்டு சுப்ரம் பிரசுராலய வெளியீடாக வந்த இந்த நூல் வடமாகாணசபையின் விருதைப் பெற்றது. தேசிய சாகித்திய விருதுக்கும் பரிந்துரைக்கப்பட்ட மூன்று நூல்களுக்குள் ஒன்றா கத் தெரிவு செய்யப்பட்டது.

தங்களின் மூதாதையரின் வாழ்வைத் தேட முற்படும் இன்றைய சமுதாயத்துக்கு இந்நூல் ஒரு ஆவணமாகும் என்ற பாராட்டைப் பலரிடமிருந்தும் பெற்றுக் கொண்டவர். சமூகத்தின் மீது பற்றுதல் கொண்டு தன்னால் இயன்ற மனிதநேயப் பணிகளை ஏழை மக்களுக்கு தொடர்ச்சியாகச் செய்து வந்திருக்கும் இவர் கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தில் ஆயுட்கால உறுப்பினராகவும் இருந்து வந்துள்ளார். மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும், சமூகத்துக்கான ஒரு எழுத்தாளராகவும் தன்னை அடையாளப்படுத்திய பெருந்தகை மகாலிங்கம் பத்மநாபன் தனது எழுபத்தாறாவது வயதில் இவ்வுலக வாழ்வை விட்டு விடைபெற்று சென்றிருக்கிறார். அவரது பணியும் எழுத்தும் என்றென்றும் அவரை நினைவு கூர்ந்து கொண்டேயிருக்கும். அவருக்கு எமது அஞ்சலிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந. இரவீந்திரன்



# நேற்றில் கரைந்தோடும் இன்றிலிருந்து

## 2

எங்களுடைய ஊரெல்லையைத் தாண்டி வெளியுலகில் காலையடி மறுமலர்ச்சி மன்றத்தை அறிமுகப்படுத்தி இருந்தது மன்றத்தின் தயாரிப்பாக அமைந்து 1975 ஆம் ஆண்டு முதல் மேடையேற்றப்பட்டு வந்த "காகிதப் புலிகள்" எனும் நாடகம். நவீன அரங்கச் சிந்தனையுடன் கொழும்பில் ஓரிரு நாடகங்கள் அறிமுக மான காலம் அது. அவற்றின் தாக்கத்துடன் உருவாக்கப் பட்ட அந்த நாடகமே யாழ்ப்பாணத்துக்கு நவீன அரங்க அனுபவத்தை முதன்முதலில் வழங்கியது. யாழ்ப்பாண பல்கலைக் கழக வளாகத்திலும் அதனை மேடையேற்றி இருந்த காரணத்தால் அன்றைய வளாகத் தலைவரான பேராசிரியர் க. கைலாசபதி அவர்களால் "காகிதப் புலி கள்" நாடகம் குறித்து எழுதப்படும் வாய்ப்புக் கிட்டியது. அந்த நாடகம் பல கிராமங்களில் மேடையேற்றப்பட்டு மக்களது அமோக வரவேற்பைப் பெற்றிருந்தது. நவீன அரங்க உத்திகளைப் புரிந்துகொள்ளக் கலைத்தீட்சை அவசியமில்லை, உழைக்கும் வெகுசனங்களும் அதனை ஏற்பர் என்பதனை "காகிதப் புலிகள்" எடுத்துக் காட்டி இருந்தது.

அப்போது "நாடகமும் அரங்கியலும்" என்ற பாடம் அறிமுகப்பட்டு இருக்கவில்லை. உயர்தர வகுப்பி லும் பல்கலைக் கழகத்திலும் கலைத் திட்டத்துக்கு உரிய இடத்தை நாடகம் பெற்றபோது யாழ் மண்ணில் ஏற்பட்ட அரங்காடலின் நவீனப் பிரவேசத்தைக் "காகிதப் புலிகள்" தொடக்கி வைத்திருந்தது என்ற விடயம் கைலாசபதி வாயிலாகக் கவன ஈர்ப்புக்கு உள்ளானது. அந்த நாடகம் இவ்வகையில் பெற்ற முக்கியத்துவத்தை, நாடக நூலொன்றுக்கான முன்னுரையில் பேராசிரியர் கைலாசபதி சுட்டிக்காட்டி இருந்தார்.

நெல்லியடியில் இயங்கிய அரங்காடிகள் என்ற அமைப்பு 1976 ஆம் ஆண்டு ஏற்பாடு செய்திருந்த கலை நிகழ்வில் இந்த நாடகம் மேடையேற்றப்பட்டது. புரட்சிகரக் கொம்யூனிஸ்ட் கட்சிக் கோட்டைகளில் ஒன்றாக அப்போது இருந்த நெல்லியடி, நவீன நாடகத்திலும் பெரும் சாதனைகளைச் செய்திருந்தது. சாதியத் தகர்ப்புப் போராட்ட அனுபவங்களின் அடிப் படையிலும் அந்தப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையிலும் காத்தவராயன் கூத்து மெட்டைப் பிர யோகித்து மோடிப்படுத்திய வடிவில் "கந்தன் கருணை" நாடகத்தை அரங்காடிகள் உருவாக்கி யாழ் மண்ணின் குக்கிராமங்கள் தோறும் மேடையேற்றி இருந்தார்கள்.

அத்தகைய களத்தில் எமது நாடகம் மேடை யேற்றப்பட உள்ளதெனும் அறிவிப்பில் "இன்னும் சில நொடிகளில் ஆரம்பமாக உள்ள காகிதப்புலிகள்..." எனத் தொடங்கி, அதன் வீரப் பிரதாபங்களை அடுக்கிச் சென்றேன். அங்கேயும் நாடகம் பெரும் வரவேற்பைப் பெற்றது. "நாடகத்தைப் பற்றிய அறிவிப்பில் அளவு கணக்கில்லாமல் அறிவிப்பாளர் சொன்னபோது, இந்த வாய்ச்சவடால்கள் தேவையா என்று சலிப்புத் தட்டியது. நாடகம் சிறப்பாக இருந்தது என்றாலும் இதுபோன்ற புகழுரைகளைத் தவிர்ப்பது நல்லது" எனப் பின்னர், புரட்சிகரக் கொம்யூனிஸ்ட் கட்சி வாலிபர் சங்கக் கொமிட்டிக் கூட்டத்தில் நெல்லியடித் தோழர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

அந்த விமரிசனம் அவசியமானது. அதன் பின்னர் அது போன்ற அலாரிப்புகளைத் தவிர்த்திருக் கிறோம். மூத்தவர்களான நெல்லியடித் தோழர்கள் பல வகைகளில் எங்களுக்கு வழிகாட்டும் முன்னோடிகளாக விளங்கியவர்கள். தொடர்ந்தும் அரங்காடிகள் அமைப்பு இயங்க இயலாமல் போனாலும் எமது ஈழத் தமிழ் அரங்க வரலாற்றிலும் அரசியல் பண்பாட்டுத் தளத்திலும் அது ஏற்படுத்தி உள்ள தாக்கம் வலுவானது.

தோழர் சண்முகதாசன் தலைமையில் இயங்கிய புரட்சிகரக் கொம்யூனிஸ்ட் கட்சியின் கலைக் குழுவாக அது திகழ்ந்தது. நெல்லியடிப் பிரதேசத்தைக் களமாகக் கொண்டு அன்றைய எமது முன்னோடிகளது சமூக - அரசியல் செயல்வீச்சின் பெறுமானத்தை யாழ்ப் பாணக் கிராமங்களில் காத்திரமிக்கதாய் பரவலாக்கு வதற்கு மிகப்பெரும் பங்களிப்பை நல்கிய ஒரு தலை முறைக்கான பண்பாட்டு அணி, அரங்காடிகள் அமைப்பு. சமூகத்தின் மீது வலுவான தாக்குறவுகளை அவ்வமைப்பு ஏற்படுத்திய பின்னர் எமக்கான பாதை திசை மாறத் தொடங்கியது. உழைக்கும் மக்கள் இனபேத மற்று ஒன்றுபட்டுப் போராடுவதனை நாசப்படுத்தும் நோக்குடன் இனங்களிடையே மோதல்களை ஏற்படுத்து வதான அடுத்த கட்ட வளர்ச்சிகள் அரங்கேறிப் பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடியாக வேண்டிய அவசியம் ஏற்பட்டபோது "இன-மத-சாதி பேதங்களைத் தகர்க்கும் குறிக்கோளுடன் இயங்கிய" அரங்காடிகள் அமைப்பு முந்திய தனது வரலாற்று வகி பாக நிறைவைப் பதிவு செய்து அமைதி காணலாயிற்று.

"சமத்துவச் சமூகம் படைக்கும் சர்வதேசப் பாட்டாளி வர்க்கக் கடமைக்கான பண்பாட்டு அணி" எனும் விரிந்த நோக்குடன் இயங்கியது அரங்காடிகள் அமைப்பு கால மாறுதலுடன் திறந்த பொருளாதார ஊடுருவல் ஏற்பட்டபோது அதற்கு முகங்கொடுத்துத் தன்னைத் தகவமைக்க ஏற்ற மாற்று வழி கண்டு பயணிக்க இயலாமல் போனமையால் வரலாற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடம்பதித்து விடைபெற்றிருந்தது அந்த அமைப்பு. அவ்வாறன்றி எமது கிராமத்தின் புதிய பண்பாட்டு எழுச்சிக்கெனக் காலையடி மறுமலர்ச்சி மன்றம் உதயமாகி இயங்கியதனால் அதை நோக்கி இன்னமும் இயங்க இயலுமாகி உள்ளது!

கடின உழைப்புக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்த எமது சமூகம் 1977 ஆம் ஆண்டில் அறிமுக மான திறந்த பொருளாதார அமைப்போடு இணைந்து ஊடுருவிய நுகர்வுப் பண்பாட்டு வாழ்வியலுக்கு இடமளித்து நாற்பத்தெட்டு ஆண்டுகள் கடந்துள்ளன. இதனை மாற்றும் விழிப்புணர்வு இப்போது தான் சாத்திய மாகும் வாய்ப்பை எட்டியுள்ளது. நான்கு தசாப்தங்கள் நீடித்த பாதகமான பண்பாட்டுச் சூழலில் எமது மன்றமும் பாதிப்புகளை முகங்கொண்ட போதிலும் அதனின்றும் மீளும் எத்தனிப்பில் இயங்க ஏற்றதான உயிர்த் துடிப்பு இன்றும் உள்ளது. மன்றம் தோற்றம் பெற்று இயங்கிய முறைமை அதற்கான வலுவை வழங்கியுள்ளது.

மன்றம் உருவாகக் காரணமாக அமைந்த சூழலும் அதனை அமைப்பாக்கிய சக்திகள் ஏற்படுத்திய ஒற்றுமைக்கான அடித்தளமும் அந்தப் பலத்தை வழங்கின. முன்னதாகக் "காலையடி முருகன் விளை யாட்டுக் கழகம்" (கே.எம்.வி.கே.) என இயங்கி வந்தவர் களான நாம், அந்த இடத்தில் தாமும் பங்குபெற விரும்பியவர்களை இணைத்து ஒன்றுபட்ட சக்தியாக 1972 ஆம் ஆண்டில் "காலையடி மறுமலர்ச்சி மன்றம்" எனப் பரிணமித்து இருந்தோம்.

ஆங்கில முன்னெழுத்துகளில் கே.எம்.வி.கே. என எமது கழக முத்திரையை அழிரப்பரில் வெட்டிப் பேனா மையில் தோய்த்து அதிர்ஷ்ட லாபச் சீட்டு தயாரித்து, எமது அந்த முத்திரையைக் குத்தி, விற்பனை செய்து, பரிசில்களுக்காக ஒரு பகுதிப் பணம் போக, மிஞ்சி வந்த மேலதிக லாபத்தில் "காலையடி முருகன் விளையாட்டுக் கழகத்தை" நடாத்தி இருக்கிறோம். அப்போது பதினான்கு வயதான ஓரிருவர் மூத்தவராக இருக்க பதின்மூன்று வயதிலிருந்த நான் உட்பட்ட சகபாடிகளும் அடுத்தடுத்த வயதுகளுக்கு உரியோரும் என இருபது, முப்பது பேர் இணைந்து 1968 ஆம் ஆண்டில் அந்தக் கழகத்தை உருவாக்கி இருந்தோம்.

அவ்வாறு ஒரு அமைப்பாகச் செயற்படுவதற்கு பனிப்புலம் அம்மன் கோயிலுடன் இணைந்திருந்த "பண்ணாகம் வடக்கு அம்பாள் சனசமூக நிலையம்" காரணமாக அமைந்திருந்தது. முன்னதாக, இரண் டொரு வருடங்களாக அந்தச் சனசமூக நிலையம் துடிப்புடன் இயங்கிப் பண்பாட்டு விருத்திக்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தவாறு இருந்தது.

அம்பாள் சனசமூக நிலையம் நாளாந்தம் எங்களை உள்ளிணைத்து இயங்குகிற வகையில் இரவுப் பாடசாலையை நடாத்தியது. இன்றைய "பிரத்தியேக வகுப்பு" (ரியூற்றறி) முறை போன்றதல்ல அது. காசைக் கொட்டிப் படிப்பதாக உள்ளதோ, புகலிடப் பணக் குப்பையில் இயக்கப்படும் "இலவசக் கல்விக் கூடம்" எனப் போட்டிபோடுகின்ற அமைப்புகள் "புள்ளிபெறும் மல் யுத்த வீரர்களாக மாணவர்களைத் தயார்படுத்தும்" பலிக் களங்கள் போன்று அமைக்கப்பட்டதோ அல்ல அது.

இன்றைய அந்தப் பிரத்தியேக வகுப்புகளுக்கு உரியனவற்றில் பல, காலத் தேவைக்கு அவசியப்பட்ட நல்ல பணிகளை மேற்கொள்ளும் உணர்வுடனும் இயங்குகின்றன என்பதை மனங்கொள்ளும் அதே வேளை, சமூக முறைமையினதும் கல்வி அமைப்பினதும் தவறுகளால் பயனற்ற விளைவுகளையே ஏற்படுத்து கின்றன. போட்டிப் பரீட்சைகளின் புள்ளிக் குவிப்பை மதிப்பிட்டு வழங்கப்படும் "சான்றிதழ் தொழிற்சாலைப் பத்திரத்தை" வைத்துக்கொண்டு வேலை கொடு என்ற மேலதிகமாக மற்றும் ஒரு போராட்டக் களத்தை உற்பத்தி செய்து வைத்துள்ள இன்றைய அமைப்பின் கேடு பற்றிப் பின்னாலே பேச வேண்டும்.

அம்பாள் சனசமூக நிலையம் அன்று (சென்ற நூற்றாண்டின் அறுபதாம் ஆண்டுகளின் பிற்கூறில்) நடாத்திய இரவுப் பாடசாலை என்பது உயர் விழுமியப் பண்பாட்டு எழுச்சியுடன் அறிவு, திறன் விருத்திகளை வழங்க ஏற்ற செயலொழுங்குகளை உட்படுத்தி இயங்கியிருந்தது. சொந்தக் கால்களை அடித்தளமாக வலுப்படுத்தி வாழக் கற்றுத் தந்ததுடன் ஏனையவர் களுடன் சேர்ந்து வாழும் கூட்டு மனப்பாங்கு ஒவ்வொரு வரிடமும் கைவசப்படுவதற்கான, கல்வியின் உண்மைக் குறிக்கோளை அந்த இரவுப் பாடசாலை ஏற்படுத்தித் தந்தது. கழகம், மன்றம் என இயங்கி நாங்கள் வளர்ந்த போது எமக்கான நிதி ஆதாரங்களை நாங்களே தேடிச் சொந்தக் கால்களில் தங்கி நின்றமையாலேயே பின்னர் சமூக மாற்றச் சிந்தனை வளர்ச்சியில் புதிய தளங்கள் நோக்கி எங்களால் வளர இயலுமாக இருந்தது!

இவ்வகையில் எமது மூத்தோர் எம்மிடம் ஏற்படுத்தி இருந்த கல்விக்குரிய வலுவான அடித் தளத்துடன் அவர்கள் இணைக்கற்றல் செயற்பாடாக முன்னெடுத்த அம்சங்களும் எம்மால் தொடர்ந்து வளர்த்தெடுக்கப்படும் முன்னுதாரணங்கள் ஆகின அவற்றின் இணைப்புத்தான் மேலே சொன்ன முழுமைக் கல்விப் பண்பு!

அந்தக் கல்வியுடன் ஆண்டுதோறும் இடம் பெற்ற விளையாட்டுப் போட்டிகள், கலை விழாக்கள், பேச்சு - எழுத்தாக்கப் போட்டிகள் என்பன எம்மை வளர்த்தன. பின்னர் அதனைப் போலச் செய்து எங்களை யும் சமூகத்தையும் புதிய பண்பாட்டுத் தளம் நோக்கி வளர்த்தெடுக்க ஆற்றுப்படுத்தின!

இவற்றுடன் கூடவே அம்மன் கோவில் திருவிழாக்களையும் எங்கள் முற்றங்களில் "போலச் செய்து" மீட்டுருவாக்கத் தொடங்கினோம். சிறிய கொட்டகைக் கோயில் கட்டி, அதன் முன்றலில் உடைந்த தகர வாளியைப் பெரிய மேளமாக்கிப் பூவரச மிலை நாதஸ்வரத்துடன் இசைக் கச்சேரி வைத்தோம் இரவுத் திருவிழாக் கூத்துப் போலப் பகலில் நாடகங்கள் போட்டோம்.

சனசமூக நிலையக் கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுத்த அன்றைய முதிர் இளைஞர்கள் வேலை வாய்ப்புகளுடன் இடம்பெயர்ந்ததைத் தொடர்ந்து இரவுப் பாடசாலை தடைப்பட்டுப் போனது. அதனையும் நாங்களே சுயசார்பில் முன்னெடுத்தோம். எங்களில் மூத்தோர்கள் அடுத்தடுத்த வகுப்புகளுக்கு உரிய இளையவர்களுக்கு வகுப்பெடுக்கத் தொடங்கினோம். வீட்டைச் சுற்றி ஓட்டப் போட்டியை நடாத்த முற்பட்டதில் வீடுவளவே விளையாட்டு மைதானமாகியது.

இந்த விளையாட்டு - பண்பாட்டுக் களமாடல் என்பதான போலச் செய்தலுடன் பாடசாலைகளில் பார்த்துப் படித்த ஆய்வுகூடத்தை அமைக்கும் துடிப்பும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களிடம் ஏற்பட்டது. "கோயில்" சார் பண்பாட்டம் சங்கள், விளையாட்டு மைதானம் என்பனவற்றின் களமாக என்னுடைய வீடு இருக்க, சந்திரன் வீட்டில் ஆய்வுகூடம் உருவாக்கப்பட்டது. எங்களில் மூத்தவரான சந்திரன் பல விடயங்களில் தலைமைப் பண்புடன் எங்களுக்கு முன்னோடியாக இருந்தார்.

ஒரு சிறிய அலுமாரியில் பௌதிக, இரசாயன, உயிரியல் ஆய்வுகூடப் பிரிவுகள் அமைக்கப்பட்டு இருந்தன. அந்த "அலுமாரி ஆய்வுகூடத்தினுள்" கண்ணாடிப்போத்தல் ஒன்றினுள் பாதரசமும் இருந்தது. தவழும் குழந்தையான சந்திரனின் இளைய தங்கை அலுமாரியைத் திறந்து பாதரசப் போத்தலை எடுக்க முயன்ற போது, அது கீழே விழுந்து உடைந்ததில் சிதறிப் பரவிய பாதரசம் பிஞ்சுக் கரங்களில் இருந்த பொற் காப்பைச் சேதப்படுத்தி அழித்திருந்தது. இந்த விபத்தின் விளைவாக அந்த அலுமாரி ஆய்வுகூடமும் எனது வீட்டுக்குப் புலம்பெயர்ந்து வந்துவிட்டது!

ஆய்வுகூடம் வெளியேறிவிட்டாலும் இணைந்த கற்றல் பரிமாற்றத்தின் பெரும் பகுதி சந்திரன் வீட்டிலே தான் தொடர்ந்தும் இடம்பெற்றது. சில வகுப்புகள் எமது வீட்டிலும் நடந்தன. இவ்விரு "வளாகங்களுக்கும்" இடை நடுவே தான் எமக்கான மன்றமாக ஆகப் போகின்ற பெரும் வளவு இருந்தது. அப்போது அது "வெற்றி மடம்". ஒரு பெரிய காணியின் நடுவே வேல் வைத்து வழிபாடாற் றப்படும் தனியார் மடம் (கூட்டுக் குடும்பத்துக்குச் சொந்த மானது) அது. கூட்டுக் குடும்பத்தவர்களில் வெற்றி என்பவர் பராமரிப்பாளராக வந்து போனதில் ஊரவர் அதனை வெற்றிமடம் என்றே அழைத்தனர். எமது கிராமப் பெருநிலம் பனிப்புலம் - அதன் கிழக்கு எல்லையில் காலையடி உள்ளது, வடமத்தியில் அமைந்த "செட்டிகுறிச்சி" தான் இந்த மடத்துக்கான கூட்டுக் குடும்பத்தவர் வதிவிடம். அந்த இடத்தில் இருந்து வந்துபோய் பராமரிப்பை வெற்றி என்பவர் முன்னதாக மேற்கொண்டிருந்தார்.

வெற்றி அவர்களது பராமரிப்புத் தொடர்ந்த வரை அந்த மடத்துக்கும் கிராமச் சனங்களுக்கும் எந்தவொரு தொடுசலும் இல்லை. அவருக்குப் பின்னர் அந்த மடத்தைப் பராமரிக்க வந்தவரான கந்தையா வாத்தியார் (ஆறுமுகம் கந்தசாமி ஆசிரியர்) மடத்துக்குள் ஊரவரை அனுமதித்தார்.

மடத்தின் வடக்கெல்லை வேலி எங்களுடைய வீட்டுக்கானது. வீடு வளவை மைதானமாக்கிச் சிரமப்பட்ட எங்களை உள்ளீர்த்த கந்தையா வாத்தியார், "காலையடி முருகன் விளையாட்டுக் கழகம்" அங்கே உருப்பெற அனுமதித்தார். இவர் எமது தந்தையர் களுடன் இணைந்து அம்பாள் சனசமூக நிலையம் உரு வாகுவதற்கு உழைத்தவர் அதன் முதல் தலைவராகப் பங்களித்தவரிடம் அடுத்தடுத்த தலைமுறைக்கு உரியவர்களான எமது பண்பாட்டு விருத்தியின் மீதும் அதிக அக்கறை இருந்தது.

கந்தையா வாத்தியாரின் அனுசரணையுடன் உருவான "காலையடி முருகன் விளையாட்டுக் கழகம்" வளர்ந்து புதிய பாதைக்கான அடித்தளத்தினை அமைத்த கதையைப் பற்றித் தொடர்ந்து பேசுவோம்!

## இருளின் ஒளி

மெல்ல நடக்கும் கால்கள்
சொல்ல மறந்த காதல்
தன் கண்கள் கொடுக்காத
காட்சிகளை
அவளின் கைகள் கொடுத்தது..
இவன் பார்வை இருண்ட பின்பும்
அவளின் காதல் ஒளி கொடுத்தது..

அவன் செவிகள்
கொடுக்காத இன்பத்தை
சிந்தையில் சிறகடிக்கும்
கைவண்ணமாய்
செதுக்கும் சிற்பியாய் அவள்
மெய் மறந்து வியக்க வைக்கும்
மாயக்காரி அவள்...

சுருங்கிய தோலுடன்
சுருங்காத சிரிப்புடன்
அவள் தோல் கொடுக்கும் காட்சியை
பார்க்கையிலே..
நம் வரண்டு போன உள்ளத்திலும்
காதல் தவண்டு கடந்து செல்ல
உண்மையான அன்பின் வாசம்
மூக்கின் முனை வரைக்கும் வந்து
போகின்றது.....

- மு.ற.அஸ்ரம்

## யாருக்கு அவள் மனைவியானாள்...?

பார்வையில் அந்தப்பெண்
அழகாய்த்தானிருந்தாள்
கருவறைக்கோலத்து
மீனாட்சியின் நெற்றிக்குங்குமம்
கலைந்தும் கலையாத கருங்கேசம்
இல்லாமை செழித்திடும்
இருபெரும்விழிகள்
காய்ந்த கரிசல் நிலமென
வறட்சி கண்ட அவள் உதடுகள்
கள்ளிப்பாலில் கரையாத
ஒரு கருவறைக்கனி
அவள் கர்ப்பத்தில்
இன்னொன்று அவளக்கத்தில்
யாருக்கு அவள் மனைவியானாள்
தெருப்புறத்து மன ஓனங்கள்
சதிராடும் முன்பே
மெல்லென மறைந்தாள் அவள்
ஆயினும்,அவள் யாரென
தோம்பு தேடிய விகாரங்கள்
அலுத்துக் கொள்ளவேயில்லை
அவள் யாருமல்ல...!
"பொன்னகரத்தின்
இன்னொரு நாயகி"

- தன.தனேஸ்வரன்

ஓராண்டு நிறைவில்
கலாநிதி த.கலாமணியின் ஆத்ம
சாந்திப்பிரார்த்தனையும் நினைவுப்
பகிர்வும் "சிந்தையெல்லாம்
நிறைந்தவரே" நூல் வெளியீடும்
30.01.2025 அல்வாயில் உள்ள
கலைஅகத்தில் கலாநிதி பா.தனபாலன்
தலைமையில் நடைபெற்றது.
நினைவுப்பகிர்வுகளை கலாநிதி
வை விஜயபாஸ்கர், அதிபர் திரு
எம்.சி.சுதாகரன், அதிபர்
என். விமலநாதன் ஆகியோர்
வழங்கினார்கள். நூல் பற்றிய
கருத்துரையை கோப்பாய் ஆசிரியர்
கலாசாலை அதிபர் ச.லலீசன் நல்கினார்.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்மைக்காக குரல் கொடுக்கும் கலகக்குரல் அந்தனிஜீவா




■ வதிரி சி.ரவீந்திரன்

ஈழத்து கலை இலக்கிய உலகில் பெரும் இழப்புகள் தொடராகவே நடைபெற்றுக் கொண்டிருக் கிறது. கலை இலக்கியத்தின் முக்கிய புள்ளிகள் எம்மை விட்டு பிரிகிறார்கள். இந்த இழப்புகளில் பெரும் சோகமே நிகழ்கிறது. அந்த இழப்புகளில் மூத்த கலை இலக்கிய வாதியான அந்தனிஜீவாவின் இழப்பும் பேரிழப்பாகும்.

அந்தனிஜீவாவை ஒரு கலகக்காரன் என்று நன்கு அறிந்தவர்கள் சொல்லுவார்கள். எங்கு பிழை யெனத் தெரிகிறதோ அதனை மறுக்காது தட்டிக் கேட்கும் சுபாவம் கொண்டவர். கலை இலக்கியத்துறை யில் தனக்கென ஓரிடத்தை பதித்தவர். சிறிதுகாலம் நோய்வாய்ப்பட்டு இருந்த ஜீவா 10-01- 2025 அன்று இறைவனது அழைப்பை ஏற்றுக்கொண்டார். 1960களில் எழுத ஆரம்பித்த அந்தனிஜீவா சிறுகதை, பத்தி எழுத்து, மேடைநாடகம், தெருக்கூத்து என்று தன்னை வெளிப் படுத்தியவர். இடதுசாரித்துவக் கொள்கையில் பிடிப் புள்ள இவர் முற்போக்கு இலக்கியவாதிகளுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டவர்.

இவரது "அக்னிப் பூக்கள்" நாடகம் 1977ம், ஆண்டு பொரளை வை.எம். பி.ஏ.யில் அரங்கேறியது. அதைத்தொடர்ந்து நாடகத்தயாரிப்புகளில் தன்னை வெளிப்படுத்தியிருந்தார். இவர் தயாரித்த "ஆராரோ ஆரிவரோ" நாடகம் தேசிய நாடகவிழாவிலும் பல விருது களை பெற்றுக் கொண்டது. தேசிய நாடக ஆலோ சனைக்குழுவில் பலகாலம் அங்கம்வகித்து தமிழ்நாடக விழாக்களை நடாத்தியும் பல தமிழ்க்கலைஞர்களையும் வளர்த்து விட்டதில் அந்தனிஜீவாவுக்கு ஓர் இடமுண்டு.

கொழும்பில் பிறந்த ஜீவா மலையக மக்களைப் பற்றிச் சிந்தித்து செயலாற்றியவர். மலையகக்கலை இலக்கியப்பேரவை என்ற அமைப்பினை உருவாக்கி அதனூடாக இலக்கிய மாநாடுகளையும் நடாத்தியவர். "கொழுந்து" என்ற கலை இலக்கிய சஞ்சிகையூடாக மலையக மக்கள் பற்றியும் மலையகப் படைப்பாளிகளும் வளர்வதற்கு உந்துசக்தியாக விளங்கினார்.

ஒரு கலை இலக்கியக் களஞ்சியமாக திகழ்ந்த இவர் தமிழகத்து படைப்பாளிகள், நாடக அறிஞர்கள் பற்றிய விபரங்களையும் ஈழத்து எழுத்தாளர் பற்றிய தகவலையும் தன்னுள் வைத்திருந்தார்.

வேண்டிய போதெல்லாம் தகவல்களை வழங்கும் ஒருவராகவும், எல்லோருடனும் நட்போடு பழகிய ஒருவராகவும் வாழ்ந்தார். தேசிய நாடக சபையில் "நாடக ரத்ன விருது" வழங்கும் போது தமிழர் ஒருவருக்கு வழங்கப்படுவதை நவாலியூர் நா.செல்வத்துரைக்கு சிபார்சு செய்து வழங்க வைத்திருந்தார். நவாலியூரான் மலையகத்து மக்களோடு நாடகத்தை வளர்த்தமையால் அவருக்கு கிடைப்பதில் மகிழ்வு கண்டார். அந்தனிஜீவா "மலையகமும் இலக்கியமும்" "ஈழத்தில் தமிழ் நாடகம்" "மலையக மாணிக்கங்கள்" "மலையக தொழிற்சங்க வரலாறு" ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார்.அந்தனி ஜீவாவிற்கு ஜீவநதி சிறப்பிதழ் வெளியிட்டு அந்தனி ஜீவாவை கௌரவப்படுத்தியமையும் இவ்விடத்தில் பதிவு செய்யத்தக்கது.

படைப்பாளிகளையும் கலைஞர்களையும் வளர்த்துவிடுவதிலும் அந்தனி ஜீவா முதன்மை பெற்றவராக விளங்கினார்.

அந்தனிஜீவாவின் மறைவு குறித்து தமிழகத்திலும் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றமை ஜீவாவில் இருந்த அதிக அக்கறையை காட்டுகிறது. அந்தனி ஜீவா மறைந்தாலும் கலை இலக்கிய வாதிகளால் என்றும் நினைவுகொள்ளப்படுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனின் நாட்டம்

■ எஸ். ஏ. கப்பார்



சமீமா இம்முறையும் போட்டிப் பரீட்சை எழுதி விட்டு வீடுவந்து சேர்ந்தபோது ஆறு மணியாகி விட்டது. இது அவளெழுதிய ஐந்தாவது போட்டிப் பரீட்சை. பல்கலைக்கழகப் பட்டம் பெற்றதன்பின் ஏற்கனவே நான்கு போட்டிப் பரீட்சைகளுக்கு முகங் கொடுத்துள்ளாள். மூன்று நேர்முகத்தேர்வுகளுக்கும் சமுகமளித்துள்ளாள். போட்டிப் பரீட்சைகளில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றும் நேர்முகத்தேர்வுகளுக்கு முகங்கொடுத்துவிட்டு ஆவலுடன் காத்துக்கிடந்ததைத் தவிர வேறு எதையும் காணவில்லை. அவளுடன் போட்டிப் பரீட்சைகளுக்குச் சென்ற பக்கத்து வீட்டு பரீனா, இரண்டு தெரு தள்ளி வசிக்கும் மசிஹா எல்லாம் உத்தியோகம் பெற்று இரண்டு வருடங்களாகிவிட்டன. திருமணமும் முடித்துவிட்டார்கள். இத்தனைக்கும் அவர்களெல்லாம் சமீமாவைவிட போட்டிப் பரீட்சையில் குறைந்த புள்ளிகள் பெற்றவர்கள். எப்படித்தான் உத்தியோகம் பெற்றார்களென சமீமா அடிக்கடி யோசிப்பதுண்டு.

நேர்முகத் தேர்வு முடிந்து வீடு வந்ததும் முதலில் உம்மா ஓடிவந்து சமீமாவை உச்சி முகர்ந்து ஆறுதல் வார்த்தைகள் கூறுவாள். வாப்பா வீட்டிலிருந்தால் நன்கு விசாரித்து உற்சாகப்படுத்துவார். இன்று அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை. உம்மா வாப்பா வீட்டில தான் இருந்தார்கள். இருவரும் ஏதோ உரையாடுவது தெரிந்தது. "உம்மா, நான் வந்துட்டேன்" எனக் கூறிக் கொண்டு அவர்களை நோக்கிச் சென்றாள், சமீமா.

"எத்தனை பரீட்சைக்குத்தான் போய் வந்துட்டே. அவ்வளவுதான் மிச்சம். ஒன்னோட சோதின எழுதினவளெல்லாம் உத்தியோகமும் எடுத்து கலியாணமும் பண்ணி புள்ளையும் பெத்துப் போட்டாளுகள். ஒனக்கு மட்டும்தான் இந்தக்கெதி." உம்மா அலுத்துக்கொண்டாள்.

"நான் என்ன செய்யிற உம்மா. அவளுகளுக்கெல்லாம் வாப்பா, காக்காமார் அவங்களுக்குத் தெரிஞ்ச அரசியல்வாதிகள, உயரதிகாரிகளப் புடிச்சி எப்படியோ எடுத்துக்கொடுக்கிறாங்க. எனக்கு யார் இருக்கா?" சமீமாவுக்கு அழுகை முட்டிக்கொண்டு வந்தது.

"அதுதான் நானும் உங்க வாப்பாக்கிட்ட சொல்லுற. யாரையாவது புடிச்சி காசையாவது குடுத்து அவள்ள பிரச்சினயப் பாருங்கெண்டு. கேட்டாத்தானே. அல்லாஹ் நாடினதுதான் நடக்கும். அவளுக்கெண்டு ஒண்டு இல்லாமலா போயிடும். பாப்பம் பாப்பம் எண்டு காலத்தக் கடத்துறார். ஒண்ட தம்பியும் சயன்ஸ்தான் படிக்கான். அவன நெனச்சாலும் பயமாத்தான் இருக்கு." பிள்ளைகளின் எதிர்காலம் என்னவாகுமோ என்ற கவலை சமீமாவின் உம்மாவுக்கு.

***

மூன்று மாதங்களின் பின் ஒரு காலைவேளை, சமீமாவின் தம்பி அவசர அவசரமாக சமீமாவின் அறைக்குள் நுளைந்து "தாத்தா, நீங்க போன இன்ரவியூ ரிசல்ட்ஸ் இணையத்திலே வெளியாகியிருக்காம். எண்ட பிறண்ட் றமீஸ் சொன்னான். அவன்ட நானாவுக்கும் கிடைச்சிருக்காம்." எனக் கூறிவிட்டு நகர்ந்து சென்றான், தம்பி சமீர்.

சமீர் இம்முறை உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு முடிவுக்காகக் காத்திருப்பவன். காலத்தை வீணடிக்காது ஆங்கிலம் மற்றும் கணினிக்கல்வி வகுப்புகளுக்குச் சென்றுவருகிறான். தானும் தன்பாடும், வீடும் வகுப்புமென வாழ்ந்து வருபவன்.

சமீமாவுக்குக் கைகள் உதற ஆரம்பித்தன. இலேசாகப் பயமும் தொற்றிக்கொண்டது. இம்முறையாவது எடுபட்டுவிடவேண்டுமென இறைவனைப் பிராத்தித்தவளாக, கையடக்கத் தொலைபேசியில் இணையத்தை அணுகியவளின் முகம் வாடிப் போனது.

"சீ.. இம்முறையும் கிடைக்கவில்லை. நான் என்ன பாவம் செய்தேன். உம்மா வாப்பா என்னப் படிப்பித்து ஒரு பட்டதாரியாக்கி ஒரு தொழில் எடுத்தா என்னக் கல்யாணம் முடிச்சிக் கொடுத்திட்டு நிம்மதியா இருக்கலாமெண்டு கனவுகண்டாங்க. எண்ட கஷ்ட காலம் அவங்களையும் போட்டாட்டுது. அத நெனச்சாத்தான் பெரும் கவலையாயிருக்கு. மாப்பிள கேட்டுப் போனாலும் பொண்ணு என்ன உத்தியோகம் பாக்கிறா எண்டுதான் முதல்ல கேக்கிறாங்க. நான் கலியாணம் முடிக்காவிட்டாலும் பரவாயில்ல. எப்படியாவது ஒரு தொழில அல்லாஹ் தருவான். தம்பிக்காவது நல்ல ரிசல்ட்ஸ் கிடைச்சுடனும். யூனிவர்சிடிலே நல்லதொரு இடங்கிடைச்சு படிப்ப முடிச்சிட்டானென்றால் உம்மா வாப்பாவ நல்லா பாத்துக்குவான்." மனதில் பெரும் பாரத்தைச் சுமந்தவளாக, கவலைகள் எல்லாவற்றையும் படைத்தவனிடம் ஒப்படைத்துவிட எண்ணி, மதியநேர தொழுகையழைப்புக் காதில் விழும்வரை கட்டிலில் மெதுவாகச் சாய்ந்தாள்.

கையடக்கத் தொலைபேசி அலறியபோதுதான் கண்விழித்துப் பார்த்தாள். தொழுகை நேரம் கடந்து விட்டதையறிந்து, அழைப்புக்குப் பதிலளித்துவிட்டுத் தொழுவோம் என எண்ணி அவசரமாக "ஹலோ"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாள். சமீமாவின் தோழி பர்கானா நியூசிலாந்தி லிருந்து அழைத்துக்கொண்டிருந்தாள்.

"சமீமா. அஸ்ஸலாமு அலைக்கும். ஒரு குட் நியூஸ். எண்ட மச்சான் வேலை செய்ற கம்பனியில வெளி நாட்டுப் பிரஜைகளுக்கு பத்து வீதம் இடம் கொடுக் கிறாங்க. நல்ல சான்ஸ். நல்ல சம்பளம். உன்னப் போல கெட்டிக்காரிகளுக்கு நல்ல வாய்ப்பு. உனக்கு இங்லிஷ், கொம்பியூட்டர் எல்லாம் தெரியுமென்பதால வேலை செய்யிறதும் லேசு. நான் ஒண்ட தகவல்கள கொடுத் திருக்கேன். இப்ப, நான் வட்ஸ்அப்பில கேட்டிருக்கிற இன்ஃபர்மேஷன் எல்லாத்திடயும் ஒரிஜினல் எடுத்து ஸ்கேன் பண்ணி நாளைக்கே வட்ஸ்அப் பண்ணு. பாஸ்போட் இருப்பதால அதுவும் லேசு. டிக்கட், விசாவெல்லாம் எண்ட பொறுப்பு."

-அவள் பட படவெனத் தொடர்ந்தபோது சமீமாவுக்கு வியத்துக்கொட்டியது.

"அதில்ல பர்கானா. வெளிநாட்டுக்குப்போய் வேலைசெய்ய உம்மா வாப்பா சம்மதிப்பாங்கண்டு தெரியல்ல. அதுவும் குமர்ப்பிள்ளை. அதுதான் யோசிக்கிறேன்."

"அட.. அங்ககெடந்து என்ன செய்யப்போற. எடுக்கிற சம்பளம் பத்து நாளைக்கும் காணாது. நானும் குமர்ப்பிள்ளையாத்தானே வந்தேன். அதக்கப்புறம் தானே பொண்ணுகேட்டு வந்தாங்க. நான் புருஷன் புள்ளயளோட நல்லாத்தானே இருக்கேன். விடு.. நான் இரவைக்கு உம்மா வாப்பாவோட கதைக்கேன். நீ ரெடியாகு. விஸ் யு மெனி மோர் கெப்பி லைப்." எனக் கூறிவிட்டு தொடர்பைத் துண்டித்தாள்.

***

பல போராட்டங்களுக்கும் விவாதங்களுக்கும் மத்தியில் கண்ணீருடன் குடும்பத்தைப் பிரிந்து தொழிலுக்காக வெளிநாடு சென்ற சமீமா, ஒரு வருடத் துக்குள் தன் தம்பியை வைத்தியத்துறையில் கல்விகற்க ரஷ்யாவுக்கு அனுப்பிவைத்தாள். அவனும் நன்றாகக் கற்றுவருகிறான்.

காலம் மிக வேகமாகப் பறந்தோடியது. சமீமா வும் அங்கேயே தான் வேலைசெய்யும் நிறுவனத்தில் பணி புரியும் நம் நாட்டைச் சேர்ந்த என்ஜினியர் ஒருவரைத் திருமணம் முடித்து, இன்னும் இரு வாரங்களில் இரட்டைச் சமீமாக்களைப் பெற்றெடுக்கப்போகிறாள்.

***

மகள் சமீமாவையும் பிறக்கப்போகும் தங்களது இரட்டைப் பேரப்பிள்ளைகளையும் நியூசிலாந்து சென்று கண்டு மகிழப்போகும் அவாவில், விமான நிலை யம் நோக்கிய இன்றைய பயணத்தை ஆரம்பித்தார்கள், சமீமாவின் பெற்றோர்.

## கடல் !!

பூமிக்குள் ஒரு பகுதியில்
புதைந்துகிடக்கும் நீ
பூமியே உனக்குள் என்பதாய்
வாக்களிக்கா வாய்ச்சவடால்காரர்கள்
தம்நிலை மறந்து அடிக்கடி
தம்பாட்டில் அலட்டிக்கொள்வதுபோல்
உனக்கும் எல்லைகள் இருக்கென்பதை மறந்து
உன் பாட்டில் ஆர்ப்பரித்துக் கொள்கிறாய்......

உன் அலப்பறை தாங்காமல்தான்
பூமித்தாய் சிலபோதுகளில் அதிர்ச்சி அடைந்து
சுனாமியாய் உன்னைத் துப்பித் தள்ளுகிறாள்
நீயும் ஊருக்குள் உருண்டு வந்து
வன்புணர்வு செய்து உள்ளதெல்லாம்
சுருட்டிக்கொண்டு போய்
ஆசிரமத்து கள்ளச் சாமியார் மாதிரி
மீண்டும் ஒதுங்கி அமைதி கொள்கிறாய்........

அமைதியாய் இருக்கும் உன் நடிப்பை நம்பி
இறங்கியவர்களை அவ்வப்போது உண்டு
ஏப்பம் விட்டு அலைஅலையாய்
ஏவறைகளை எடுத்துவிடுகிறாய்
அவையோ கள்ள மண் வியாபாரிகள் போல்
கரைகளில் திட்டமிட்டுக் குடியேறி
எல்லைகள் இருப்பதால் தான் எப்போதும்
பிரச்சனைகள் எழுகின்றன வென்று
நினைத்துப் போலும் எல்லைகளை இரகசியமாக
கரைத்து விடுகின்றன.......

இன மத மொழி சாதி சமூக அரசியல்
எல்லைகளை இல்லாமல் செய்து விட்டால்
எப்போதும் இடர்கள் இல்லைத்தான்......

- கந்தையா பத்மானந்தன்

## புரிதல்

சிரித்து மகிழ்ந்து
மரியாதையோடு வாழ்வது
நிறைவு என்று
பலர் நினைக்கின்றனர்.

மனதுள் துயரங்கள்
மனிதருக்கு இருப்பதை
யாருமே அறியார் !
தம் பிள்ளைகளை
நிறைவாய் பேசி
மனதுள் சுமையாக்கி
கண்ணீரால் வாழும்
பெற்றோர் !

எல்லாக் கடமையும்
எமக்கு முடிந்தது
இன்னுமொரு கடனும்
எப்போ வருமென்று
ஏங்குகின்ற
வெளிநாட்டுக்காரர் !

மனையாள் வாசம் சிறக்க
பெற்றவர் சகவாசம் மறந்த
சுதந்திரப் பறவைகளாய்
பிள்ளைகள் சிலர் !

உள்ளூர் பிள்ளைகளின்
உழைப்பில் வாழும்
உயர்ந்த பெற்றோர் !
பிள்ளைகள் வெளிநாட்டில்
முந்தானைக்குள்
முயங்கி வாழ்வதும்
புரிகிறது !

- வதிரி சி.ரவீந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டார் ஊருலா

ஆனந்தக் கூத்து அகம் முகம் மலர
ஆனந்தித்தாள் ஆதிரை
மனம் மிக மகிழ்ந்தாள் மாதுமை
இனம் புரியா இனிய பொழுது
இலங்கையில் இனத்தவர் அன்பில் மகிழ்ந்தார்
இது நம்மூரென்று மலைத்தார்
பூமணங்கண்டார் புத்தொழில் பெற்றார்
பெற்றோருடன் இணைந்தே.

வனிதையர் இருவர் கடற்கரை மேட்டின் புற்தரையில்
வேலி மரமும் மரத்தில் ஊஞ்சலும் தாளையும் சூழ்ந்திருக்க
தென்னை இரண்டு வானைத் தொட்டு
நடத்துனர் வழி காட்டத் தாயுடன் சேர்ந்தே
நடை பயின்றார் நல்ல வெண்ணாடை புனைந்தே
தென்னந்தோப்பும் வெள்ளமதிலும்
பச்சைப் படலையும் கறுப்புக்கேற்றும்
காட்டி முன் செல்ல வெள்ளைச் சோடியொன்று
வெளியேற மெதுவாக நடைபயில்வார் கடல் நோக்கி.

தாயார் தூரத் தள்ளி நிற்க
தென்னைந்தோப்புச் சூழ்ந்த வீடிருக்க வெளிக்கிட்டு
பைகள் தோளில் தூங்க
மாதுமை ஆதிரை கடல் பார்த்துக் களிப்பர்
ஆதிரை பின்வந்து சுற்றிச்சுழன்று பார்க்க
மாதுமை முன்நோக்க வானம் கடலில் வீழ்ந்து
கனிவோடு கண்கொண்டு மகிழும்
தாளைமரக் காடு தன் பச்சை காட்டி மயிர்சிலிர்க்கும்.
கருமரமொன்று பட்டமரமாகி பாதி அரிந்த படி
தேடுவாரத்துக் கரையில் கடலில் தத்தளித்து
சாய்ந்த கோபுரமாய் தவித்திருக்கும்
வேர் மிஞ்சிய பக்கத்துச் செம்மண் பார்த்தும் பரிகசிக்கும்
கோறை விழுந்து தவித்திருக்கும் தனிமரத்தில்
நண்டுகள் ஆறும் எட்டுக் கால்களுடன்
தத்தித் தடவி எட்டிப்பிடித்துப் படமெடுக்கும்.

அலைகடலோசை ஆடிவரும் வேளை
வெள்ளைச் சிரிப்புச் சலங்கைகள் முழங்கும்
மலை முகில் மேகம் பார்த்து
வெள்ளிப் பதக்கமாய் படரும்
நீலமேகம் நிலத்தின் பச்சைக்
கடலலைகண்டு நெஞ்சுருகி நிற்கும்
நின்றங்கே கரையில் நாயொன்று நடைபயிலும்
தாமளைமரத்துப் பச்சிலையங்கே சாமரை வீசும்
தாரைத்தண்டங்கே தாளப் பணிந்து வரவு சொல்லும்
கடற்கரை கற்பாறை அலையோசையில் மௌனித்து
முனிவராய் உருமாறி ஞானத்தில் மோனிக்கும்.

தாளைமரக் கூட்டில் கண்டபடி பிணையும்
இளைஞர் காதலர் கனிவில் பல்காவியம் மொழியும்
அலைகடல் ஆனந்தக் கூத்தில்
அகிலமெங்கும் ஆடும் பாடும் அன்பு பிசைய
அளல் கொள்ளும் மேகம் அது பார்த்து.

-செம்பாட்டான் -



# சின்றெல்லாக்கள்

மாயச்சிறைகளின் இரும்புக் கம்பிகளாய் நிறுத்தியிருக்கும்
பெண்களின் உணர்வுகளிளெல்லாம்
விழி நீண்டு
இடை சிறுத்து
குழல் சுருண்ட
சின்றெல்லாக்களின் விம்பங்கள்

நிலம் தழுவும் நீள் சட்டையில்
மந்திரப் பாதணி அணிந்த சின்றெல்லாக்கள்
இறக்கைகளின்றி
பறந்தலைகின்றன
ராஜகுமாரனைத் தேடியபடி..

அவிழ்க்கப்பட்ட சமுதாய முடிச்சுக்களின் வழியே
சூர்பனகைகளாய் நெளிகின்றன
சின்றெல்லாக்களின் கனவுகள்..

கரி அப்பிய வெறுங்கரங்களை
இறுகப் பற்றிக்கொண்டன எழுதுகோல்கள்..

ஆயினும் என்ன
புகை சூழ்ந்த இதயங்களில்
பத்திரமாய் பூட்டப்பட்டிருக்கிறது..
நீண்ட விழி சிறுத்த இடை
சுருண்ட கூந்தல்
இன்னும்,
சுயம்பரங்கள் இல்லை..
ராஜ குமரனைத் தேடிச்செல்லும்
அழகிய சின்றெல்லாக்கள்..

- எஸ்.சுடர்நிலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவல், நாடகத்துறையில் பிரகாசித்த படைப்பாளி நா.யோகேந்திரநாதன்



■ க.பரணீதரன்

அண்மைக்காலத்தில் எமது மூத்த இலக்கிய வாதிகளின் தொடர் மரணங்கள் எமது இலக்கிய உலகத்தை கலங்கடித்துக் கொண்டிருக்கின்றது. எம் அனைவருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகி வந்த படைப்பாளர் நா. யோகேந்திரநாதனும் அண்மையில் எம்மை விட்டுப் பிரிந்து சென்றுள்ளார். சென்ற ஆண்டு மாசி மாதம் எனது தந்தையாரை இழந்த போது, தன் நோய்க்கு மத்தியிலும், கிளிநொச்சியில் இருந்து வந்து தனது அனுதாபங்களைத்தெரிவித்துச் சென்றார். கடந்த பதினைந்து ஆண்டுகளாக அவருடன் நெருங்கிப்பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவருடைய "காட்டு நிலா" என்ற நாடகப்பிரதிகளின் தொகுப்பு ஜீவநதி வெளியீடாக வெளிவந்து அரச சாகித்திய விருதையும் பெற்றுக் கொண்டது. நா.யோகேந்திர நாதன் அவர்களின் வாய்மொழி வரலாற்றை நூலக நிறுவனத்தில் பணிபுரிந்த காலத்தில் ஆவணகம் பகுதிக்காக பதிவு செய்து கொடுத்துள்ளேன். அதனை யும் நூலாக்க முயற்சி செய்து கொண்டிருக்கின்றேன். மேலும் நா.யோகேந்திரநாதன் அவர்களைக் கௌரவப் படுத்தி அவருக்கான ஜீவநதியின் ஆளுமைச் சிறப்பிதழை 2023 சித்திரைமாதம்(198ஆவது இதழ்) வெளியிட்டு அவரை மகிழ்ச்சிப்படுத்தி அவரது இலக்கியத்தடத்தைப் பற்றிய பார்வையை வெளிக் கொண்டு வந்துள்ளேன் என்ற மன நிறைவோடு அன்னார் பற்றிய சிறு பார்வையை இங்கே பதிவு செய்கின்றேன்.

நாராயணபிள்ளை இராசம்மா தம்பதியினருக்கு வடமராட்சியில் உள்ள கரணவாய் என்னும் கிராமத்தில் பிறந்தவர் யோகேந்திரநாதன். இவருக்கு 5 சகோதரங் கள் கிடைக்கப் பெற்றார். ஆரம்பக்கல்வியை யா/கரணவாய் மணியாரந்தோட்டம் பாடசாலையிலும் அனுராதபுரம் புனித திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலையிலும் பெற்றுக் கொண்டு உயர் கல்வியை யா/உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியிலும் யா/ஸ்கந்தவரோதயாக்கல்லூரியிலும் பெற்றுக் பெற்றுக் கொண்ட இவர் உப தபாலதிபராக கடமை யாற்றியவர். பத்திரிகை ஆசிரியராக செயற்பட்டவர். இளம் வயதிலேயே சீனச்சார்பு பொதுவுடமைக் கருத்துக்களால் கொம்யூனிசத்தில் ஈடுபாடுடையவராக இருந்துள்ளதோடு சாதி எதிர்ப்புப் போராட்டங்கள் பலவற்றில் பங்கு கொண்டு ஒடுக்கப்பட்ட மக்களுக் காகக்குரல் கொடுத்துள்ளார். 1966 ஆம் ஆண்டு வடமாகாண கொம்யூனிஸ்ட் வாலிபர் சங்க இணைச் செயலாளராக பதவி வகித்து ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரான செயற்பாடுகளைக் கண்டித்து பல முன்னெடுப்புகளை மேற்கொண்டு வந்தார். 1993-1995 வரை ஈழநாதம் வன்னிப்பதிப்பின் பிரதம ஆசிரியராக விளங்கியவர். வெளிச்சம் இதழின் ஆசிரியர் குழுவில் இருந்துசெயலாற்றியவர்.

இவர் உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் 1956 ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரங்கள் இடம்பெற்றது. அப்போது, பொன். கந்தையா, பீட்டர்கெனமன், டொக்டர் எஸ்.ஏ.விக்கரமசிங்க, துடாவை, மாதகல் வ.கந்தசாமி, கார்ததிகேசன் மாஸ்ரர், மாதகல் கந்தசாமி, வி.பொன்னம்பலம் போன்ற அறிஞர்களின் இடதுசாரி உரைகளைக் கேட்டு அவ்வழியில் பயணிக்கத் தொடங்கினார். அவரது தந்தையாரும் ஓர் இடதுசாரி யாக வாழ்ந்தவர். 1966 ஆம் ஆண்டு தீண்டாமை ஒழிப்பு ஊர்வலத்தில் பங்குகொண்டவர்.

இவரது முதற்படைப்பான "வியர்வையின் விலை" என்ற சிறுகதை ஈழநாடு பத்திரிகையில் வெளியானது. மேலும் ஈழநாட்டில் வானத்தாமரை, பாசத்தளை ஆகிய குறுநாவல்களையும் எழுதியுள்ளார். சிறுகதை, நாவல், விமர்சனம், நாடகம் என இலக்கியத் துறையின் தொடர் செயற்பாட்டாளராக விளங்கிவந்த இவர் நீண்ட காலமாக வன்னியில் வசித்து வந்தார். போராட்ட காலத்தில் பல்வேறு நாடகங்களை இயக்கி யுள்ளார். பிரச்சார நாடகங்கள் தொடக்கம் சமூக விழிப்புணர்வு நாடகங்கள் வரை பல நாடகங்கள் இவரால் தயாரிக்கப்பட்டு மேடையேற்றம் கண்டன. காத்தவராயன் கூத்தை நமது போராட்டத்துடன் இணைத்து நவீன முறையில் "வெற்றிக்களத்தில் வீரவேங்கை" என்ற நாடகமாகத் தயாரித்து மேடை யேற்றி பலரது கவனத்தையும் பெற்றுக் கொண்டார். வானொலி நாடகங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவ ராக விளங்கினார். வானொலிப்பிரதிகளை எழுதும் எழுத்தாளராக, குரல் வழங்குநராக, தயாரிப்பாளராக விளங்கியவர். மிகுந்த சத்தமாகக் கதைக்கக்கூடிய குரல் வளத்தைக் கொண்டிருந்தார். இவரது "உயிர்த் தெழுகை" என்ற நாடகம் நேயர்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்ற நாடகமாக விளங்கியது. 1989 ஆம் ஆண்டு மாவீரர்தினம் கோணாவிலில் இடம்பெற்ற போது "ஓநாயும் சேவல்களும் என்ற நவீன நாடகத்தை மேடையேற்றி தமிழீழத்தலைவர் உட்பட பலரது கவனத்தையும் பெற்று பிரச்சார நோக்குடான வீதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகங்கள், தெருக்கூத்துக்கள், மேடை நாடகங்கள், நாட்டுக்கூத்துகள் என்பவற்றை தொடர்ந்து மேடை யேற்றினார். இவரது "நாங்களும் புலிகளே" என்ற வீதி நாடகம் 500 தடவைகளுக்கு மேல் அரங்கேற்றப்பட்டது. வியர்வைத்துளிகள், கேள்விகள் வேள்விகள், கதை பேசும் கல்லறைகள் போன்ற நாடகங்களையும் தயாரித்து வழங்கியவர். 1995 ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலத்தில் இவரால் எழுதப்பட்ட வானொலி நாடகங்கள் விடுதலைப்போராட்டத்தின் பிரச்சாரத்தில் மிகவும் முக்கியமான பங்கை எடுத்திருந்தன. உயிர் குடிக்கும் பறவைகள், சாம்பல்பறவைகள் போன்ற வானொலி நாடகங்களும் இவருக்கு பெரும் புகழைச் சேர்த்தன. தாமரைத்தடாகம், நட்சத்திரப் பூக்கள், உன்னத பயணம், அரசியல் வானில் போன்ற வானொலி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கி தனக்கென ஒரு நேயர் கூட்டத்தை சம்பாதித்திருந்தார்.

வெளிச்சம், ஈழநாதம், ஈழமுரசு, ஜீவநதி ஆகிய பத்திரிகைகள் சஞ்சிகைகளில் இவரது சிறுகதைகள் வெளி வந்தன. பல சிறுகதைப் போட்டிகளில் இவரது சிறுகதைகள் பரிசுகளைப் பெற்றுக் கொண்டன. "தொலைநோக்கி" என்ற சிறுகதைத்தொகுதியை வெளியிட்டுள்ள இவரது பல சிறுகதைகள் தொகுக்கப்படாமல் இருப்பது வருத்தத்திற்குரியது.

நிதர்சனத்தின் ஊடாக "நெஞ்சில் விழுந்த அடி", "அந்த ஒரு கணத்திற்காக" ஆகிய குறும்படங்களைத் தயாரித்தார். 1977 ஆம்அண்டு "சுழியோட்டம்" என்ற முழுநீளத்திரைப்படத்தை மன்னாரில் தயாரித்தவர். கிளிநொச்சியில் "எமது காலம் இருளல்ல", "சந்தன மரம்" போன்ற படங்களைத் தயாரித்து வெளியிட்டிருந்தார்.

ஈழப்போரட்டத்தின் இறுதிப் போராட்டத்தின் முக்கியமான சாட்சியங்களாக நியப்பதிவுகளாக இவரது நீந்திக்கடந்தநெருப்பாறு பாகம் - 1, நீந்திக்கடந்த நெருப்பாறு பாகம்- 2, 30 நாட்களில் நீந்திக்கடந்த நெருப்பாறு ஆகிய நாவல்கள் விளங்குகின்றன. இந் நாவல்கள் ஈழத்து இலக்கிய வரலாற்றின் ஈழப் போராட்டம் பற்றிய முக்கிய பதிவுகளாகக் கொள்ளத் தக்கவை. சாதியத்தை மையப்படுத்தி "இடிபடும் கோட்டைகள்" என்ற நாவலையும் எழுதியுள்ளார்.

செம்புலக்குரிசில், கலைக்குரிசில், கலைமாமணி போன்ற விருதுகளையும் பட்டங்களையும் பெற்ற இவரது "நீந்திக்கடந்த நெருப்பாறு" நாவலுக்காக வட மாகாண விருது, "காட்டுநிலா" நூலுக்கான சாகித்திய விருது என்பவற்றையும் பெற்றுள்ளார். "நீந்திக்கடந்த நெருப்பாறு", "இடிபடும் கோட்டைகள்" நாவல்களுக்கு பெயர்வே நிறுவனத்தின் சிறந்த நாவல்களுக்கான ஒரு லட்சம் ருபா பணப்பரிசும் வழங்கி கௌரவிக்கப் பட்டுள்ளார். லண்டன் ஐ.பி.சி. வானொலியால் "பன்முக ஆளுமை" என்னும் விருதும் வழங்கி கௌரவிக்கப் பட்டுள்ளார்.

தனது இறுதி வரை எழுத்துச் செயற்பாட்டை மேற்கொண்டு ஈழத்துப் போராட்டத்திற்கு முக்கிய பங்கையாற்றி எம்மெல்லோருடனும் அன்பைச் சொரிந்து வாழ்ந்த யோகேந்திரநாதன் அவர்களது இழப்பு ஈழத்து இலக்கிய உலகிற்கு பெரும் இழப்பு. அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

## அன்பின் வரையறை

இதய சிம்மாசனத்தில்
கொலுப்பொம்மை
அபிசேகம்
அலங்காரம்
ஆராதனை
ஏராளம்
தாராளம்
வாழ்வின் திருவாய்
சுற்றம்சூழல்
என இத்யாதிகள் -ஆனாலும்
மட்டுப்பாடுகள் களைந்து
பயணிப்பதாய்
ஒரு தோற்றம்
பூட்டிய கதவுகளை
மெல்லத்திறக்க
வழி பார்க்கிறது உள்ளம்
எனவே நிவேதித்த
பொருட்களுக்காய்
எனைப்பூட்டி வைக்காதே
எனக்குள்ளும் உன் போல்
காட்சிகள் கற்பனைகள்
ஞானம் உண்டு
உனக்குத் தெரிந்த
வானத்து ஜாலங்களை
எனக்குத் தெரியாதென
ஏன் நினைக்கிறாய்
காலங்கள் தூரமானாலும்
கணக்கிடுவேன்
என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது
இல்லக்கிழத்தியாய்
விளக்கேற்றினால் போதும் என்று
அன்பைப் பொழியாதே
ஆழ்கடலின் ஆழத்தையும்
அறியும் ஆற்றல் எனக்குண்டு
நீ என்னை நேசிக்கிறாய்
புரிகிறது
என்னிடமும் உன்மேல்
அதிகபிரியமுண்டு

அதற்காக
என் சிந்தனாசக்தியின்
தேடலை
மட்டுப்படுத்தி விடாதே
அதுவும்
சிட்டுக்குருவியைப்போல
எட்டுத்திக்கும்
பறந்து
சுதந்திரமாய்
ஞானக்கனியை
எட்டிப்புசிக்கட்டும்

- செல்வகலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகிலா மகேந்திரன்

# 14 முடிவைத் தொடுவாய் முயன்று

"சூழலில் என்ன நடந்தது என்பது உங்கள் தவறில்லை. என்ன நடந்தது என்பது ஒருபோதும் நீங்கள் யார் என்பதை வரைவிலக்கணப் படுத்துவதும் இல்லை" என்ற கூற்றை நினைவில் கொள்வோம். எமது வாழ்வில் வரும் நெருக்கீடுகளைச் சிறிய நெருக்கீடுகள், பெரிய நெருக்கீடுகள், மனவடுவுக்குரிய நெருக்கீடுகள் என மூன்று பெரும் பிரிவில் அடக்கலாம். அனர்த்தம் நடைபெற்ற (இயற்கை அனர்த்தமோ அல்லது மனிதரால் ஏற்படுத்தப்படும் அனர்த்தமோ)சூழலில் வாழும் மனிதர்கள் எல்லோருமே மனவடுவுக்குரிய நெருக்கீட்டுச் சம்பவங்களை அனுபவித்தவர்களாகவே இருப்பர். சம்பவங்களின் எண்ணிக்கை சிலருக்கு மிக அதிகமாக இருக்கலாம், சிலருக்குக் குறைவாக இருக்கலாம். பாலியல் வன்முறைக்குள் அகப்படுதல் என்பதும் மனவடுவுக்குரிய நெருக்கீடுதான். ஆயினும் இத்தகு நெருக்கீட்டைச் சந்தித்தவர்கள் யாவரும் வாழ்வில் தோல்வி அடைந்தவர்கள் ஆவதில்லை

எதிர்கால நம்பிக்கையின்மையும் கையறுநிலையும் இத்தகைய நெருக்கீட்டின் முக்கிய அம்சங்கள். வெகுசில மனிதர்கள் இத்தகு நெருக்கீட்டுக்கும் இயல்பாகவே உள எதிர்ப்பாற்றலைக் கொண்டிருக்கலாம். அத்தகையோரின் தாங்குதிறனுக்கூடாக இயல்பான மீளெழுகை நடைபெறலாம். ஆயினும் பெருமளவானோர் பாதிக்கப்படுகிறார்கள்.

இந்திய துணைக்கண்டம் 1947இல் சுதந்திரமடைந்தபின்னர், அதன் முதல் பிரதமராக 1964வரை பணிபுரிந்து, அணிசேராக் கொள்கையின் மூலகர்த்தா என வர்ணிக்கப்படும் ஜவகர்லால் நேரு அவர்களின் இளமைக்காலம் வசந்தமாக இருக்கவில்லை. அவர் பல வருடங்களைச் சிறையில் கழித்தவர். சிறையில் இருந்து தன் மகள் இந்திராவுக்கு (இந்திரா காந்தி)எழுதிய கடிதங்கள் மிகப்பிரசித்தமானவை. அவர் வாழ்க்கை தோல்வியடைந்ததாக யாரும் கூற முடியாது.

தமிழ் இலக்கிய உலகில் கல்கியை அறியாமல், அவரது எழுத்துக்களை வாசிக்காமல் யாரும் இருக்க மாட்டார்கள். சிவகாமியின் சபதம், பார்த்திபன் கனவு, பொன்னியின் செல்வன் ஆகிய மிக அரிய நாவல்களோடு, சிறுகதைகளையும் வேறு பல விடயங்களையும் எழுதி, 1956இல் இந்திய சாகித்ய அக்கடெமியின் விருது பெற்றவர். ஆயினும் தனது கட்டிளமைப் பருவத்தில் பள்ளிப்படிப்பை இடைநிறுத்தி, மகாத்மாவின் ஒத்துழையாமை இயக்கத்தால் கவரப்பட்டு, சுதந்திரப் போராட்டத்தில் பங்குபற்றியமைக்காகத் தனது 23ஆவது வயதில் சிறை சென்றவர்.ஆயினும் இலக்கிய உலகில் அவர்கண்ட வெற்றி ஈடிணையற்றது.

உலகின் மிகப்பிரபலமான பொப் பாடகி Lady Gaga நேர்காணல் ஒன்றில் தான் நெருக்கீட்டுக்குப் பிற்பட்ட மனவடுவால் பாதிக்கப்பட்டிருந்தமை பற்றிக் கூறியிருக்கிறார். ஆயினும் தான் புகழ் பெற்ற பின் தன் வாழ்வு தலைகீழாக மாறிவிட்டதென்பார்.

ஆயினும் மனவடுவுக்குரிய நெருக்கீட்டைச் சந்திக்கும் பலர் தற்காலிக அல்லது நீண்டகால மன வடுவுக்கு உள்ளாகின்றனர். அதனுடன் கூட வரும் உளப் பிரச்சினையாக மனச்சோர்வு பெரும்பாலும் அமைகிறது. இதன் விளைவாகவே மது அல்லது போதைப் பாவனைக்குள் அகப்பட்டுக் கொள்பவர்களும் இருக்கிறார்கள். இன்று உக்ரேய்ன், ருஷ்ஷியா, ஆப்கானிஸ்தான், இஸ்ரேல், சிரியா, காஸா என்று பல நாடுகளிலும் மனவடுவைக் கொண்டு ஏராளமானோர் வேதனைப்படுவார்கள்.

மீளவாழ்தல் என்பது நெருக்கீட்டுக்குப் பிற்பட்ட மனவடுவின் முக்கிய குணங்குறியாகும்.நடைபெற்று முடிந்த அந்தக் கோர சம்பவங்கள் மீள மீள மனதில் வருதலும் அவை உண்மையாக நடப்பதுபோலிருப்பதும் பெருந்துன்பமாகும். இரவில் மிகப் பயங்கரக் கனவுகள் தோன்றலாம். சம்பவத்தை நினைவு படுத்தும்போது கடுமையான உணர்வுக்கொந்தளிப்புக்கு ஆளாகலாம்.

இப்பிரச்சினையின் மற்றோர் அறிகுறி "தவிர்த்தல்" எனப்படும். சம்பவம் பற்றி நினைப்பது, கதைப்பது ஆகியவற்றைத் தவிர்ப்பதற்கு மேலாக அதனோடு தொடர்புடைய நிறங்கள், இடங்கள், நேரம், மணம், சுவை, மனிதர்கள், பொருள்கள், செயல்கள் போன்றவற்றையும் தவிர்க்கலாம். இவ்விடயங்கள் அவர்களுக்கு மீண்டும் பதற்றத்தை ஏற்படுத்துவதே காரணமாகும்.

விழுமியங்களையும் அடுத்த குணங்குறி அதிபர மனஎழுச்சி ஆகும். ஏதோஒன்று பிழையாக நடைபெறப் போகிறதென்ற அதீத பதற்றம் காணப்படுதல் இதன் இயல்பாக இருப்பதால் விடயங்களில் மனதைக் குவித்தல் கடினமாக இருக்கும். அதிபர மன எழுச்சி மனிதர்களை மிக வேகமாகவும் அதிகமாகவும் கோபப்பட வைக்கும். நித்திரைக்குழப்பம் இருப்பதோடு அபாயகரமான நடத்தைகளில் ஈடுபடும் பழக்கமும், ஆக்ரோஷ நடத்தையும் காணப்படலாம்.

உலகை அதிகளவு மறையாக நோக்கலும், அதீத மறை உணர்வுகளும் கூட இதன் ஒரு குணங்குறியாக இருக்கலாம். மொத்தமாக பதகளிப்பு, மனச்சோர்வு, மகிழ்வை அனுபவிக்க முடியாமை, குற்ற உணர்வு, ஏனையவருடன் நெருங்கிய உறவைப் பேண முடியாமை, வாழ்வின் பிடிப்புகள் குறைதல், தன்னைப் பற்றியும், மற்றவரைப்பற்றியும், உலகைப்பற்றியும் மறையான பார்வை இருத்தல் ஆகியவற்றால் வாழ்வு பெரும் சுமையாகக் காணப்படும். சிலவேளை சம்பவத்தின் சில முக்கிய பகுதிகள் மறக்கப்பட்டு, நினைவுக்குக் கொண்டு வர முடியாதிருப்பதே பெரும் வலியைத்தரும்.

நெருக்கீட்டுக்குப் பிற்பட்ட மனவடு சிக்கலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக மாறும்போது, உணர்வுச்சமநிலையிலும் பெரும் குழப்பங்கள் காணப்படலாம். சுய விம்பம் தொடர்பான குறைபாடு பெரிதாக இருக்கலாம். மனித உறவுகள் பற்றிய பிரச்சினையும் பெரிதாக மாறலாம்.

இப்படியான ஒருவர் எம் குடும்பத்தில் இருக்கையில் நாம் எத்தகு தெரிவுகளைச் செய்ய வேண்டும்?

அவருக்குக் குடும்ப ஆதரவும், சமூக ஆதரவும் கிடைக்கத்தக்க முடிவுகளை எடுப்பது நன்மையாகும். சம்பவம் நடைபெற்ற பிறகு முடிந்தவரை விரைவாக பழைய வாழ்வு ஒழுங்குக்கு மீளுதல், அல்லது மீளச் செய்தலே நல்லது. உதாரணமாகப் பாடசாலை சென்று கொண்டிருக்கும் ஒருபிள்ளைக்குப் பாலியல் துஷ்ப் பிரயோகம் நடந்திருந்தால், எல்லோரும் சிரிக்கப் போகிறார்கள் என்பதற்காய் வீட்டில் மறித்து வைத்திருப்பதை விட, முடிந்தளவு விரைவில் திரும்பவும் பாட சாலைக்குப் போகச்செய்யும் தெரிவைச் செய்வதே உகந்தது.

மனவடுவைப் பொறுத்தவரை, நடந்த சம்பவங்களுக்கு அர்த்தம் தேடுதல் ஒரு சிறந்த தெரிவாகும். அர்த்தம் காணும் சிகிச்சை என்பது ஒரு விசேட வழி முறையாகவே பயன்படுகிறது. குறித்த நபர் தனது நம்பிக்கைகளையும் விழுமியங்களையும் திரும்பிப் பார்க்க வைக்கலாம். தொண்டு செய்தல், அறக் கருமங்களில் இறங்குதல் தர்மம் கொடுத்தல், மனவடுவால் பாதிக்கப்பட்ட ஏனையோருக்கு உதவுதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் எதிர்கால வாழ்வுக்கான அர்த்தம் தேடல் அமையலாம். சிலர் ஆன்மிகப் பாதைகளூடு அர்த்தம் தேடுவார்கள். இது சமயம் சார்ந்த சேவைகளில் ஈடுபடுதலாகவோ, தியானம் செய்தலாகவோ, இயற்கையுடன் அதிக உறவு கொள்வதாகவோ அமையலாம்.

சுவாசப்பயிற்சிகள், தசைத்தளர்வுப் பயிற்சிகளும் நல்ல தெரிவாகவே அமையும்.

சம்பவ விபரிப்புச் சிகிச்சை எனப்படும் விசேட சிகிச்சைமுறை மன வடுவுக்கு வினைத்திறனுடன் பயன்படக் கூடியது. இச்சிகிச்சை வழங்கக் கூடிய உள வளத் துணையாளரைத் தேடிச்செல்வதும் மிகச் சரியான தெரிவேயாகும்.

எங்கள் பிள்ளைகளிடத்தில் காணப்படக்கூடிய விசேட கற்றல் குறைபாடுகள் பற்றியும் DSM–5 எனப்படும் உளப்பிரச்சினைகளின் தொகுப்பில் கூறப்படுகிறது. இவைபற்றிய விழிப்புணர்வு எமது பெற்றோர், ஆசிரியர் மத்தியில் மிகக்குறைவு. பிள்ளைகள் சிலரிடத்தில் வாசிப்பது, கணிதச்செயல்களின் அடிப்படையைப்புரிந்து கொள்ள முடியாதிருப்பது, எழுதுவது, விடயங்களை இணைப்பது போன்ற விடயங்களில் பிறப்பிலேயே இடர்ப்பாடு இருக்கலாம். இவை நரம்புத் தொகுதியின் வளர்ச்சி சார்ந்த குறைபாடுகள் என்பதால் பாடசாலையின் ஆரம்ப காலங்களில் இனங்காணப்படும். மொத்தமாக 5-15% ஆன பிள்ளைகள் ஏதோ ஒரு கற்றல் குறைபாட்டினால் அவதிப்படுகிறார்கள் என்று தரவுகள் கூறுகின்றன.

கற்றல் குறைபாடுகளில் சுமார் 80%காணப்படுவது வாசிப்புக் குறைபாடு. (Dyslexia) இது ஆண், பெண் வேறுபாடின்றிக் காணப்படும் பிரச்சினை.

ரிச்சார்ட் பிரான்சன் (Richard Branson )என்ற ஆங்கிலேயர், 1950இல் பிறந்தவர். Virgin Gp ஐ 1970களில் நிறுவியவர்களில் ஒருவர். இப்போது இவர் ஓர் தொழிலதிபர், முதலீட்டாளர், பரோபகாரி. அதைவிடப் பல நூல்களின் ஆசிரியர் என்றால் நம்பமுடியவில்லையல்லவா? இதைவிட, விசைப் படகோட்டம், சூடான காற்று நிரம்பிய பலூனில் பறத்தல் போன்ற விடயங்களிலும் சாதனைசெய்து வாழ்வை நகர்த்திச் சென்றிருக்கிறார். ஆகவே வாசிப்புக் குறைபாடென்பது பிள்ளைகளைக் கடுமையாகப் பாதிக்கும் என அஞ்சவேண்டாம். ரிச்சார்ட் பிரான்சனின் இந்தக் கூற்றைக் கவனியுங்கள்.

"நீங்கள் முகம் குப்புற நிலத்தில் விழுந்தாலும், முன்னோக்கி அசைய முடிகிறதென்றால், கவலையை விடுங்கள். திரும்ப வந்து தொடக்கத்திலிருந்து ஓடத் தொடங்குங்கள்" என்பதே அவரது கூற்று. வாசிப்புக் குறைபாடுள்ள Pele என்பவர் சொல்லியது இது. "வெற்றி என்பது ஒருபோதும் விபத்து இல்லை. கடும் உழைப்பே வெற்றி. விடாமுயற்சியே வெற்றி. தொடர்ந்து கற்றலும் தியாகம் செய்தலுமே வெற்றி. எல்லாவற்றையும் விட, மேலாக, நீங்கள் செய்வதை அல்லது கற்பதை விரும்புங்கள். அதுவே வெற்றி."

வாசிப்புக்குறைபாட்டின் பாதிப்பு ஏனைய பிரச்சினைகளைப் போலவே ஒருவரில் சிறிதாக இருக்கலாம். நடுத்தரமாக இருக்கலாம். அல்லது கடுமையாக இருக்கலாம்.

எழுத்துக்களின் ஒழுங்கை மறுபுறம் பக்க நேர் மாறுடன் வாசித்தல் (உதாரணமாகப் "பற" என்பதை "றப" என) சொற்களை உச்சரிப்புக்கு அமையப் பிரிப்பதில் சிரமப்படல், கிரகித்து வாசிப்பதில் கஷ்டப்படல், பேசத் தொடங்கும் வயது பின்தள்ளப் பட்டிருத்தல், புதிய சொற்கள் அல்லது புதிய பாடங்களைக் கற்பது கடினமாதல், திசை அறிதல் போன்ற கண்சார்ந்த வேறு சில தொழிற்பாடுகளிலும் சிரமமிருத்தல், சொல்வதெழுதல், பார்த்தெழுதல், பிழைதிருத்தம், கிரகித்து வாசித்தல் ஆகிய விடயங்களிலும் பாதிப்பு இருத்தல் போன்றன இதன் குணங்குறிகளாக முதலில் தென்படலாம்.

எதிர்பாராது வருகின்ற, தொடர்ந்து வராத எழுத்துப்பிழைகள், எழுத்துக்களையும், எண்களையும் இடம் வலம் மாறி எழுதல், உரத்து வாசிக்கும்போது அதிக பிழைகளோடு ஆறுதலாக வாசித்தல், வாயால் கூறத்தெரிந்த விடயங்களையும் எழுதாதிருத்தல், ஒருவாரத்தின் நாட்கள், ஒருவருடத்தின் மாதங்கள், எண்ணும் எண்கள் போன்ற ஒழுங்காகச் சொல்லும் விடயங்களிலும் குழப்பமிருத்தல் போன்றவை இவர்களை இனம்காண்பதில் பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் உதவக் கூடும்.

சரி, இவர்கள் தொடர்பாக நாங்கள் என்ன தெரிவுகளை மேற்கொள்ளலாம்?

கற்றல் கற்பித்தலுக்குப் புலன் அங்கங்கள் எல்லாவற்றையும் பாவித்தலும், பாவிக்கச் செய்தலும் ஒரு வழி. ஒலி நூல்களை வழங்குவதும் உதவும். அவர்களிடத்திலே போதிய நித்திரையை ஊக்கப்படுத்தி, நம்பிக்கையையும் கட்டி எழுப்பவேண்டும். உதவும் சூழல் ஒன்றை உருவாக்க வேண்டும். வாசிப்பதில் வரும் சிறு முன்னேற்றத்தையும் பாராட்டத் தவறக்கூடாது. கனிப் பாவனையை உற்சாகப்படுத்தலாம். பெற்றோருக்குப் பொருத்தமான ஆலோசனைகளைக் கூறி வழிகாட்டல் ஆசிரியரின் கடமை. பாடசாலைச் சோதனைகளில் இவர்களுக்குக் கூடிய நேரம் வழங்குவதில் தவறில்லை.

குறை ஒன்றுமில்லை !பிரபஞ்சத் தாயே,
நிறை வாழ்வு தந்தாய் நீயே !–எமக்கு
நிறை வாழ்வு தருவாய் நீயே !

(தொடருவோம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காடுலாவு காதை பாகம் 2
## நாவல் தொடர்

தமிழ்க்கவி

# காடுலாவுகாதை 2



*21*

காடுகள் வளம் நிறைந்தவை. அதனால்தான் அங்கே எந்த விவசாயமும் பண்ணாமல் மிருகங்கள் வாழ் கின்றன. அதேபோல தாவரங்களும் பச்சைப்பசேலென செழிப்பாக இருக்கின்றன. இந்த கரம்பை முள்ளுக்கு பெயர் போனது.

சின்ன அழகிய வரிகட்டிய இலைகளும் முற்றினால் அதன் நுனி முள்ளுப்போன்று கூர்மையாக இருக்கும். தோடைமரத்தின் முட்கள்போல பச்சையாய் நீளமாக இருக்கும், அதன் பிஞ்சு முள் வளர்ந்து முற்றினால், நுனியில் ஒரு கெவர்விட்டு வைரித்து இருக்கும். முட்கள் காலில் தைத்தால் பயங்கர கடுப்பாக இருக்கும். அந்த முள்ளை பக்குவமாக இழுத்து எடுத்து விட்டாலும், அநேகமாக அந்த முள்ளின் பட்டை கழன்று காலில் தங்கிவிடும் வாய்ப்பு அதிகம். அல்லாம லும், முள் தைக்கும் போது ஏற்படும் “கழுநீர்ப்பாச்சல்” (தசையில் கசியும் ஊனம் அல்லது குருதி)உதிர்ந்த பட்டையுடன் சேர்ந்து கால்களை வீங்க வைத்து சீழ் பிடித்துவிடும். கொதிவலியும் இருக்கும். சிலருக்கு காய்ச்சலே வரும். இதற்கெல்லாம் கிராம வைத்தியங்கள் உண்டு. முள் தைத்த கண்டாயத்தில் சிறிதளவு தீக்குச்சின் மருந்தை திணித்து. பாதிக்கப்பட்டவர் அறியாமல் “கண்ணை மூடு” என்பார்கள். அவர் ஏற்கெனவே வலி யில் கண்களை மூடித்தான் இருப்பார். இன்னொரு தீக் குச்சியை பற்ற வைத்து காலில் வைத்த மருந்தில் காட்ட சுரீர் என்று பத்தி பட்டையை சாம்பலாக்கிவிடும். துளி வருத்தம் என்றாலும் நிரந்தரத்தீர்வு. சீழ் பிடித்தால் அதை குத்தி வெளியேற்ற அதனுடன் பட்டை கழுநீர் எல்லாம் வெளியேறிவிடும். அதன்பிறகும் அந்த கண்டாயத்தின் மீது காத்திரமான ஒரு உப்புக்கல்லை வைத்து அதன்மீது ஒரு கொள்ளிக்கட்டையை வைத்து சூடேற்றுவார்கள் உப்பு சூடேற நீரை இழுத்துவிடும்.

அப்பேர்க்கொத்த கரம்பையின் மலர்கள் கொத்துக் கொத்தாக மல்லிகைபோல பூக்கும். அப்படியே பறித்து வாயில் போட்டு சுவைக்க அருமை யான சுவை. காய்கள் புளிக்கும். அவை பழுத்தால் தேவாமிர்தம் புளிப்பும் இனிப்பும் கலந்த அருமையான சுவை. குடலைப்பருப்பின் அளவான நீள்வட்ட, வட்ட வடிவம். அதிலிருந்து வரும் பிசுபிசுப்பான பால் ஒரு பொருட்டே இல்லை. கரம்பைப்பழத்தின் சுவை அற்புதமானது. இங்கே காட்டின் பாதையோரம் யாருமே சீண்டாமல் கிடந்த கரம்பைப்பழங்களை லெச்சிமி மட்டுமே அரைறாத்தலுக்கு மேல் ஆய்திருப்பாள் மற்றப்பையன்களும் அவ்வாறே. மூவரும் தரையில் அமர்ந்து காலை நீட்டி வைத்துக் கொண்டு பழங்களை சுவைத்தவாறே மற்றவர்களின் வருகைக்கா காத்திருந்தனர். லெச்சிமியின் பின்னே காட்டுக் குள்ளிருந்துதான் யாரோ இருவர் பேசிக் கொள்வது போல கேட்டது. அவள் எழுந்திருக்காமல் அந்த பொடியன்களைப் பார்க்க,

“ஆரும் தடிகம்பு வெட்ட வந்திருப்பாங்கள் அக்கா” என்றான் ஒருவன்.

“அதுக்கேன் இவ்வளவு சேறு தாண்டி வரோணும். அங்க கிட்டவே வெட்டியிருக்கலாமே, நடுக்காட்டுக்க?” என்றாள் லெச்சிமி.

இவர்களை அதிகநேரம் தவிக்க விடாமல் அவர்கள் வெளியே வந்தார்கள். பலநாட்கள் வெட்டப் படாத தலைமுடி. அழுக்கு சாரம். மேலுக்கு ஒருவன் ஒரு சேட்டைப் போட்டிருந்தான். மற்றவர் வெறும் பனியன் அதிலும் ஓட்டை. இவர்களுக்கு அருகே வந்ததும்,

“எங்க போறீங்க” என்று கேட்டான் ஒருவன்.

“வவுனியாவுக்கு”என்றான் அந்த சிறுவன்

“அப்ப ஏன் இருக்கிறியள்”

“பின்னால இன்னும் ஆக்கள் வருகினம், கூடப் போக நிக்கிறம்” அவன் சற்றே யோசித்துவிட்டு மற்றவனி டம் “அவங்கள கூப்பிடு” என்றான். அவன் தன் வாயி லிருந்து பறவைகள் போல ஒரு விநோதமான ஒலி யெழுப்பினான். திடுதிடென மேலும் நால்வர் காட்டுக் குள்ளிருந்து வந்து அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். “தம்பி இதால போகமாட்டியள். பெரிய மரமொண்டு விழுந்து கிடக்கு. இப்பிடியே வாற ஒத்தையடிப்பாதை யால போக பழைய ரோட்டு வரும் நேராப்போனா கனகராயன்குளத்தில ஏறலாம். இடையில கற்கிடங்கு குளமும் அம்மன் கோயிலும் இருக்கு” என்றான். பின் தனது சகாக்களைப்பார்த்து பின்னேரத்துக்கிடையில மரத்தை அப்புறப்படுத்த ஏலாது. ஊராக்களை கூட்டி வரப் போனவனையும் காணேல்ல” என அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே பின்புறமாக அவர்கள் வந்த வழியிலிருந்து அவர்களுடன் வந்தவர்களும் வந்தார்கள் அதேசமயம் ஒரு உழவூர்தியும் வந்தது. அதில் அப்பா வுடன் வந்த சிறுவர்கள் ஏறி வந்தார்கள். அவர்களுடன் நான்கைந்து ஊரவர்களும் வந்தனர். சிறுவர்கள் இருவரும் ஓடிவந்து இவர்களுடன் சேர்ந்ததும் அவர்கள் புறப்பட்டார்கள் இயக்கப்பொடியள் காட்டிய பாதை அவர்களை விரைவிலேயே கற்கிடங்கு அம்மன் கோவிலில் சேர்த்தது. அங்கே அவர்களுக்கு பொங்கலும் கிடைத்தது. பின்னால் வந்து சேர்ந்தவர்கள் இளைப் பாறினார்கள். அவர்களுடைய மிதிவண்டிகள் மேலோட்டமாக கழுவியிருந்தது. இங்கே கோவில் குளத்தில் சுத்தமாக கழுவினார்கள்.

“கழுவின உடனை ஓடினா போல்ஸை உடைச்சிரும் பொறுங்க எப்பன் தண்ணி வடியட்டும்”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார் பெரியவர்.

லெச்சிமியும் முன்வந்த இரு பொடியன்களும் தமது பயணத்தை தொடர்ந்தனர். நேரம் மூன்று மணியிருக்கும். அப்பா தனது மடியில் கட்டி வைத்திருந்த மணிக்கூட்டைப்பார்த்து, "ஓ,,.மூண்டுமணி ஆறு நிமிடம்" என்றார். இருட்டும் முன்பு தான் வீட்டுக்கு போக முடியுமா என்பது லெச்சிமிக்கு தெரியவில்லை. ஆனால் காட்டுக்குள்ளிருந்து வெளியே வந்துவிட வேண்டும் குறைந்த பட்சம் குடிமனைகளுக்குள்ளாவது போக வேண்டும் அவள் கனகராயன்குளம் பிரதான வீதியில் ஏறியதும் விரைவாக தனது மிதிவண்டியை செலுத்தினாள். புளியங்குளம் பழையவாடி ரோட்டில் அவளுடன் வந்த சிறுவர்கள் பிரிந்து சென்றனர். அங்குதான் அவர்கள் வதிவிடம் இருந்தது.

பொழுது மங்கி கையெழுத்து மறையும் நேரம் அவள் சோதனைச்சாவடி இருந்த இடமான பரண் நாட்டின குளத்தை அடைந்தாள். வவுனியா நகரிலிருந்து கடைசியாக வந்து கொண்டிருந்த பயணிகளை சோதனையிடும் புலிகளும், முன்னரே வெளியே வந்து தமது பொருட்களை விற்க முயலும் வியாபாரிகளும், மனைவியை நகருக்குஅனுப்பிவிட்டு அவளை மீண்டும் ஏற்றிச் செல்ல காத்திருக்கும் கணவர்களும், உள்ளே செல்ல அனுமதிக்கு நிற்கும் நாளைய பயணிகளுமாக அந்த இடம் பெரும் களேபரமாக இருந்தது. பருவகால கடைகளைப்போல இந்த பயணிகளை இலக்காக வைத்து போடப்பட்ட தற்காலிக உணவுக்கொட்டகைகளில் பெரிதாக ஒன்றுமில்லை. ரொட்டி சம்பல் இவைதான். நாளைய பயணத்துக் காத்திருப்போரை தங்கவைக்க, வாடகை அறவிட்டு கொட்டகையில் இடம் கொடுப்போரும், அப்படி புறம்போக்கு நிலத்தில் போடப்பட்ட கொட்டகைகளும் நிரம்பியிருந்தன. வெளியே செல்பவர்களுக்கான பாஸ் நடைமுறை அப்போது தொடங்கவில்லை. என்றாலும் குறிப்பிட்ட அளவு மக்களையே ராணுவம் உள்ளே அனுமதித்தது. அதனால் இன்று இடம் கிடைக்காதவர்கள் நாளைய முன்னிலைக்காக இந்த தெருவிலும் தங்க, இடம் கிடைத்தவர்கள் வாடகை இடங்களிலும் தங்கினார்கள்.

லெச்சிமி அப்படிப்பட்ட கொட்டகையொன்றில் இரவு தங்குவதற்காக இடம் கேட்டாள். அந்த கொட்டகைக்காரி "அங்கே ஏற்கெனவே பலர் வந்துவிட்டார்கள் எனவே இடமில்லை" என்றாள். மேலும் இரு வீட்டில் இடம் கேட்டபின் சோர்ந்து போய் வழியில் நின்றாள். சோதனைச்சாவடி வேலைகளை முடித்துக் கொண்டு அந்த வழியாக வந்த ஒரு இளைஞன் இவளைக் கண்டதும் ஆவலாக "நீங்க லெச்சிமி அக்காதானே" என்றான். அவளுக்கு அவனைத் தெரியாது. ஆனால் அவனது கேள்விக்கு "ஆம்" என்றாள்.

"என்னக்கா இந்த நேரம் இதில" என்றான்.

"நான் யாழ்ப்பாணத்தால வாறன். பூவரசங்குளம் போகோணும். இனி ஆனைக்காடுதானே எங்க தங்கிறதெண்டு தெரியேல்ல"

"தங்கவோ? என்னக்கா நாங்களெல்லாம் இஞ்சதானே இருக்கிறம். வாங்கோ வீட்ட அம்மா கண்டா சந்தோசப்படுவா, உதில் கிட்டத்தான் வீடு" என்றவாறு அவளையும் அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

அவளுக்கு இந்தப்பிரதேசம் புதிதுதான். அவள் நகரத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்தவள் இவனுக்கு எப்படி என்னை...." அவள் குழம்பித்தான் போனாள். சாத்திரி கூழாங்குளம் வயல்வெளியூடே தெற்குநோக்கி செல்லும் வீதியில் ஒரு பெரிய வீடும் படலையருகே பெரிய மாட்டுப்பட்டியும், மெல்லிய நிலவொளியில் தெரிந்தது படலையிலிருந்து ஒரு இருபது யாருக்கப்பால் வீடு முற்றத்தை அடைந்ததும், தனது மிதிவண்டியை நிறுத்திவிட்டு அவளுடைய மிதிவண்டியையும் வாங்கி சுவரோரமாக நிறுத்தினான். சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தாள் ஒரு பெண். "வதனி ஆர் எண்டு தெரியுதா? அண்டைக்கு அன்னைபூவதி நிகழ்ச்சியில யூசீயில பேசினா... லெச்சிமி அக்கா இவதான் அம்மா, தான் வரேல்லயெண்டு கவலைப்பட்டா, அதான் காட்டுவமெண்டு கூட்டிக்கொணந்த நான்." அவன் தன்பாட்டில் பேசிக் கொண்டே "வாங்கக்கா வாங்க" என கையில் தாங்காத குறையாக அழைத்துச் சென்றான். "அவாட வீட்ட போக இருண்டு போச்சு காலமைக்குத் தான் போவா"

அவள் மகிழ்ச்சியாக அவளை அழைத்துச் சென்றாள். அவளுடைய தாய் உள்ளேயிருந்து வெளியே வந்தாள். பெரிய கல்வீடு மூன்று அறைகள் ஒரு பெரிய மால் மாலின் தொங்கலில் அடுக்களை. அதற்குமப்பால் கிணறும் பின்புறம் மலசலகூடமும் இருந்தது.

"தங்கச்சி இப்ப கம்பஸில படிக்கிறா லீவுக்கு வந்தாபோல நிக்கிறா நான்தான் கூட்டிக்கொண்டே விடவேணும். இன்னுமொரு தங்கச்சியும் வேம்படியில படிக்கிறா எங்கட சித்தி வீடு அங்கதான் நிண்டு படிக்கினம்." இதற்குள் அம்மா வந்து பக்கத்தில் அமர்ந்தார் கையில் கோப்பி கொண்டுவந்தார். "குடி பிள்ளை அண்டைக்கு கூட்டத்துக்கு வரஏலாமப்போச்சு. இஞ்ச வந்தவை எல்லாம் உன்ர கதைதான். நானும் ஒருக்கா பாத்துப் போடோணுமெண்டு ஆசையாத்தான் இருந்தன்" என்றார். அது அவள் விரும்பி செய்ததல்ல வேறு வழியில்லாமல் செய்தது. அதை எப்படி இவர்களிடம் சொல்ல முடியும் அந்த கவுரவத்தை ஏற்று அன்றைக்கு விருந்துண்டு, நல்ல படுக்கையில் படுத்து, காலையில் சுடச்சுட பாலருந்தியபின் புறப்பட்டாள். அதிகமாக ஒவ்வொருவருக்கும் நன்றி சொல்லிவிட்டு கிளம்பினாள். இன்னும் இருபத்துநான்கு மைல்கள் அவள் ஓட வேண்டியதூரம். அந்த அமைதியான நேரம் எட்டுமணிக்குள்ளாக நொச்சிக்குளம் காட்டில் மிதிவண்டியோடி ஈச்சங்குளத்தில் கரையேறினாள். அப்பால் குடிமனைகள் தான் என்றாலும் வனவிலங்குகளுக்கு சொந்தமான இடந்தான்.

சுமார் ஒன்பது மணிக்கெல்லாம் அவள் வீடுவந்து சேர்ந்தாள். சேர்ந்ததும் தன் மிதிவண்டியை தொட்டுக் கும்பிட்டாள். இவ்வளவு துன்பங்களுக்கு மத்தியிலும் அது எந்த இடைஞ்சலும் பண்ணாமல் கொண்டு வந்து சேர்த்திருந்தது. அவள் வந்து திண்ணையில் அப்பாடா என்று குந்தினாள். எல்லோரும் அவளைச்சுற்றி நின்றார்கள். ஆனால் யாருடைய முகத்திலும் சந்தோசமேயில்லை. எதையோ பறி கொடுத்தவர்கள்போல ... மலர்... மலரின் கண்களில் கண்ணீர் "என்னடி" என்று பதறினாள் லெச்சிமி.

"சிவா...சிவா, இயக்கத்துக்கு போயிட்டான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22

காடுகளைக்கடந்து அவள் வீட்டிற்குள் நுழையும் போதே அவளுடைய வாழ்க்கையை பேரிடி தாக்கியது. அவளுடைய கண்கள் லேசாக மூடிக்கொள்ள பழைய நாட்களிலொன்று அவள்முன் விரிந்தது. அப்போதும் சந்துரு காணாமல் போயிருந்தான். அழுது அழுது இவளுடைய நாட்கள் கரைந்து கொண்டிருந்தன.

அவள் வீட்டிற்குள் சென்று பரணிலிருந்த ஒரு பழைய கொப்பியை எடுத்தாள் அதனோடு கூடவே வந்த அந்த சித்திரக் கொப்பி. அவளுக்குள் ஒரு வேகத்தை கொடுத்தது. ஏற்கெனவே அவள் அதில் தனது பிள்ளை களான காந்தனையும் சுதனையும் வரைந்திருந்தாள் சந்துருவின் தோற்றம் முடிவடையாமல் கிடந்தது. இப்போது என்ன நினைத்தாளோ அதை மளமளவென்று வரைந்து முடித்தாள். கோடுகள்தான். அதற்கு வண்ணம் எதுவும் இல்லை அவளுடைய எண்ணற்ற கனவுகள் பொலவே அவையும் நின்றன. இப்போது அவளுடைய பென்சில் புதிய தாளை உருவி வரைய ஆரம்பித்தது. அதில் சிவா உட்கார்ந்தான்.

சிவா சிவத்தப்பொடியன். ஆறாவதாக அவள் கருவில் உருவானவன் பெரியளவில் அந்த கரு போற்றப் படவில்லை. ஏதோ ஒன்று என்கிற அளவிலேயே இருந்தது. வறுமையின் கோரப்பிடி வீட்டையே வளைத்துப் பிடித்திருந்தது. இருந்தாலும் அவளை தனது இச்சைக்காக நெருங்கும்போது அவன் கேட்பான். செல்லமாக அவளது வயிற்றைத் தடவி விட்டபடி,

"இது என்னவாக வர விருப்பம்." ஆணோ பெண்ணோ அவளுக்குள் எந்த எதிர்பார்ப்பும் இல்லை, என நினைத்துக் கேட்பான். அவள் அப்படி இருக்க மாட்டாள். அவளுக்குள் விளையாட்டாக சொல்வாள். அவளுடைய கணவன் என்னதான் வேலை வெட்டி இல்லாத சோம்பேறியாக இருந்தாலும் ஆள் படு சிவலை யாகவும் அழகனாகவும் இருக்கிறான். அதனால் அவளுடைய இரண்டு பெண்பிள்ளைகளும் அழகான சிவந்த குழந்தைகளாக பிறந்திருந்தனர். பின்னதாக பிறந்த ஆண்பிள்ளைகள் மூன்று பேரும் அவளுடைய நிறத்தைக் கொண்டு கறுவல்களாக இருந்தார்கள். அவளுக்கு அது பெருமைதான் அவளைப்போல படு உற்சாகமானவர்களாக இருந்தனர். அவனது சீண்டல் களுக்கு அவள் பதிலளிக்கும் போது பட்டென்று சொல்வாள் "ஒரு சிவத்த பெடியன், அல்லது கறுத்தப் பெட்டை."

காலம் கனிந்து அவன் பிறந்தபோது அவளுடைய வீட்டில் காப்படி அரிசிகூட இல்லை. ஆனால் சிவத்தப் பெடியன். மெலிந்த தோற்றம் அழகிய தமிழ்மகன். ஊரே பாராட்டும் நற்குணங்கள் அவனுக்கு. எல்லோர் வீட்டிலும் அவன் செல்லப்பிள்ளை. வந்திருந்த இடத்திலும் அவன் அப்படித்தான் ஒருநாள் பேரனிடம் சொன்னான்.

"அப்பு அம்மா எங்களை வரைஞ்சு வைச் சிருக்கிறா"

"எங்கடா பாப்பம்" என அவர் சொன்னதும் எல்லாவற்றையும் அள்ளிக் கொண்டு போய் அவர்முன் போட்டதும், அவனுடைய படம் மட்டும் காற்றில் அலைந்து மேலெழுந்து பறந்தது. அதைப்பிடிக்க முயன்று அவள் கீழே விழுந்து கதறியதும் இப்போது அவள் கண்முன்னே வந்தது. அவளுக்கு கண்ணில் நீர் சுரக்கவில்லை. கண்களை மூடிக்கொண்டு அப்படியே வாசற்கதவில் சாய்ந்தாள் வேறொன்றுமில்லை. "பிள்ளை மலர் எப்பன் தேத்தண்ணியூத்து" என்றாள். மலர் அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள். மற்றவர்களும் சோர்ந்து போய் உட்கார்ந்தனர். தேநீர் குடித்தபின் கரன்தான் கேட்டான்.

"போன காரியம் என்னவாப் போச்சு"

"வாறமாசம் பத்தாந் திகதி வரட்டாம் விபரங்களை பாத்திட்டு சொல்லலிறமாம்."

"இப்பதான் பதினாலு வயது முடிஞ்சு பதினைஞ்சு துவங்கி ரெண்டு மாசம். அதுக்குள்ள இவனுக்கு என்ன அரசியல் விளங்கி இயக்கத்துக்கு போனவன். ஆரோ நல்லா உபதேசம் பண்ணி மனதைக் கலைச்சு எடுத்திட்டாங்கள். அவ்வளவுதான் இப்ப எப்பிடியும் எங்களை நினைச்சு கவலைப்படத்தான் செய்வான். ஆரென்ன செய்யிறது. இது ஒட்டுமொத்தமா இந்த நாட்டுக்கு பிடிச்ச கேடு." லெச்சிமி தன மனதுக் குள்ளேயே வெந்து கொண்டிருந்தாள். என்றாலும் அடுத்து பெய்த மழையில் அவர்கள் போட்ட எள் முளைத்துவிட்டது. எனவே அவர்கள் தெருக்கரையில் ஒரு வேலியை காட்டுத்தடிகளை கொண்டு போட்டார் கள். முதல் எடுத்த வளவில் வாழைமரங்களுக்கு இடை யில் கொஞ்சம் நிலம் இருந்தது அதில் மிளகாய்க் கன்றுகளை வைக்க சுதன் முயன்றான். அவனது ஏயெல் படிப்பு திசை மாறிச் செல்வதை அவளால் ஏற்க முடிய வில்லை. ஆனாலும் சாப்பாட்டுக்காவது உழைக்க வேண்டுமே. ஆனால் அவளது மனம் போல பூவரசன் குளம் பாடசாலை மறுபடி இயங்க ஆரம்பித்தது. எள்விதைத்த காணி பிராதன வீதிக்கரையில் இருந்ததால், அங்கேயே ஒரு சிறு கொட்டிலைப் போட்டு தாயும் மகனுமாக புல் வெட்டி அதனால் வேய்ந்து அரைக்குந்து மண்சுவர்வைத்து பனை மட்டைகளால் வரிந்து கட்டிக் கொண்டு தனியாக குடி வந்தார்கள். வந்த மறுநாளே செண்பகாவும் தாரணியும் வந்தார்கள். அவர்களுக்கு முயல் இறைச்சிக்கறியுடன் சாப்பாடு கொடுத்தாள் லெச்சிமி. அது சுதன் வலைகட்டிப்பிடித்த முயல். இப்போதெல்லாம் இயக்கப்பெட்டையள் அவர்கள் வீட்டில் சாப்பிட்டார்கள். தேநீரும் குடித்தார்கள் அந்தளவுக்கு பழக்கம் வந்திருந்தது. லெச்சிமியின் மாமியும் தோழியுமான பாப்பக்கா இப்போது சுதனின் வேண்டுகோளை ஏற்று அவர்களுடன் தங்கினாள். என்றாலும் பகலில் தனது வீட்டையும் பார்த்துக் கொண்டாள். அயலில் பாக்கியமக்கா இருந்தார். பதினாறு பிள்ளைகளை பெற்ற மகராசி. அவரது வீட்டிலிருந்து பால்,தயிர் என்பன மாறிமாறி வந்தது.

அங்கிருந்த இன்னுமொரு குடும்பம் அப்போதே அது மாவீரர்குடும்பம். அவனுடைய பெயர்தான் கிருஷ்ணா இப்போது இது சிவபுரமல்ல கிருஷ்ணாநகர். அவனுடைய தங்கைகள் தாய் என இரண்டு வீடுகளில் இருந்தார்கள். ஒருவன் வவுனியாவுக்கு சென்று பொருட்களை கொண்டு வந்து விற்று வாழ்ந்தான். மற்றவனின் பிரதான தொழில் வேட்டை. அவர்களையும் சுதன் தனது நட்பு வட்டத்தில் வைத்திருந்ததால் தினமும் இறைச்சி கிடைத்தது, மட்டுமல்ல அவர்களுடன் விலங்கு களுக்கு பொறிவைக்கப்பழகிக் கொண்டான். இடியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவக்கே வேட்டைக்கு பயன்பட்டதால் அதன் அருகே கூட செல்வதை லெச்சிமி அனுமதிக்கவில்லை. சுதனை வேடிக்கை பார்க்கவும் விடவில்லை என்றாலும், அவன் ஈயத்தை உருக்கி பப்பாசிக்குழலில் விட்டு குண்டுகளாக உருட்டுவதை அவள் கண்டாள். தன் கண்ணெதிரிலேயே அவன் பேரனது வேட்டைக்குணங்களை கைப்பற்றி வைத்திருப்பதை ஆச்சரியத்துடனும் பயத்துடனும் கவனித்தாள்.

அன்று காலை பத்துமணியிருக்கும் தாரணியும் மிதிலாவும் வந்தார்கள். "அக்கா உடனை வெளிக் கிடுங்கோ அக்கா உங்கள கூட்டிக் கொண்டு வரட்டாம்." என்றாள். என்ன இப்பிடி திடீரெண்டு சொன்னா... முந்திமாதிரி கல்மடுவில எண்டாலும் பரவாயில்லை. மாதர்பணிக்கு மகிழங்குளம். அங்கதான் எங்கட மெயின் பேஸ் இருக்கு. கல்மடுவில ரெண்டுமூண்டு பேரி நிக்கினம். ஏரியாக்காறர். நாங்க அங்கதான் போகோணும் பிராந்தியப் பொறுப்பாளர் வந்திருக்கிறா உங்கள பாக்கவேணுமாம்"

"நங அவவோடதானே மாநாட்டுக்கு போன நான் பிறகு ஒரு திட்ட அறிக்கையும் வவுனியாவில இருக்கயுக்க செய்து குடுத்தநான். இப்ப என்னத்துக்கு...?

அப்போதுதான் வீட்டிற்குள் நுழைந்த மாமி, "நீ போகில் போ சமையல்தானே நான் செய்யிறன்." என்றாள். "என்னடா போகட்டே" என்று சுதனையும் ஒரு வார்த்தை கேட்டுவிட்டு அவள் அவர்களுடன்புறப்பட்டாள்.

ஏறக்குறைய பதினான்கு பதினாறு மைல் தூரம். மிதிவண்டிகளில் சிரித்துப் பேசியவாறே அவர்கள் சென்றார்கள் இடையில் ஒரு குளக்காடு, ஒரு பெருங்காடு இரண்டும் செம்மையான பிழக்கத்தில் இருந்தது. வாகனங்களாக உழவுயந்திரங்களும் உந்துருளிகளும் தான். அந்த மாவட்டத்துக்கென ஒரு பஜீரோ, ஒரு ஜீப் அவ்வளவுதான். அதைவிட வேறு வாகனங்கள் இல்லை. எப்போதாவது எல்லைப்புற தாக்குதல்கள் இருந்தால் துருப்புக்காவியாக ஒரு டரக் அவ்வளவுதான். ஆனால் பாதை மழைகாலத்தைத்தவிர மற்றக்காலங்களில் நன்றாகவே வைத்திருந்தார்கள்.

கதிரவேலர் பூவரசங்குளத்திலிருந்து திரும்பி மேற்காக இரண்டு மைல் போக மாதர்பணிக்க மகிழங் குளம் பாடசாலை வரும். அதன் பின்பாக ஆண் களுடைய முகாமும் அதன் முன்னே செல்லும் வேரக்கல் வீதியில் இறங்கி ஒரு கால் மைல் தூரம் செல்ல வரும் வளவு மண்வீடுகள்தான். கிராம வழக்கமாக மால் தனியாக, தாயறை கூடம் தனியாக, குசினி தனியாக என கட்டி முட்ட மண்சுவர் வைத்த வீடுதான் அந்த வீட்டில்தான் வவுனியா மாவட்ட மகளிர் அணி தங்கியிருந்து கடமையாற்றியது.

அவர்கள் போய் இறங்கிய போது மாலுக்குள் பாய்விரித்து மருந்து வகைகள் கொட்டப்பட்டிருந்தன. பிராந்தியப் பொறுப்பாளர் சுருதியும், பானுவும். கூடவே ஒரு அரசாங்க மருத்துவமாதும் தரையிலேயே இருந் தனர். மருந்துகளை தரம்பிரித்து அவை முக்கியமானவை முக்கியமற்றவை என பிரிக்கப்பட்டு போடப்பட்டுக் கொண்டிருந்தது. சாதாரணமாக நாங்கள் கடையில் வாங்கிப் பயன்படுத்தும் மருந்துகள் இப்போது வன்னியில் கிடைப்பதில்லை. அது பொருளாதாரத் தடையில் இருந்தது. இங்கே வீரியமான சாதாரண வைத்தியர்களே யோசித்துப்பயன்படுத்தும் மருந்து களும் இருந்தன. "சரிதான் யாரோ தானமாக கொடுத் திருக்கிறார்கள். அல்லது எங்கோ மருந்தகம் கொள்ளை யடிக்கப்பட்டிருக்கலாம். என்ற யோசனை லெச்சிமிக்கு வரவேயில்லை. காரணம் அவள் இயக்கத்தைப்பற்றி அறியாதவளாகவே இருந்தாள். அதன் செயற்பாடுகள் பற்றிய வியத்தகு அல்லது பயங்கர உண்மைகளை இனித்தான் அறியப்போகிறாள்.

"அது சரிங்க நான் திரும்பிப் போக வேணும். ஏன் கூப்பிட்டீங்க" என்றாள்

"ஆஙா....வாங்க வாங்க எப்பிடி இருக்கிறீங்க?" என்றாள் சுருதி.

"புரவாயில்லை" என்றபடி வந்த அமர்ந்தாள்.

"எங்க இதில சாதாரண மக்களின்ர அன்றாடத் தேவைகளுக்கான மருந்துகளை தேடிப்பிடிங்க பாப்பம்"

"நானா"என்றவள் ஒருதடவை எல்லாவற்றையும் சுலாவிப்பாத்தாள் பின் தடிமல் காச்சல் தொய்வு, காயம் வீக்கம், சொறி சிரங்கு, தீப்பட்டபுண் நாள்பட்டபுண், இவற்றுக்கான மருந்துகளை எடுத்தபின், அதிகமான ரத்தப்போக்கு வெள்ளைபடுதல் விட்டமின் மாத்திரை கள் ஒயின்மென்ருகள் என தள்ளினாள், பிறகு கொஞ்சம் யோசித்தாள். வந்திருந்த மருத்துவ மாது சிரித்தாள். பிறகு, "எப்பிடி நான் சொன்னன், அவா கனநாளா இந்த துறையில அலைஞ்சவா இப்பதான் வேலை நிரந்தரமாக் கினவங்கள் அதுக்குள்ள விட்டிட்டு வந்திட்டா." என்றாள்.

லெச்சிமி ஆச்சரியமாகப் பார்த்தாள். "இதை நீங்களே செய்திருக்கலாமே எதுக்கு என்னைக் கூப்பிட்ட நீங்கள்."

இப்ப சுருதி சொன்னாள். "இல்லயக்கா நாங்கள் இந்தப்பிரதேசத்தில ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் போடப்போறம். அதில நீங்கதான் நிக்க வேணும் மாதம் ஒரு உதவித் தொகை தருவம். அது சம்பளமா யெண்டில்ல. உங்களுக்கும் வீடுபிள்ளையள் இருக்கினம் தானே லெச்சிமி மௌனமானாள் அவளுக்கொரு வேலை தேவைதான் ஆனா "இவ்வளவு தூரம்...அதுக்காக"

அவள் சரியெனத் தலையசைத்தாள் ஆனால் ஆரம்பத்தில் தனக்கு உதவியாக ஒரு வாரமாவது அந்த மருத்துவ மாது நிற்க வேண்டும் என்றாள். மற்றப்படி அவள் வீட்டில் சொல்லிவிட்டு வந்து வேலையை பொறுப்பெடுப்பதாக சொன்னாள்.

சொன்னபடி அவள் வேலைக்கு அடுத்த வாரமே வந்தாள். பாலமோட்டைச் சந்தியிலிருந்த ஒரு பொதுக் கட்டடம் மருத்துவ நிலையமானது. பொதுமக்களே வந்து கட்டடத்தையும் சுற்றாடலையும் சுத்தம் செய்து வெள்ளையடித்து ஒழுங்கு செய்து கொடுத்தனர். முதல் நாளில் சில சொறிசிரங்கு காய்ச்சல் போன்ற நோயாளர் களே வந்தனர். மூன்றாவது நாள் அந்த ஊரின் தபாலதிபர் வீட்டில் அவரது மருமகளுக்கு பிரசவவலி கண்டு விட்டது. ஓடி வந்தார்கள். அருகிலேயே இருந்ததால் அவள் போய்ப்பார்த்தாள். அது முதலாவது பிரசவம். அவள் திரும்ப ஓடிச்சென்று மருந்தகத்தை மூடிவிட்டு ஓடி வந்தாள். தேவையான பொருட்களை கொண்டு வந்தாள். என்றாலும், இரவு பதினொரு மணிக்கே குழந்தை பிறந்தது. நல்ல ஆரோக்கியமாக தாயும் சேயும் இருந்தனர். அவளை அந்த ஊர் அணைத்துக் கொண்டது.


(தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஜீவநதி வெளியீடுகள்




இ.சு.முரளிதரன்
கட்டுரைகள்
500.00




தாட்சாயணி
நாவல்
800.00




ந.இரவீந்திரன்
கட:டுரைகள்
400.00




முல்லைக்கோணேஸ்
சிறுகுதைகள்
750.00




குழந்தை ம.சண்முகலிங்கம்
நாடகம்
450.00




குழந்தை ம.சண்முகலிங்கம்
நாடகம்
400.00




குழந்தை ம.சண்முகலிங்கம்
நாடகம்
300.00




என் செல்வராஜா
கட்டுரை
400.00





க.பரணீதரன்
நேர்காணல்கள்
1000.00




க.பரணீதரன்
நேர்காணல்கள்
500.00




க.பரணீதரன்
நேர்காணல்கள்
750.00



க.பரணீதரன்
நேர்காணல்கள்
250.00

இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாமணி பரணீதரன் அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org